[illegible]

പുസ്തകം 17 ലക്കം 12

3L
R65on211, NIIVD
N27.17.12
186776

பாலால்—முதல்தர வைர வியாபாரிகள்.

Regd. No. M. 916.

216, சைனாபஜார் ரோட், சென்னை.

ஸ்ரீ:

# வேதாந்த தீபிகை.

பிரபவ ௵ - புரட்டாசிமீ.

ஸம்புடம் 17.] [ஸஞ்சிகை 12

பத்ராதிபர்:—ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
14 OCT 1927
MADRAS

விஷய ஸூசிகை.


1. திருமடல் விவரணம்:—ஸ்ரீ. உப. வித்வான் வா. ஸ்வா. ஸ்ரீநிவாஸாசார்யர், ... 367

2. நவராத்ரம்:—ஸ்ரீ உப. க்ருஷ்ணமாசார்யர் ... 375

3 கடிதங்கள்:— ... 379

4. பத்ராதிபரின் குறிப்புகள். ... 388

5 ஸ்ரீ ஆராவமுதாழ்வான் வைபவம்:—ஸ்ரீ. உப. இளையவில்லி ஸ்ரீநிவாஸாசார்யர் ... 1

6. ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம்:—ஸ்ரீ. வாஸுதேவாசார்யர் ... 81

7. ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்:— ... 81


*SEPTEMBER, 1927.*

வருஷச் சந்தா ரூ. 3—0—0.] ஸஞ்சிகை 1-க்கு அணா 6.

## ஸ்ரீ வை. ஸி. ஸபை சந்தா வரவு

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ உப ஸ்ரீநிவாஸ வரதாசாரியார், திருநெல்வேலி | 3 | 0 | 0 |
| ,, ஏ. பி. ஸ்ரீநிவாஸாசாரியார், மவுண்ட்ரோட் | 3 | 0 | 0 |
| ,, டி. ரகுநாதஸ்வாமி அய்யங்கார், ஸ்ரீரங்கம் | 3 | 0 | 0 |
| ,, பார்த்தஸாரதி தாதாசாரியார், ஸ்ரீரங்கம் | 3 | 0 | 0 |
| ,, எஸ். ராகவய்யங்கார், திருவல்லிக்கேணி | 1 | 0 | 0 |
| ,, ராவ்ஸாஹிப் டி. ராமாநுஜய்யங்கார், திருவல்லிக்கேணி | 1 | 8 | 0 |
| ,, குன்னத்தூர் அய்யம்பாளையம் கே. என். ஸ்ரீநிவாஸாசாரியார், திருவல்லிக்கேணி | 2 | 0 | 0 |

ஸ்ரீ:

## ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை, மதராஸ்

போஷகர்.

ராவ் ஸாஹிப் ஸ்ரீ உப. டி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், டில்லி.

ஸபாத்யக்ஷர்.

கனம் ஜஸ்டிஸ் ஸ்ரீ. உப. வ. வே. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், சென்னை.

காரியதர்சிகள்.

ஸ்ரீ. உப. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார், பி. ஏ. பி. எல், மயிலாப்பூர்.

,, எஸ். லக்ஷ்மீநரஸிம்மாசார்யர், திருவல்லிக்கேணி.

ஸ்ரீ:

## வேதாந்த தீபிகை

[ ஹிந்து மத விஷயமான ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்ரிகை ]

பத்ரிகை ஸம்பந்தங்களான கடிதங்கள் வ்யாஸங்கள் முதலியவை, 'ஸ்ரீ வாஸுதேவாசார்யர், ஸம்பாதகர், வேதாந்த தீபிகை, மாம்பலம், மதராஸ்' என்னும் விலாஸத்திற்கும்,

பத்ரிகையின் சந்தா, 'ஸ்ரீ. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார், ஹைகோர்ட் வக்கீல், 5 வடவண்டை மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்' என்னும் விலாஸத்திற்கும்,

மற்றை கடிதங்களெல்லாம், 'ஸ்ரீ. எஸ். லக்ஷ்மீநரஸிம்மாசார்யர், 25, தாண்டவராய முதலித் தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்' என்னும் விலாஸத்திற்கும் அனுப்பப்பட வேண்டும்.

ஸ்ரீ:

# வேதாந்த தீபிகை.

வேதாந்த விசாரம் செய்யும்

ஓர் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

1926—27.

அக்ஷய—ப்ரபவ

பத்ராதிபர்:—ஸ்ரீ. வாஸுதேவாசார்யர் பி. ஏ., எல்.டி.

சென்னை:

சுதேசமித்திரன் பிராஞ்சு பிரஸ்.

1927.

186776.

ஸ்ரீ:

# விஷய ஸூசிகை.

பக்கம்.


அந்த்ய காலஸ்ம்ருதி ... ... 224

உபாகர்ம விசாரம் ... ... 356

கடிதங்கள்.—35, (103—108) (137—138,) (163—166), 202, 230, 355, 43, 93

கண்ணன் கழலிணைப் பதிகம் ... ... 20, 85

கம்பர் ஸ்ரீ வை. சமயத்துக்குச் செய்த பேருதவிகள்:— ... 248, 269, 316

சமயம் ... ... 145, 191, 218

தர்மாதர்ம நிர்ணயம் ... ... 113

தமிழ்ப் பஞ்சாங்க ஆராய்ச்சி ... ... 291

ந்யாஸரீதி ... ... 345

நமது ஆர்ய மதத்தின் மஹிமை ... ... 3

நமது லௌகீக ஸுஹ்ருத்துக்கள் ... ... 77

ப்ரஹ்ம மீமாம்ஸா ப்ரமேய ஸங்க்ரஹம் ... ... 43, 93

ப்ரபந்நனின் உத்தராவஸ்தை ... ... 57

பகவானும் கோபமும் ... ... 51

பகவத் ராமாநுஜ மதத்தின் ஸர்வலோகஹிதத்வம் ... 301, 333

பத்ராதிபரின் குறிப்புகள்:—

கும்பயோகம் ... ... 266

ச்ரத்தாநந்தஸ்வாமி ... 110

சீனதேசத்து யுத்தம் ... ... 174

தர்மசொத்துக்களின் பரிபாலநம் ... ... 38

தீபிகையைப்பற்றின ஒரு விஞ்ஜாபநம் ... ... 37

நமது ஆசார சீர்திருத்தங்கள் ... ... 231

நிஷ்டாத்ரய விஷயமான ஒரு ப்ரார்த்தனை ... ... 139

ப்ராணி ஹிம்ஸை ... ... 40

பகவத் கைங்கர்ய விஷயமாக ஒரு நிரூபணம் ... 73

பஞ்சாங்க ஆராய்ச்சி ... ... 300

பம்பாயில் திவ்ய தேச ப்ரதிஷ்டை ... ... 297

மடாதிபதிகளின் மர்யாதை 204, 236





மடாதிபதிகளின் தர்மம் ... ... 362

மத விஷயமான ஆக்ரஹம் ... ... 171

மந்த்ரிகளின் நியமநம் ... ... 75, 109

யாஜுஷ உபாகர்மம் ... ... 332

வார்ஷிக மஹா ஸங்கம் ... ... 112, 207, 235, 260

ஸ்ரீ அழகிய சிங்கர் ... ... 331

ஸ்ரீ அழகிய சிங்கருடைய உத்தாந மஹோத்ஸவம் ... 394

ஸ்ரீ கருணாகர பகவத் பக்த ஸமாஜம் ... ... 261

ஸ்ரீரங்கம் லாடெரி ... ... 298, 365

ஸ்ரீமான் எம். ஒ. பார்த்தஸாரதி ஐயங்கார் ... ... 111

ஸ்ரீவானமாமலை மடத்து உபந்யாஸங்கள் ... ... 334

ஸ்த்ரீகளின் ஸ்வாதந்த்ர்யம் ... ... 142

ஹிந்து மதச் சீர்திருத்தம் ... ... 383

புஸ்தக விமர்சம்:—

ஆசார்ய சர்யாம்ருதம் ... ... 72

ஜகசாஸ்த்ரீய மீமாம்ஸை ... ... 167

சிறிய திருமடல் ... ... 202

சேஷாவதாரச் சிறப்பு ... ... 230

தத்வத்ரய நிரூபணம் ... ... 259

திருமடல் விவரணம் ... ... 367

திருவாய்மொழி ... ... 71

நவராத்ரம் ... ... 375

வ்யாஸஸித்தாந்த மார்த்தாண்டம் ... ... 100

ஸ்ரீபாஷ்யம்—சுருதப்ரகாசிகை, தமிழ்மொழி பெயர்ப்பு ... 296

ஸ்ரீவைபவ ஸங்க்ரஹம் ... ... 203

ஸ்ரீமத் வேதாந்த தேசிகர் ... ... 169

ஸ்ரீரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் வைபவம் ... 71

மடாதிபதிகளின் தர்மம் ... ... 353

மோக்ஷ தர்மமும் ஜகதுபகாரமும் ... ... 177

மோக்ஷத்திலும் பாரதந்த்ர்யமே ... ... 184

வர்ணாச்ரம தர்மம் ... ... 308

வால்மீகியும் கம்பரும் ... ... 150

விசேஷ ஸமாசாரங்கள்:—


சோசிக்கத் தகுந்த ஸம்பவங்கள் ... ... 34

மயிலாப்பூர் ஸம்ஸ்க்ருத பாடசாலை ... ... 32

வேதாந்த உபந்யாஸங்கள் ... ... 33

ஸம்ஸ்க்ருத வித்யையின் பெருமை ... ... 30

ஸ்ரீகீதாபாஷ்யத்தில் ஒரு விசாரம் ... ... 11, 132, 196

ஸ்ரீபாஷ்யகாரரின் நியமநம் ... ... 15

ஸ்ரீவை. ஸி. ஸபையைப்பற்றின ஒரு விஞ்ஜாபநம் ... 1

ஸ்ரீபாஞ்சராத்ரம் ... ... 209, 327

ஸ்ரீவை. ஸி. ஸபையின் வார்ஷிக மஹா ஸங்கம் ... 254

ஸ்ரீ அழகிய சிங்கர் ஸங்கத்துக்கு அருளிய ஸ்ரீமுகம் ... 256

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த மஹிமை ... 277

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தின் பரம தாத்பர்யம் ... 123

ஸ்ரீசௌரிராஜன் வைபவ விசேஷம் ... ... 327

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயஸ்தரும் அவர் கொள்கைகளும்... 339


ஸ்ரீ. வை. ஸி. ஸபையின் க்ருதஜ்ஞதை ... 367

ஸ்த்ரீகளின் ஆந்ஹிக தர்மங்கள் ... ... 151

ஸுக்ரீவ ஸக்யம் ... ... 26, 61

ஜடாயுஸ்ஸுக்கு மோக்ஷம் ... ... 128

ஜரத்காருவின் உபாக்யாநம் ... ... 121



ஸ்ரீ ஆராவமுதாழ்வான் (ஸ்ரீ சாரங்கபாணி)



ஸ்ரீ கோமளவல்லித்தாயார்.

திருக்குடந்தை.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 17.] ப்ரபவஹு, புரட்டாசிமீ [ஸஞ்சிகை 12

[illegible]

[illegible]

['ஸ்ரீ பாகவதம். 1-9-23]

ஸ்ரீ:

## திருமடல் விவரணம்.

(ஸ்ரீ. உப. வித்வாந் வா. ஸள. ஸ்ரீநிவாஸாசார்யர், மன்னார்குடி.)

ஜ்ஞாநாநந்த ஸ்வரூபனாய், அமலனாய், அணுவாய் இருக்கிற இச்சேதநன் அநாதி கர்மவசத்தாலே, 'பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கு மழுக் குடம்பும்' உடையவனா யிருக்கச்செய்தே ஈச்வரஸௌஹார்த்தமடியாக யாத்ருச்சிக ஸுக்ருதம் பகவத் கடாக்ஷம் முதலானவைகளாலே ஸதாசார்ய கடாக்ஷம் பெற்று, தஜ்ஜிஹ்வா ஸிம்ஹாஸநத்திலும் ஹ்ருதய கமலத்திலும் எழுந்தருளி யிருக்கிற பகவானாலே தத்வத்ரய விவேகம் பெற்றும், த்ரிகுண மருகாந்தாரத்திலே அநுசிதவிஷய ம்ருகத்ருஷ்ணாஸ்வாத லுப்தனாய், 'வேற்கணார் கலவியே கருதி,' 'நாநாவித நகரம்புகும் பாவம் செய்து' பிறகு, "[illegible]" என்று நிர்வேத மடைந்தும் இங்கு நள ந்ருக நஹுஷாதிகள் பட்ட பாட்டையும் ப்ரஹ்ம ருத்ரேந்த்ராதிகள் மது கைடப ஹிரண்யகசிபு முதலானவர்கள் கையிலே பட்ட பாட்டையும் நினைத்து, அவர்கள் பதங்களும் நாய்க் குடை வாழை ஸ்தம்பம் முதலானவைகள் போல்

அஸாரமாயும் சீக்ரத்தில் அழியும் தன்மையை உடையதாயு மிருப்பதை நினைத்து வைராக்ய நிஷ்டனாய் நரக யாதனை முதலானவைகளைக் கேட்டுப் பீதனாய், தன் அதிகாராநுகுணமான ஓர் உபாயத்தில் இழிந்து, அந்திம சரீராவஸாந காலத்தில் ஹ்ருத்புண்டரீக மத்யத்தி லுள்ள ப்ரஹ்ம நாடியில் ப்ரவேசித்து, ப்ரஹ்ம ரந்த்ர மென்கிற தலைவாசலைத் திறந்து கொண்டு, அர்ச்சிராதி தேவதைகள் வழிநடத்த நடந்து, விரஜாநதியைக் கடந்து, சுத்த ஸத்வ மயமான சரீரத்தையும் ப்ரம்மாலங்காரத்தையும் அடைந்து, பரமயோகி வாங்மநஸா பரிச்சேத்யமான திருநாட்டுக் குள்ளே அம்ருத ஸரஸ்ஸைக் கிட்டி, ஸோமஸவநம் என்கிற அரச மரத்தை அடைந்து, ப்ரஹ்மகந்த ப்ரஹ்மரஸ ப்ரஹ்ம யசஸ்ஸுக்கள் வந்து ப்ரவேசிக்க, திருமாமணிமண்டப மடைந்து, அங்கு "தயா ஸஹாஸீநௌ உதஜ்ஞஹொமிதி" என்கிறபடியே திருவநந்தாழ்வான் மேலே பிராட்டியும் தானுமாய் வீற்றிருக்கு மிருப்பைக் கண்டு, "அடியார்கள் குழாங்களையுடன்கூடுவ தென்று கொலோ" என்று ஆசைப்பட்ட நித்யஸூரி ப்ருந்தங்களை ஸேவித்து, வானுளார் பெருமானான எம்பெருமானை, 'தேனும் பாலுங் கன்னலு' மாகிக் கலந்து, ஆபாதசூடம் திவ்யமங்கள விக்ரஹத்தில் ஈடுபட்டு, 'மீளா அடிமைப்பணி செய்யப் புகுந்தேன்' என்று விண்ணப்பித்து, சேஷிபோம்வழி எல்லாங் கூடச் சென்று ஸாமகாநம் பண்ணி, ஸர்வ தேச ஸர்வ கால ஸர்வாவஸ்தோசித ஸர்வ சேஷவ்ருத்தியையும் பண்ணி, நித்யாநந்த பரிதனாய் இருப்பன்.

இப்படி தத்வ ஹித புருஷார்த்தங்களை விசதமாய்த் தெரிந்து அநுபவிக்கப் புகுகிற அதிகாரிக்குப் பரதத்வமான பரமபுருஷனை அநுபவிக்கப் புகுங்கால் பெண்ணும் தசை தனக்கு வந்தேறி யாயிற்று. ப்ரணவத்தி லுள்ள அநந்யார்ஹ சேஷத்வத்தை அநுஸந்திக்கவே, பதிபத்நீ பாவம் த்ருடபவிக்கும். "தஸ்யைஷாம் வயொவரூதாம் தஸ்யாஷி ஜநயக்ஷணாம்" என்கிறபடியே பிணி மூப் பிறப்புக்க ளின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மையராய் திருவும் பருவமும் குலனும் குணனும் அன்பும் முதலியவற்றால் தம்முள் ஒப்புமை உடையராய தலைமகனும் தலைமகளும் பிறர் கொடுப்பவும் அடுப்பவுமின்றிப் பால்வகையால் தாமே எதிர்ப்பட்டுச் சேர்ந்து வருவது என்னும் மணம் தமிழர் கூறும் காந்தர்வ மணம். இங்குக் கூறிய தலைமகன் தலைமகள் யாவரெனின், பரதத்வமான பரம புருஷனும் அவரதத்வமான ஜீவனும். இஜ்ஜீவன் பரம புருஷனைக்கண்டு முக்தி அடைந்து இன்பம் நுகர்தலைச் சிற்றின்பத்துக் குரிய துறைகளுள் அடக்கிக் கூறுவர் ஆழ்வார்கள்.

நம்மாழ்வார் நாயிகாவஸ்தையை அடைந்து 'மாசறு சோதி'யில்



"நாணுநிறையுங்கவர்ந்தென்னைநன்னெஞ்சங்கூவிக்கொண்டு
சேணுயர்வானத்திருக்கும்தேவபிரான்தன்னை
ஆணையென்தோழியுலகுதோறலர்தூற்றியாம்
கோணைகள்செய்து குதிரியாய்மடலூர்துமே."

"யாமடலூர்ந்து மெம்மாழியங்கைப் பிரானுடைத்
தூமடல்தண்ணந்துழாய்மலர்கொண்டுசூடுவோம்
யாமடமின்றித்தெருவுதோறயல்தையலார்
நாமடங்காப்பழிதூற்றிநாடுமிரைக்கவே."

என்றும் மடலூர்தலை அருளிச் செய்த துண்டு. "ஆலிநாடன் அமுதமுக்கி அடையார் சீயம் கொங்கு மலர்க் குழலியர்வேள்," "மானவேற் பரகாலன் கலிகன்றி" என்ற பெரும் புகழ் படைத்த பரகால நாயகியும் சிறிய திருமடல் பெரிய திருமடல் என்னும் ப்ரபந்தங்களை விஸ்தாரமாக அருளிச் செய்தார். இவர்களை அடியொத்திப் போந்த திவ்யகவி பிள்ளைப் பெருமாளையங்காரும்,

'ஊர்வேன் மடலை ஒழிவேன் மடநாணம்
சேர்வேன் கரியதிருமாலைப்—பாரறிய
அம்பொன்செய் கோயிலரங்க னணிநாங்கூர்ச்
செம்பொன்செய் கோயிலினிற் சென்று.'

என்று பெண்க ளெடுக்கும் மடலையே தம் ப்ரபந்தத்தில் கூறியுள்ளார்.

சிறிய திருமடலுக்கும் பெரிய திருமடலுக்கும் வாசி என்னென்னில்: கட்டு விச்சி கூற்று (ஆசார்யோபதேசம்) சிறியதிருமடலில் அதிகம். புருஷார்த்த நிர்ணயம்சிறிய திருமடலில் மூன்றாயும் பெரிய திருமடலில் நான்காயும் அருளிச் செய்த போதிலும் 'கண்ணனுக்கே யாமது காமம்' என்று அமுதனார் அருளிச் செய்தபடி மேலான பரம புருஷாநுபவத்தையும் காமத்தினுள்ளடக்கிக் கூறுவதில் வாசி இல்லை. இப் பரம புருஷாநுபவமும் இங்குள்ள அர்ச்சாவதாரத்திலே உள்ள அநுபவம். பர வ்யூஹ விபவ அந்தர்யாமி அர்ச்சாவதாரங்களில் ஆழ்வார்கள் அநுபவத்துக்கு வாசியே இல்லை. ஆனால் இங்கு நாமும் அப்படி அநுபவிக்கலாமே என்றால், முமுக்ஷுதசையில் வரும் கைங்கர்யம் ஸுக்ருத விசேஷோபாதிகமாய் த்வந்த்வதிதிக்ஷா யுக்தமாய் நித்ராதிகளாலே அந்தரிதமாய் அவச்சிந்ந ரஸமாயிருக்கும். முக்த தசையில் வரும் கைங்கர்யம் ஸ்வத:ப்ராப்தமாய் த்வந்த்வ துக்கரஹிதமாய் நிரந்தரமாய் அநவச்சிந்ந ரஸமா யிருக்கும். ஆகையால் நமக்கு மாத்ரம் இங்குள்ள அநுபவத்துக்கு அங்குள்ள அநுபவம் விசேஷமாகிறது.

மயர்வற மதிநல மருளப்பெற்ற ஆழ்வார்களுக்கோ என்றால் இங்கு மங்கும் பகவத் நுபவம் துல்யமே. ஆனால் மடலென்கிற ஸாஹஸ ப்ரவ்ருத்தியிலே இறங்குவான் என் என்னில்: மடலெடுத்து எதிர்த்து அத்தலையை அழிக்கிறாரல்லர். "ஆவயோரயமஸௌ ஸ்ருதி ஸம்ப்ராப்தாஸீ விஷாதவாந் | ஸாமஸம் யோஷயிஷ்யாமி வக்த்ரம் யாசந் வஸம் ததா: ||" என்று வில்லைக் காட்டி வேலையை அச்சுறுத்தினாற்போலே அச்சுறுத்தி முகங் காட்டுவித்துக் கொள்ளுகிறவர் பழக்கத்தாலே வழியல்லா வழியே யாகிலும் பெறவேண்டு மென்கிற இதோர் அநுபவம். ஆனால் பெண் பேச்சாய்ப் பேசுவான் என் என்னில்: "த்யாஸ்யோஷ்யவயோ வரஸ்தாம் த்யஸ்யாஹி ஜநமுக்ஷிணாம்!" என்கிறபடி ஜ்ஞாநாநந்தங்களில் ஒத்திருத்தலாலும் அநந்யார்ஹ சேஷத்வாதிகளாலும் ஸம்ச்லேஷத்தில் தரித்தும் விச்லேஷத்தில் தரிக்காததாலும் ஜ்ஞாநம் விசதமானால் பின் பிராட்டிமாரோடு ஒக்கு மாகையாலும் நாயகி பேச்சாலே பேசுகிறார். நிஷேதித்த காமமாகக் கூறலாமோ என்றால் "ந்ருஷ்யத்யாவிததவ்ய:" என்று வேதாந்த விஹிதையான பக்தியையே இங்கு காமமாகச் சொல்லுகிறது. மடலெடுக்கையாவது— தன்னை விலக்குகிற தோழிமார்களைப் பார்த்து 'அவனைப் பெற்றல்லது தரியேன்' என்று கூறுவது.

இப்ரபந்தங்களிலுள்ள ப்ரமேயங்களாவன :

'புருஷார்த்தங்கள் மூன்று. அவை தர்மம், அர்த்தம், காமம். இவை மூன்றிலும் காமத்தை அடைந்தவர் தர்மார்த்தங்களை அடைந்தவரே யாவார். இம்மூன்றைத் தவிர வேறு மோக்ஷம் என்று ஒரு புருஷார்த்தம் உண்டென்று கூறினாலும் கைப்புகுந்த அர்ச்சாவதார அநுபவத்தை விட்டுத் துர்லபமான மோக்ஷத்தைப் பற்றுவதா; தோழிகாள்! நறையூர் (நாச்சியார் கோவில்) நம்பிக்கு ஒவ்வ ஒப்பித்திருந்தேன். அவ்வளவில் செங்கண்மால் செழுந்தெருவே குடக் கூத்தாடிச் சென்றனன். தோழிமார் பெருந்திரளாய் என்னையுங் கூட்டிச் சென்றனர். சிலர் என் ஸ்வபாவத்துக்குத் தகாதென்று தடுத்தனர்; கேளாமே சென்றேன்; அறிவு மாமை நாண் மடம் அச்சம் பயிர்ப்பு எல்லாம் இழந்தேன்; மயங்கினேன்; இதைக் கண்ட எம் அன்னைமார் மாயன் தமரடி நீறு பூசினவளவிலும் நோய் தீராமையால் குறி பார்க்கவேண்டு மென்றார்கள். குறி சொல்லும் கட்டுவிச்சியும் தற்செயலாய் வந்தாள்; பார்த்தாள். சுளகும் நெல்லும் கொண்டுவரச் செய்தாள். பதறு தூற்றி நெற்குறி பார்த்தாள். 'தைவக்ஷ்யா ஷோடம்பவாஸா ஜ்ஞாதா தைவம் வியம்நஸம்' என்ற ரீதியில் மெய் சிலிர்த்து அப்ராக்ருதிங்கதையானாள். பிறகு தெளிந்து கூறத் தொடங்கினாள். 'நவநீதசோரன், காளியமர்த்தனன், தாசரதி, ந்ருஸிம்ஹன், ப்ரஹ்லாத வரதன், த்ரிவிக்ரமன், துளஸீமாலாலங்க்ருதன், கஜேந்த்ரவரதன், நாமஸஹஸ்ரவாந் அவனாலே வந்த நோயிது.



புரோடாசத்தை நாய் தீண்டிற்றில்லை. இந்நோய்க்கு மருந்து மவனே' என்று இடத்துத் தாயும் தெளிந்து 'எம்பெருமானோடு ஸம்பந்தமுள்ள இவளுக்கு நான் தளும்ப வேண்டுமோ?' என்று நிவ்ருத்தையானாள். நானும் அவனைக் கண்டதுவே காரணமாப் பெண்ணுடை உடுத்தித் திரிவேன். 'என் நெஞ்சமே நல்லை நல்லை! நீயே மணிவண்ணன்பால் சென்று திருத்துழாய்த் தாரைத் தாரானோ? தருவானோ? என்றிரண்டி லொன்றைக் கேட்டு வா' என்று விடுத்தேன். குடக்கூத்தாடியின் பின்னே போய் என்னைத் தானிருக்கு மிடம் என்று எண்ணாதே மறந்தது. என் நெஞ்சும் எனக்குதவாதபடி மகா பாபத்தைப் பண்ணினேன். ஊரவர் அலர் தூற்றக் குறையில்லை. என் கண்களோ உறங்கா. ஆவியோ உருகும். வாயோ பிதற்றும். மடலூர்ந்தல்லது தரியேன். நாணினையும் நீக்கி ஊராராலும் இகழப்படுவை என்றால் காணவேணு மென்னு மாசை கரைபுரண்டது.

ஆறியிருக்க மாட்டுகிற்றிலேன். மட லெடுப்பேன். மடலெடுத்தால் கொண்டாடுவார்கள். வாஸவதத்தை சிறையி லடைபட்ட வத்ஸராஜனுடைய தோளுந் தோள்மாலையுமான அழகை ஆசைப்பட்டுக் கூடச் செல்லவில்லையா? சக்ரவர்த்தியினுடைய ஆஜ்ஞையால் திருமகள் கானகஞ் சென்ற பொழுது, "யாநஸக்யா புரா த்ரஷ்டும் பூதைராகாஸகைரபி | தாமத்ய ஸீதாம் பஸ்யந்தி ராஜமார்கதா ஜநா:" என்கிறபடி நகரத்து ஜநங்கள் யாவராலும், ஆகாச ஸஞ்சாரிகளான தேவதைகளாலும் பார்க்க முடியாத ஸீதாதேவியானவள், 'ஸர்வ ஜநங்களும் காணும்படி வீதியில் பஞ்சடியால் நடந்து செல்கின்றனளே' என்றெண்ணி, 'நீ கானகம் செல்லில் நாங்கள் தரியோம், பின்னே தொடர்ந்து வருவோம்' என்று சொல்லுவாராய் நின்றுவிட, நாலா பக்கங்களிலும் பேய்த்தேர் (ம்ருகத்ருஷ்ணா கானல் நீர்) வெளிப்பட்டு மூங்கி லுடைந்து நெருப்புப்பற்றி, சுழல்காற்று வீச, பேயும் திரியமாட்டாமையால் கால் பாவாமல் வருந்தி அலைகின்ற கானகத்தில் கடு வெயிலால் வறுத்தெடுத்து வித்தியது போன்ற கடும் பருக்கைக் கற்களிலே வைதேஹி என்று சொல்லப்படுபவளாய் அன்னம் போன்ற நடையை உடையளான ஜநகராஜன் திருமகள் செல்லவில்லையா? வேகவதி என்னும் கன்னி ஸ்வயம்வரித்த காலத்தில் தன் தமையன் ஒட்டேனென்று விலக்கவும் தான் அவனை அகட்டிவிட்டு நடந்த யுத்தத்தில் அந்தப் பர்த்தாவின் தோளை ஆசைப்பட்டுச் செல்லவில்லையா? நாகலோகத்து அரசன் மகளாகிய உலூபியானவள் கங்கையில் நீராடச் சென்ற அர்ஜுநனைத் தன் உலகத்துக்கு அழைத்துச் செல்லவில்லையா? உஷை சித்ரலேகை மூலமாய் அநிருத்தனைக் கட்டிலோடு தூக்கிவரச் சொல்லவில்லையா? பார்வதி, தன் பொன்போன்ற வடிவம் வருந்தவும் இந்த்ரியங்களைந்தும் வருந்தும்படிக்கும் தன்னுடைய மயிர் முடியை ஜடாமண்டலமாக்கித் தரித்துக்கொண்டும் அதி க்ரூரமான தபஸ்

ளைப் பண்ணி ஸம்ஹார கர்த்தாவாய் அதற்கேற்ப ஆயிரம் தோள்களையும் கொண்டு அஷ்ட திக்குக்களிலும் அக்நி ஜ்வாலை வீசச் சுழன்று கூத்தாட, அதைக் கண்டு ஸமஸ்த தேவரும் ஸமஸ்த லோகங்களும் குலாசலங்களும் காற்றும் நக்ஷத்ரங்களும் நவக்ரஹங்களும் தன்னுடன் கூடச் சுழன்று வர, தான் சுற்றி நர்த்தநம் செய்கின்றவனைக் கொலைச் சொல்லுக்கு விஷயமான மூன்று இலைகளையுடைய சூலாயுதத்தை உடையவனைப் பஸ்ம தாரியான ருத்ரனைத் தானே கிட்டி ஸம்ச்லேஷிக்க வில்லையோ? இப்பரப்புக்க ளெல்லாம் என்னால் பேசி முடியாது. பன்னிப் பேசினால் பாரத மாகும். வ்யாஸ பராசராதிகளே பேசவேணும். நான் உசித விஷயத்தில் ஆசைகொண்டதை நானே சொல்லக் கேளுங்கள். இருக்கிலங்கு திருமொழிவா யெண்டோளீசற் கெழில்மாட மெழுபதுசெய் துலகமாண்ட கோச்செங்கணான் தொழுத திருநறையூர் மணிமாடத்தில் பெரியபிராட்டியாரோடும் திருவாபரணச் சேர்த்தியழகோடும் செங்கண்மாலைக் கண்களிப்ப நோக்கினேன். நாண் மட மச்சம் பயிர்ப்பு முதலியவை நீங்கி வருந்தரை யாயினேன். வாழச் சென்று ஸர்வஸ்வத்தையும் கொள்ளை கொடுப்பாரைப் போலே ஸர்வத்தையு மிழந்தேன். நறையூர் நம்பியினுடைய ப்ரத்யேக அவயவ ஸௌந்தர்ய தரங்கங்கள் வீச வீச அலைவுற்றேன். பாவியேன், பற்றுக்கோடாக மடலெடுத்து 'மடலோ மடல் மடலோமடல்' என்று நிர்லஜ்ஜையாய்ப் புறப்பட்டேன். நம்பியும் கைவிட்டான். மடலல்லது வேறு துணை காணேன்; நாட்டை வாழ்வித்து ரத்நாகர மென்று பேர்பெற்ற மஹாஸமுத்ரம் ராஜ த்ரோஹிகளுக்கு இடம் கொடாமல் அதட்டுவாரைப் போலே என்னையே அதட்டத் தொடங்கிற்று. 'ஸீதோ பவ ஹநூமத:' நீக்குளிர வென்று பிராட்டி திருவடிக் கருளிய வரம்போலே, தன் தன்மை மாறி நிலாச் சுடுவது யாரிட்ட சாபமோ? மலய பர்வதத்திலுள்ள செஞ்சாந்தின் தாதளைந்து உலக மெல்லாம் உல்லாஸமாகச் செய்யும் மந்தமாருத மானது என்னொருத்திக்கு மாத்ரம் அக்நி ஜ்வாலையை வீசும். பனைமரத்தின்மேல் தாமஸ புஷ்பங்களின் அகவிதழ்களும் மகரந்தப் பொடியுமான சயநத்தையுடைய கூட்டின்கண் புருஷ பக்ஷியின் வாயலகோடு தன் வாயலகைப் பின்னிக்கொண்டிருக்கிற அன்றிலுடைய கத்கதீபூதமான சிறு குரலுக்கு என் நெஞ்சு உடைந்து விட்டது. நானிவற்றைப் பரிஹரிக்க என்ன உபாயத்தை அநுஷ்டிப்பேன்?

இதற்கு ஸ்திரமான ஔஷதத்தை அறிவீரில்லையோ? இந்தத் துக்கத்திலிருந்து என்னை ரக்ஷித்துக்கொள்வது எவ்வாறு? இந்நோய்க்கு மடலே மருந்து. ஆகையால் அவனைக் காணுமளவும் நானே சென்று விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வேங்கட வெற்பில் சென்று என் வடிவைக் காட்டி இதுவோ உபய விபூதி நாயகத்வம்? என்கின்றேன். முதலாழ்வார்களை நெருக்கிய இடைகழியாம் திருக்கோவலூரில் சென்று ஆச்ரிதையான என்னைக்



கைவிட்டபடி பாருங்கோ ளென்று என் வடிவைக் காட்டுகிறேன். வஸிஷ்ட சண்டாள விபாகமற யாவரையும் வரையாதே உலக மளந்தவனது கச்சித் திருவூரகத்தில் சென்று என் வடிவைக் காட்டி என்னை வரைந்தபடி பாருங்கோள் என்கிறேன். பொன்னித் தென்பால் திருப்பேரில் சென்று அவன் ஸர்வ ஸ்வதாநம் பண்ணினதை நான் ஸர்வஸ்வத்தையும் இழந்ததிலே பாருங்கோள் என்கிறேன். பரிவருள்ள வெள்ளறையில் சென்று பரிவையற்ற எனக்கு முகந் தந்தபடி பாருங்கோ ளென்கிறேன். ஆச்ரிதன் (திருமழிசை ஆழ்வார்) போ என்றதும் போய்க்கிட என்றதும் கிடந்த யதோக்தகாரியின் வெஃகாவில் சென்று நான் சொன்னபடி செய்யவில்லையே என்று என் வடிவைக் காட்டுகிறேன். இன்னம் சொல்லிச் சொல்லாத ஊரெல்லாம் புக்கு அங்கங்கு ப்ரஸித்தமான குணங்களை யெல்லாம் பழித்து என் வடிவையும் காட்டி கள்ளிமரத்துக்கு மஹாவிருக்ஷம் என்கிற பேர்போலே அவனுக்கு ப்ரஸித்தி என்று இகழுகிறேன். நாய்ச்சியா ராணையின்றித் தன் ஆணை செல்லாத திருநறையூர் மணிமாடக்கோயில் மணவாள னிடத்தில் சென்று என் நிலைமை எல்லாம் அறிவிப்பேன். அவன் தன் திருமேனியை அருளாவிடின் ரஸிகத்வம் விலைசெல்லுகிற மின்னிடையார் சேரியிலும் பஞ்சமஹா யஜ்ஞாதிகளால் ஆராதிக்கும் வைதிகர்கள் வாழ்விடத்திலும், குணம் விலை செல்லு மிடமான தன்னடியார் முன்பும், 'ஜகத்ரக்ஷணம் விலைசெல்லு மிடமானவேல்வேந்தர் கூட்டத்திலும் தன்னையே புகழும் தேச மெல்லாவற்றிலும். சென்று என் வடிவைக் காட்டி, தான் செய்தபடி 'இதுவோ' என்றறிவிப்பன் அன்று, தானிடைச்சேரியிலே வெண்ணெயைத் திருடி உரலோடே கட்டுண்டு விட்டுப் புறப்பட்டான். என்ன மகுடபங்கம் பண்ணினான்? தன்னுடல் என்ன ப்ரதிமை எடுத்தான்? வெண்ணெயை என்ன திருப்பணி செய்தான்? தன் வயிறு வளர்த்தான். நாகபட்டினத்தே சென்று கடுங்காவலாய்ச் சுழலும் சக்கரத்தை நிறுத்தி ப்ரதிமையின் மகுடத்தை உடைத்து சுருங்கை வாயிலின் உட்சென்று ஸுவர்ண விக்ரஹங்களை எடுத்து வந்து ஸ்ரீரங்கத்தில் திருப்பணி செய்தானோ? திருடவும் தெரியாமல் பெண்களால் கட்டுண்டு உரலினோ டிணைந்திருந் தேங்கிய எளிவையும், கோபாலர்களிட்ட உணவை பூதமாய் லஜ்ஜை யில்லாமல் உண்ட தன்மையையும், துர்யோதனதியர் இகழ்ந் துரைப்பப் பாண்டவர்க்குத் தூதுசென்றமையும், பறையடிக்க ஆளில்லாமல் தானே அரையிலே பறை கட்டிக்கொண்டு கையிலும் தலையிலும் குடங்களை வைத்துக்கொண்டு மங்கையர் மகிழக் குடக்கூத்தாடின அளவில், 'இவன் எதுக்காக ஆடுகிறான்?' என்று யாவரும் இகழ்ந்துரைக்கும் பெருமைக் கேட்டையும், காமாக்நியால் உடம்பு வெளுத்துத் தன்னை அடைந்தா லல்லது தரியே னென்ற ஸ்நேஹ ஸ்வபாவையான

சூர்ப்பநகையைத் தானும் ஸ்நேஹம் செய்ய வேண்டியிருக்க அது செய்யாது மூக்கரிந்த வீரத்தையும், தனக்கு நிகரில்லாத தாடகையை ஒரு முனிவன் சொல்லால் யமலோகத்துக் கனுப்பிய வீரப்பாட்டையும், யானை என்கிற ஏகஜாதித்வம் பொருந்தியிருக்கச் செய்தே ஓரானையைக் கொம்பு பறித்துக் கொன்று ஓரானையை முதலை வாயில் நின்றும் ரக்ஷித்து பக்ஷபாதியானவனை, ஏலாதிகளோடு சேர்த்துக் குளிர்ந்த தண்ணீரை விடாயர்க்கு எட்டாமே வைப்பாரைப் போலே தாபத்ரயாபிபூதர்க்குக் குளிர்ச்சி யூட்டும்படியாய் அகவாயில் வாத்ஸல்யத்துக் கெல்லாம் ப்ரகாசமான திருக்கண்களைக் கொண்டு எனக்கெட்டாதே இருக்கிறவனை, ஆசைப்பட்டாரைப் பிரிந்ததற்காகவே அலங்கரித்துக்கொள்ளும் திருத்துழாய்த் தாரானை, குண கதநத்துக்கு ஒரு ஸஹஸ்ரநாமம் போலே குணஹாநிக்கும் ஒரு ஸஹஸ்ரநாமம் சொல்லி நடுத் தெருவே செல்வேன். ஊரார் இகழார்கள். இகழ்ந்தாலும் ப்ரஹ்மாஸ்த்ர துல்யமான மடலூரா தொழியேன்.' என்று திருமங்கை மன்னன் மடல் ப்ரபந்தங்களில் அருளிச் செய்தவாறு.

இத்துணையும் கூறியவாற்றால் இச்சேதநன் ஸர்வேசுவரனை அநுபவிக்கத் தகுதி உள்ளவனென்றும் அவனை அநுபவிக்கப் புகுங்கால் வரும் இடையூறுகளை நீக்க எவ்வித ஸாஹஸ ப்ரவ்ருத்திகளையும் அநுஷ்டித்து, அதனால் "யாமடலூர்ந்து மெய்மாழியங்கைப் பிரானுடைத் தூமடல் தண்ணந்துழாய் மலர்கொண்டு சூடுவோம்'' என்று பகவத் ஸம்ச்லேஷத்தைத் துழாய்மலர் கொண்டு சூடுவோம் என்றருளிச்செய்ததனாலே பகவதநுபவமே இதன் பலமென்றும் சொல்லப்பட்டது. ஆளவந்தார் மடலை ஸந்யாஸ தர்மம் என்று அருளிச்செய்தார். அதாவது தோழிகள் பந்துக்கள் எல்லாரையும் விட்டுப் பகவான் ஒருவனையே அடைதல். இம்மடலே பெற்றல்லது தரியேன் என்கிற பரமபக்தியாம்.

ஸ்ரீ:

# நவராத்ரம்.

(ஸ்ரீ. உப. ந. கிருஷ்ணமாசார்யர்.)

ஹிந்துக்களாயுள்ள நாம் அநுஷ்டித்து வரும் பண்டிகைகளுள் நவராத்ரம் (நவராத்ரி) என்பது ஒன்று. அது ஒவ்வொரு வருஷத்திலும் ஆச்விந மாஸம் என்று வ்யவஹரிக்கப்படும் மஹாளய அமாவாஸ்யைக்கு அடுத்து வரும் சாந்த்ரமாந மாஸத்தில் சுக்ல பக்ஷம் ப்ரதமை முதல் நவமி அந்தமாக அநுஷ்டிக்கப்படுகின்றது. நமது தேசத்தில் அது பெரியதொரு வைதிக க்ரியையாகக் கொண்டாடப்படவில்லை. அநேகமாக ஸ்திரீகளே அதை ஒரு உத்ஸவமாகக் கொண்டாடி வருகிறார்கள். சிறு கந்யகைகள் இருக்கும் க்ருஹங்களில் கொலு வைக்கிறதென்றும், ப்ரதிதிநம் ஸாயங்காலத்தில் ஸுஹ்ருத்துக்களான ஸ்த்ரீகளைக் கூப்பிட்டுக் கொலு வைக்கும் இடத்தில் பாட்டுக்கள் பாடி, 'அம்மன்' என்று வ்யவஹரிக்கப்படும் ஒரு தேவதையை உத்தேசித்துப் பூஜை முதலானவற்றைச் செய்கிறதென்றும், கூப்பிடப்பட்டு வரும் ஸ்த்ரீகளுக்குத் தங்கள் தங்கள் சக்திக்கு அநுகுணமாகத் தாம்பூலம், புஷ்பம், சந்தநம், பலங்கள், பக்ஷ்யங்கள் முதலியவற்றைக் கொடுக்கிறதென்றும் இம்மாதிரியான ஒரு பரிபாடி நடந்து வருகின்றது. உபபந்நர்களாக இருக்கும் சில ஆஸ்திகர்களுடைய க்ருஹங்களில் வைதிக ப்ராஹ்மணர்களைக்கொண்டு வேத பாராயணம், ஸ்ரீமத் ராமாயண பாராயணம் முதலியவைகளும் செய்யப்படுகின்றன. ராஜகரங்களில் சஸ்த்ர பூஜை அச்வ பூஜை முதலியன நடத்தப்படுவதுடன் பலவிடங்களில் வித்வத் ஸதஸ்ஸும் நடத்தப்படுகின்றது. ஆலயங்களில் இந்த ஒன்பது திநங்களிலும் தேவீ ஸந்நிதியில் நவராத்ர உத்ஸவம் என்று ஒரு உத்ஸவமும் நடத்தப்பட்டு வருகின்றது.

உத்தர தேசத்தில் இதைப் பெரியதொரு துர்க்கா பூஜையாக நடத்தி வருகிறார்களாம். ஒவ்வொரு க்ருஹத்திலும் க்ருஹஸ்தரெல்லாரும் தங்கள் தங்கள் குலத்தில் பரம்பராகதமான ஆசாரத்தை அநுஸரித்து, உபவாஸம் ஏகபக்தம் முதலிய வ்ரதங்களை அங்கமாகக்கொண்டு கும்ப ப்ரதிஷ்டை செய்து 'துர்க்கா' என்னும் தேவியின் பூஜையை ஒரு வைதிக கர்மமாக அநுஷ்டித்து வருகிறார்களென்று அறிகிறோம். உத்தர தேசத்தில் வழங்கி வரும் 'நிர்ணய ஸிந்து' முதலிய தர்ம சாஸ்திரங்களில், இந்தத் துர்க்கா பூஜையை நித்ய கர்ம மாகவும் சொல்லி இருக்கிறார்கள். பல ச்ருதிகள் பஹுவாகச் சொல்லியிருக்கிபடியால் ப்ராயேண இது காம்ய கர்மங்களுள் ஒன்றாகவே இருத்தல் வேண்டும். சிலவிடங்களில் பல ச்ருதி இல்லாமல் விதி

ரூபமாகச் சொல்லியிருக்கிறபடியாலும் செய்யாவிட்டால் ப்ரத்யவாயம் சொல்லி யிருக்கிறபடியாலும் இதை நித்ய கர்மமென்றும் அந்தத் தர்ம சாஸ்த்ரஜ்ஞர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள்.

"வஷெ-ஷ வஷெ-ஷ வியாதவ்யம் ஸ்ரோவநம் அ விஸஜ-ஜநழ"

என்று தேவீ புராணத்திலும்,

"யொ ஜொஹா உயவாஸஸ்யா தெவீம் உ-மஉாம் உஹொதஸவெ।
ந வஜயதி உஹஸா தெஷாஉ ரவஸ்து ஹெஸவ।
க்ஸூஹமவதீதஸ்ய காஉா நிஷாஸஹஹிவெ॥"

என்று காலிகா புராணத்திலும் தென்படும் வாக்யங்களே அம்மாதிரி நிர்ணயத்திற்கு ப்ரமாணங்களாகின்றன.

இந்த நவராத்ர வ்ரதத்திற்கு அநுகல்பங்களும் காணப்படுகின்றன. த்ருதீயையில் ஆரம்பித்து நவமியில் முடிக்கலாமென்றும், பஞ்சமியில் ஆரம்பித்து ஐந்து திநங்கள் அநுஷ்டிக்கலாமென்றும், ஸப்தமியில் ஆரம்பித்து மூன்று திநம் செய்யலாமென்றும் நவமியிலாவது ஒரே நாள் அநுஷ்டாநமும் செய்யலாமென்றும் சொல்லுகிறார்கள். இவைகளின் வ்யவஸ்தைக்குக் குலாசாரமே ப்ரமாணமாகின்றது. நமது தேசத்தில் கீழ்ச் சொல்லியிருக்கிறபடி ஸ்த்ரீகள் ஒன்பது திநங்களிலும் ஒரு வித பூஜை செய்து வந்தபோதிலும், மஹாநவமியில் மாத்ரம் புமான்கள் உள்பட எல்லாரும் ஸரஸ்வதி ஆவாஹநம் செய்து அதில் ஸரஸ்வதீ பூஜை என்று ஒரு பூஜையையும் செய்கிறார்கள். இதற்குச் சாஸ்த்ர ப்ரமாணமும் இருக்கிறதாகவே தெரிகின்றது.

"உஸ்ஜெஷ-ஷ ஸ்ரோவநம் தெவ்யாः வஸவ-ஜாஷாஸாஸ வஜிதழ।
உத்தஉாஸ- ஸஜிஉஉயா ஹவணெந விஸஜ-யெக॥"

என்று ஆச்விந சுக்ல பக்ஷ மூலநக்ஷத்திரத்தில் ஸரஸ்வதியை ஆவாஹநம் செய்து அன்று முதல் நாலு நாள் பூஜித்து ச்ரவணத்தில் விஸர்ஜநம் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. நமது தேசத்தில் மஹாநவமியில் ஆவாஹநம் பூஜை முதலானவைகளும் தசமிதிநம் உத்வாஸநமும் செய்யப்பட்டு வருகின்றது.

"நாயாவயெ ஷ அழிவெஷாஸீ த்ஃகஷா அ ந।
வஸ்ஹகெ ஸ்ரோவிதெ தெவ விஉயாகாஉொ ஹிஜொத்தொः॥"

என்னும் வாக்யத்தைக்கொண்டு அன்றை திநத்தை அநத்யயந திநமாகவும் அப்பொழுது எழுதப் படிக்கக்கூடாதென்றும் சொல்லிவருகிறார்கள். ஆனால் இது



விஷயமாக நமது தேசத்திய ஸ்ரீவைஷ்ணவ அநுஷ்டாநம் அத்யந்தம் பிந்நமே. தேவதாந்தர பூஜை அவர்களுக்கு நிஷித்தமாதலால், அவர்கள், ஸரஸ்வதீ பூஜையைச் செய்யாமல்,

"தெவீ ஸரொஜா ஸநயஉ-உ வத்நீ।
வ்யாஸாதயொஉவி வ்யவதெஸ்ய வாஅः
ஹூஸாஞி ஸவெ-உ தவ ஸக்தியெஸெஶ॥"

என்கிறபடி எந்த ஹயக்ரீவனுடைய சக்தி லேசத்தின் அநுப்ரவேசத்தால் அந்த ஸரஸ்வதீ தேவி முதலான வ்யபதிஷ்டர்களும் வ்யபதேச்ய வாக்குகளென்று ப்ரகாசித்து வருகிறார்களோ, அந்த ஹயக்ரீவ பகவானுடைய ஆராதநத்தை அன்றைதிநம் விசேஷமாக அநுஷ்டித்து வருகிறார்கள். ஸ்ரீசரண்யனுடைய ஆராதநத்திற்குக் காலநியமங்கள் அநபேக்ஷிதங்களானதையால், அன்றை திநம் ஹயக்ரீவ ஆராதநத்தைச் செய்யவேண்டுமென்று விதி வாக்யம் இல்லாமல் இருக்கையிலும், அப்படி இவர்கள் அநுஷ்டித்து வருவது பகவத் ப்ரீணநமாகும் என்பதில் ஆக்ஷேபமில்லை; சிஷ்டாசாரமும் இதற்கு ப்ரமாணமாகும். ஆனால், ஸரஸ்வதீ பூஜைக்குத் தர்ம சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டுள்ள அங்கங்கள் ஸ்ரீஹயக்ரீவனுடைய ஆராதநத்திற்கு அநபேக்ஷிதங்கள்.

"வத்ரும் வஷ்வம் ஹஸும் தொயம் யொ மெ ஹக்த்யா வஉயஹதி"

என்கிறபடி சாஸ்த்ரீயமாயுள்ள பொருள்களுள் எது ஸுலபமாக இருக்கின்றதோ அதை ப்ரதிதிநம் செய்யப்படும் க்ரமப்படி அவன் திருவடிகளில் ஆத்மாத்மீய புரஸ்ஸரமாகப் பக்தியுடன் ஸமர்ப்பித்தால் கருணாநிதியாயுள்ள அந்தப் பகவான் அதைத் திருவுள்ளம் பற்றுவன் என்பது திண்ணம்.

உபஜந்நர்களால் செய்விக்கப்படும் வேத பாராயணம் முதலியவைகளும் அம்மாதிரி பகவதாராதநமாகவே இருக்கக்கூடும். பல காமநையால் அவை செய்யப்படுவது முண்டு. அதற்கு ப்ரமாணம் :—

"ஹவம் அத- வெஉவிஜொ விஉாந ஸவஉாந உஹஸாவயெக।
தெஷாம் அ வஉணம் கா்யஉம் வெஉவாஉாயணாய வெ।"

என்று ஒரு வாக்யம் காணப்படுகின்றது.

தொழிலாளிகளாயிருக்கும் நான்காவது வர்ணத்தார்களுள் இந்த ஸரஸ்வதிபூஜை ஆயுதபூஜையாக மாறி இருக்கின்றது. இது, க்ஷத்ரியர்களால் செய்யப்படவேண்டு மென்று விதிக்கப்பட்டிருக்கும் சஸ்த்ராதி பூஜையின் மாறுதலே யாகும்.

"ப்ரத்யஹம் நரபதி: ஸ்நாத்வா ஸம்பூஜ்ய பித்ருதேவதா: ।
பூஜயேத் ராஜசிஹ்நாநி ஶஸ்த்ராஸ்த்ராணி விஶேஷத: ॥"

என்று சொல்லியிருக்கிறபடி க்ஷத்ரியர்கள் அநுஷ்டிக்கும் ஆசாரத்தை இதரர்களும் தங்கள் தங்களுக்கு அஸாதாரணமாயுள்ள ஆயுத விசேஷங்களைப் பூஜை செய்வதில் ப்ரமாணமாகக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பூஜையை, ஜடமாயுள்ள கேவல ஆயுதரூபமான பதார்த்தங்களில் மௌட்யத்தால் அவர்கள் செய்கிறார்களென க்ரஹிக்கக்கூடாது; அந்தந்த ஆயுதங்களுள் அவையவைகளின் அதிஷ்டாந தேவதையாக அதிவஸித்து வரும் தேவதா விசேஷத்தின் பூஜையென்றே நாம் க்ரஹிக்க வேண்டும். அதில் மௌட்யமில்லை என்பது சாஸ்த்ர ஸித்தம்.

இன்னும் ஒரு அம்சம் இது விஷயமாக நாம் கவனிக்கவேண்டியது உண்டு. இந்தப் பூஜைக்கு அதிகாரிகளைச் சொல்லிவரும் ப்ரகரணத்தில்,

"ஸ்நாதை: ப்ரமுதிதைர் ஹ்ருஷ்டைர் ப்ராஹ்மணை: க்ஷத்ரியைர் ந்ருப ।
வைஶ்யை: ஶூத்ரைர் பக்தியுக்தைர் ம்லேச்சைரந்யைஶ்ச மாநவை: ।
ஸ்த்ரீபிஶ்ச குருஶார்தூல தத்விதாநமிதம் ஶ்ருணு ॥"

என்று ம்லேச்சர்களையும் அதிகாரிகளுள் ஒருவராகச் சொல்லியிருக்கிறார்கள். ஒருகாலத்தில் ம்லேச்சர்களும் இந்தப் பூஜையைத் தங்களுக்கு உரிய க்ரமப்படி அநுஷ்டித்து வந்திருக்க வேண்டுமென்று நாம் இதிலிருந்து ஊஹிக்கிறோம். இப்பொழுது ம்லேச்சர்கள் இதை அநுஷ்டிக்கிறார்களோ இல்லையோ நமக்குத் தெரியவில்லை. இருந்தபோதிலும் ஹிந்துக்களுடைய ஆசாரத்தின் ஏற்றத்திற்கு இது ஒரு போதுமான நிதர்சநம்.

இந்த நவராத்ர அநுஷ்டாநத்திற்கு ப்ரமாணமாக ஒரு புராண கதையும் ஜநங்களாற் சொல்லப்படுகின்றது. ஸுகேதநன் என்னும் ஒரு அரசன், ஒரு ஸமயம் தனது ராஜ்யத்தை இழந்து காட்டில் ஸஞ்சரித்தபொழுது அகஸ்த்ய மஹர்ஷியைச் சந்தித்ததாகவும், அவர் இவன்மீது க்ருபைகூர்ந்து இந்த நவராத்ர காலத்தைக் குறிப்பிட்டு முதல் மூன்று திநங்களில் பார்வதியையும் இரண்டாவது மூன்று திநங்களில் லக்ஷ்மியையும் மூன்றாவது மூன்று திநங்களில் ஸரஸ்வதியையும் ஆராதித்து வரும்படி சொன்னதாகவும், அம்மாதிரி அவ்வரசன் ஆராதித்து இழந்துபோன தனது ராஜ்யத்தை மீண்டு பெற்றுக்கொண்டதாகவும், அக்காலம் முதல் இந்த நவராத்ர அநுஷ்டாநம் நமது தேசத்தில் ச்ரேயஸ்ஸை விரும்பும் எல்லாராலும் அநுஷ்டிக்கப்பட்டு வருவதாகவும் அந்தக் கதை சொல்லுகின்றது.

ஸ்ரீ:

# கடிதங்கள்.

## அஸ்ப்ருச்யதை.

(1)

ஸ்ரீ. வே. தீ. பத்ராதிபருக்கு:—

ஸமீபத்தில் திருவாரூரில் நடந்தேறிய ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையிற்கூட அஸ்ப்ருச்யதை என்னும் தீண்டாமையைக் குறித்துச் சர்ச்சைநடந்து ஹிந்து தர்ம சாஸ்திரங்களில் இவ்விஷயம் கெடுதலாக எண்ணப்படவில்லை யென்றும், அஸ்ப்ருச்யதை யென்கிற தோற்றம் நம்மிடம் காண்பது நியாயமில்லை யென்றும், தீர்மானமும் விவரிக்கப்பட்டதாக நாம் பத்திரிகைகளால் கண்டறிந்தோம். அது உண்மையாயிருக்கும் பக்ஷத்தில் தேச முன்னேற்றத்திற்கு நன்மையுண்டாயிற்றென்று அனேகர் அபிப்பிராயப்படுகிறார்கள். மஹாத்மா காந்தியடிகளும் அதனையே முக்கிய கருத்தாகப் பலவகையில் பலவாறாக போதித்துச் சொல்லுகிறார்கள். 'நான் கல்விமான் என்ற யோக்யதையுடன் விளங்குபவனல்லேன். சாஸ்திர பரிசயமும் குறைவுதான். ஆகவே இவ்விஷய தத்வத்தைக் குறித்துப் பூர்வபக்ஷம் உத்தரபக்ஷமாக வாக்யார்த்தம் சொல்லத் திறமையுள்ளவன் என்பது சரியாகாது. ஏதோ கேவலம் லௌகிக சம்பந்தமாய்த் தேசாடனம் செய்து தேக யாத்திரை நடத்துபவனே யல்லாது வேறில்லை. நம்முடைய வியவஹாரங்களில் பஞ்சமர்களுடன் கலந்து போகவேண்டிய ஸமயங்கள் பலவுள. கேவலம் வைதிக சிரோமணிகளுக்குக்கூட பஞ்சமர்களைத் தள்ளிவிட்டுக் காரியங்களைச் செய்து கொள்ள முடியாது. சாகுபடி செய்கோர்த்தி விஷயங்களில் பஞ்சமர்களின் உதவி முக்யம் என்பது திண்ணம். கிராமங்களைவிட்டு வெளியேபுறப்பட்டால் நாடுநகரங்களில் பஞ்சமர்கள் கிறிஸ்தவர்களாகவும், மகம்மதியர்களாகவும் வழங்கிவரும் வேலையில் நாம் பெரும்பான்மை அஸ்ப்ருச்யதையைக் கொண்டாடுவதில்லை. தெருக்களில் குப்பை முதலியவற்றைக்கூட்டியெடுக்கும் ஊழியர்கள் அனேகமாய்ப் பஞ்சமர்களும் சக்கிலிகளும் முதலிய கீழ் ஜாதியரே. பட்டணம் போன்ற பெருநகர்களில் ரயில்வண்டிகளிலும், டிராம் வண்டிகளிலும், மோடார் பஸ் வண்டிகளிலும் பஞ்சமர்களில் பெரும்பாலார் உத்யோகம் செய்து வருகிறார்களென்று சொன்னால் அவைகளில் யாத்திரை செய்கிறார்களென்று சொல்லவும் வேண்டுமோ? இவ்விஷயங்களிலும் இவ்விடங்களிலும் வைதிகர்கள் கூட தீண்டாமையைப் பாராட்டுவதில்லை. கிருகங்களிற்குச் சென்ற பிறகு ஸ்நாநாதிகளைச் செய்தபோதிலும் யாத்ரை செய்யுமளவில் தீண்டாமையை ஸ்மரிக்கிறதேயில்லை. கச்சேரிகளில் பார்த்தால் தீண்டாமையை யொழிக்கப் பலமான முயற்சிகள் எடுத்துக்கொள்ளுகிறார்கள். சட்டசபையிற்கூட தினந்தோறும் தீண்டாமையைக் குறித்த தீர்மானங்களும் சர்ச்சைகளும் உண்டாகின்றன. பத்திரிகைகளில் நாள்தோறும் பஞ்சமர்கள் ஏன் தேவாலயங்களுக்குட் சென்று ஸர்வேச்வரனை த்யானிக்கக்கூடாதென்றும், தாங்களே ஏன் பூஜை செய்யக்கூடாதென்றும் முதலான நோக்கங்களின் ஸ்வரூபத்தைக் காண்கிறோமல்லவா? நாம் மேன்மேலும், தீண்டாமையைப்பெருக்கி, பஞ்சமர்கள் அதமர்களென்னும் எண்ணத்தை வெளியிட்டு, அவர்களை நம்முடன்கூட லோகஸம்பந்தமான வியவஹாரங்களில் சேர்த்துக்கொள்ளாமல் நீக்கிவிட்டு வந்தோமேயானால்; நாளுக்குநாள் பிராம்மணர்களிடத்தில் அந்த நிம்ன ஜாதியர்க

ளுக்கு வெறுப்புண்டாகி அஸூயையே காண்பிப்பார்களென்பதற்கு ஐயம் சற்றேனு மில்லை. தவிர பஞ்சமர்கள் ஹிந்துமதத்தை விட்டு அகன்று கிறிஸ்தவர்களாகவோ அல்லது மகம்மதியர்களாகவோ, அல்லது ஆரிய ஸமாஜத்தைச் சேர்ந்தவர்களா கவோ மாறக்கூடும். பிறகு நம்முடன் சேர்ந்தே வருவார்கள். தீண்டாமையும் மறைந்துவிடும். அது ஸரியோ தப்போ கற்றறிந்த மேலோருக்கே விளக்கமா கும். கெட்டுப் போகிறவன் கெட்டும்; நம்முடைய தர்ம யாத்ரையை நாம் வழக்கம்போல் நடத்திக் கொள்ளலாம் என்று பிராம்மணர்கள் சொல்வது நியாயமா? கெடாம லிருக்கும்படியான வழிகளை நாம் தேடுவது நியாயமாகாதா? அதம ஜாதியர்களை அவர்களுடைய அதமஸ்திதியிலிருந்து நிவர்த்திசெய்து மத்யம ஜாதி, உத்தம ஜாதி யென்னும் வகுப்புகளுக்கு அவர்களை மாற்றவேண்டிய முயற்சிகளை நாம் செய்யலாகாதா? செய்வதனால் பாபமென்னே? செய்யா திருத்தலின் புண்ணியம் என்னே?

பிராம்மணர்களின் வீட்டில் ஸ்த்ரீகள், மூன்று நாள் விலக்கி வைத்திருக்கும் காலத்திற்கூட வீடுகளில் சிறிதுதூரம் வரையில் வருவது ஸகஜம். சூத்ரர்கள் ஸகஜமாய் சில விடங்கள் வரையில் வருவதும் வழக்கம். சில கிராமங்களில் உத்யோகஸ்தனாயிருந்தால் வீட்டிற்குள் சேர்க்கிறோம். இவைகளைக் கண்டால் நாம் செய்வது சாஸ்திர ஸம்மதமாகுமா? அப்படி யிருக்கச் சிலரை மாத்ரம் நிம்ன ஜாதியர்களென்றும் அவர்களை நெருங்கவிடாமல் இருக்கிறோமே; அதன் காரண மின்னதென ஆராய்ச்சி செய்வதினாற் பயனுண்டு. பஞ்சமர் முதலிய தாழ்ந்த ஜாதியார்களுடைய ஆகார வ்யவஹாரங்களே இதற்குக் காரணமாய் இருக்கலாம். அது அவ்வாறிருப்பின் கர்ம சண்டாளர்களாகிய பிராம்மணர்களுக்கும் ஏன் நாம் சாஸ்திர ஸம்மதமான தண்டனைகளை விதிக்கிறதில்லை? கால தேச வர்த்தமானங்களை யனுசரித்து பிராம்மணர்களும் செல்லவேண்டியதில்லையா? அஸ்ப்ருச்யதையை நீக்குவதென்றால் அவருடன் புஜிப்பதென்றாவது விவாகங்கள் செய்துகொள்ள வேண்டுமென்றாவது ஏற்படுமென்பது அவசியமில்லை. அவ் வெண்ணமும் அதனுள்ளடங்கி யிருக்கவில்லை. யோக்யதையை யனுசரித்தல்லவோ தாழ்மக்களுக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆழ்வார் ஆசார்யர்களிலென்ன சைவசமய நாயன்மார்களிலென்ன ஜாதி ப்ரஷ்டத்வம் நீக்கப்படவில்லையா? அவ்வாறிருக்க இக்காலத்தில் மாத்ரம் அஸ்ப்ருச்யதையை விருத்தி செய்ய வேண்டிய காரணமென்ன? இக்காலத்திய பஞ்சமர்களிலும் தெய்வ பக்தியுடைய புண்ணியர்க ளிருக்கமாட்டார்களா? அவர்களுக்கும் ஸர்வேச்வரன் ஒருவர்தானே? இம்மாதிரி யான கேள்விகள் பலவாறு ஜநிக்கின்றன. சாஸ்திரத்தை ஆராய்ச்சி செய்த நிபுணர்களுக்கு ஷை கேள்விகளுக்கு உத்தரம் கிடைக்கக்கூடும். ஆயினும் பஞ்சமர் ஹிந்து மதத்திலிருந்து விலக்கப்பட வேண்டு மென்பது யுக்தமா? அல்லது தர்மமா? தேவாலயங்களுக்குட் செல்ல சில காலங்களிலாவது உதவி புரிய வேண்டுமல்லவா? உத்தமஜாதிகளில் இப்போதும் சில திவ்ய தேசங்களில் பஞ்சமர்கள் பகவத் தரிசனம்செய்ய இடம் கொடுக்கவில்லையா? அப்படியிருக்க ஏன் இது விஷயத்தில் ஸம்பூர்ண ஆராய்ச்சி பெரியோர்கள்செய்து நிம்நஜாதியாரை மேன்மைநிலைமைக்கு கொண்டுவரவேண்டிய முயற்சிகளைச் செய்யக்கூடாதோ என்பதோர் சந்தேகம் மாத்திரம் குடிகொண்டிருக்கிறது. கேவலம் கர்மசேஷம் அவனவன் ஜந்மாவை அவனவன் நிவர்த்தித்துக் கொள்ளவேண்டுமென்று சிலர் எண்ணினாலும் காலத்திற்கேற்ற யுக்தி யொன்றை வெளியிட்டு நமது நாட்டை பரிபாலிக்கிற தர்மம் நம்முடையது மல்லவா!



ஆராய்ச்சி செய்யச் செய்ய பலவகை ஆலோசனைகள் உதிக்கலாம். ஆகவே பெரியோர்களை நான் பிரார்த்தித்துக் கொள்ளுகிறது என்னவென்றால், ஷை விஷயத்தைத் தீர விசாரித்துத் தீபிகை மூலமாய் அபிப்பிராயங்களை வெளியிட்டு இது விஷயத்தில் சரியான தீர்மானமொன்று பிராம்மணர்களுக்குள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய தவசியமாதலால் ஸஜ்ஜன சிகாமணிகள் ஒன்றுகூடி இந்த விஷயமாய் உண்டாகும் சண்டை சச்சரவுகளை நிறுத்தும்படியான ஏற்பாடுகளை உண்டாக்கவேண்டும். நான் இவ்வளவு நுணுக்கமாய் எழுதலானதற்கு என்னை க்ஷமித்தருள்வீர்களாக.'

சித்தூர். நாதமுனி க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார்.

(2)

ஸ்ரீ. வே. தீ. பத்ராதிபருக்கு:—

தேச நன்மையை நாடும்சில மேதாவிகள் செய்துவரும் தீண்டாமையைப் பற்றின ப்ரசங்கம் கொஞ்சம் கொஞ்சம் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் மேடையில் ஏறுவதால் இதைப்பற்றி ஏதாவது ஒரு முடிவுக்கு வரவேண்டியது அவச்யமாயிருப்பதால் இங்ஙனம் எழுதநேரிட்டது. நம்ஸித்தாந்தத்தில் சிக்ஷிதர்களாயும் லௌகிக வைதிகங்களில் தேர்ச்சியடைந் திருப்பவர்களுமான சிலரும் தீண்டாமை இல்லையென வாதிக்கிறார்களென்னும் விஷயத்தைப் பார்க்கும்போதுண்டான வருத்தம் என்னை இவ்விதத்தில் எழுதும்படி தூண்டுகின்றது.

தீண்டாமை இல்லையென வாதிப்பவர்கள் தாங்கள் கொண்ட கூற்றுக்குத் தக்க பிரமாணங்களைக் காண்பிப்பார்களா? ஸரியான யுக்தியைக் காண்பிக்க முடியுமா? சிஷ்டாசாரங்களைக் காண்பிக்கமுடியுமா? தீண்டாமையை விலக்கவேண்டும் என்று சொல்வதனால் மாத்திரம் உபயோகமில்லை. எதை சாதிக்கிறதா யிருந்தாலும் அதற்குத் தகுந்த காரணங்களைக் காட்டவேணுமே யன்றி ஸொந்த அபிப்பிராயமென்று சொல்வதால் ப்ரயோஜனமில்லை. தாங்கள் சொல்லும் விவாதத்திற்கு ஸாதகங்களான ஐதிஹ்யங்களைக்காட்டுவதால் ப்ரயோஜநமில்லை. அவை ஸம்ப்ரதிபந்ந ப்ரமாணயுக்திகளாக இருக்கவேண்டும்.

அவர்களே ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தில் உள்நோக்கங்களைப் பார்க்கும்பொழுது எல்லாரையும் சமமாகப் பாவித்து, பேதபுத்தியை விலக்கவேண்டும் என்று சொல்லி வாதித்து, இதற்குச் சிலவிடங்களில் ஆழ்வார்கள் முதலியவர்களுடைய அனுஷ்டானத்தை ஸாதகமாகக் காட்டி ஏமாற்றப் பார்க்கிறார்கள். அதி னுண்மையைத் தெரிந்து கொள்ளவேண்டாமோ?

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தின் ப்ரதாநமான உள் நோக்கங்களாவன:—

(1) அந்தணர் அந்தியர் எல்லையில் நின்ற அனைவரும் அன்னியபராய்த் தாங்கள் எந்த ஜந்மத்தில் இருந்தபோதிலும் அதே ஜந்மத்திலேயே வீடு பெறுவதற்குக் காரணமான சரணநெறியால் மோக்ஷத்தை அடையலம்.

(2) மற்ற மதங்களில் தங்கள் தங்கள் கொள்கைக்கிணங்க இதர தேவதைகளை உபாசிப்பவர்களுக்கு மோக்ஷம் இல்லையென்றும், பிராம்மண சரீரம் அடைந்தவர்கட்கே முக்தியென்றும், மற்ற எவர்களாலும் மோக்ஷம் அடையமுடியாது என்றும் சொல்வதுபோல், இம்மதம் இதர மதத்தை இகழ்ந்து பேசாமல்எவராயினும், எந்த மதத்திலிருப்பவராயினும், அவ்விதமே அந்தந்த தேவதையை உபாஸநம் செய்பவருக்கு இதே ஜந்மத்

திலோ மறுஜந்மத்திலோ மோக்ஷம் கைகூடும் எனக்கூறுகிறது. ஆகவே இம்மதம் எல்லார்க்கும் உபஜீவ்யமாகிறது.

(3) ஸ்ரீ வைஷ்ணவர்கள் என்பதற்கு ஸ்ரீமந் நாராயணனையே அடையத் தகுந்தவனாயும், அடைவதற்குச் சாதனமாயும் கொண்டவர்களெனப் பொருள் படுவதால் அத்தகையவர் எவராயினும் ஜாதி குணம் அனுஷ்டானம் இவைகளை யிட்டுத் தாழ்வாக நினையாது விசேஷ சாஸ்த்ரம் சொன்னமட்டில் பூஜ்யர்கள். ஆயினும் சாஸ்திரமென்னும் பகவானுடைய கட்டளையை மீறி அந்தந்த ஜாதிக்கும் ஆச்ரமத்திற்கும் விபரீதமாக அவர்களிடத்தில் நடந்து கொள்வதை ஸ்ரீ வைஷ்ணவஸித்தாந்தம் நிராகரிக்கிறது.

(4) பிராம்மணனென்றும், க்ஷத்ரியனென்றும் வைச்யனென்றும் சூத்ரனென்றும் நான்கு ஜாதிகளும் மற்ற ஸங்கரஜாதிகளும் தத்காலத்தில் உண்டென்று நினைக்கப்படாமல் வேதத்திலும் அவற்றை மூலமாகக் கொண்ட ஸ்ம்ருதீ திஹாஸ புராணங்களிலும் வெகு காலமாய் ஏற்பட்டிருக்கிறபடியாலும், என்றும் யாவராலும்,

“[illegible] ॥” என்று வ்யாஸராலும், “[illegible] ॥” என்று ப்ருஹஸ்பதியாலும், “[illegible] ॥” என்று அசுத்தனை பிராம்மணன் முற்கூறியவர்களை புத்தி பூர்வமாய்த் தீண்டினால் உபவாஸத்தினாலும் கிருச்சிரத்தினாலும் சுத்தி யடைவார்களென்று சொல்லியிருக்கிறபடியினாலும், இன்னும் அநேக பிரமாணங்களைக் கவனித்தால் தீண்டாமை உண்டென்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல் ஸ்பஷ்டமாய்த் தெரிகிறபடியால் இப்படிப்பட்ட தீண்டாமையை ஒழித்துப் பள்ளன் பறையனும் பிராமணனும் ஒன்று சேர்ந்தால்தான் தேசக்ஷேமம் உண்டாகு மென்கிற துர்வாதத்தை இந்த மதம் நிராகரிக்கிறது.

ஜாதிபேதத்திற்கும் தேசக்ஷேமத்திற்கும் ஒன்றுக்கொன்று காரியகாரணபாவமில்லாமையால், ஐகமத்யம் க்ஷேமத்திற்கு ஹேதுவாகையால் ஸஹவாஸ ஸஹபோஜநாதிகளினால் மாத்திரம் க்ஷேமம் உண்டாகுமென்பது இல்லை. எந்தஜாதியிலிருந்தாலும் அதற்கு விரோதமில்லாமலே ஸ்ரீ வைஷ்ணவஸித்தாந்தத்திலுள்ள அரிய பெரிய விஷயங்களைத் தெரிந்து அஸூயை முதலிய துர்க்குணங்களை விலக்கி சாஸ்திரஸம்பந்தமான வழியிலே நின்றால் நிச்சயம் எல்லாரும் அநேக நன்மைகளை அடையலாமென்று இந்த ஸித்தாந்தம் வற்புறுத்துகிறது.

ஜாதிபேதத்தை ஒழித்து விடவேணுமென்றும் தீண்டாமையை அகற்றவேணுமென்றும் சொல்லிவாதிப்பவர்கள் தாங்களும் நன்மையினின்று நழுவி அன்பர்களையும் நன்மையினின்று கெடுத்து விடுவார்களென்பதை உறுதியாய்ச் சொல்லலாம்.



தீண்டாமையை ஒழித்து விடவேண்டுமென்கிறவர்களுக்கு ப்ராம்மண ஜாதி ஒழிந்து விடவேண்டுமென்கிற எண்ணம் தானென்பது நிச்சயம். இப்படி அவர்கள் உதாரணங்களைக்கொண்டு வாதிப்பார்களாயின் அவர்களை ஸ்ரீ பகவத் ஸங்கல்பத்தால் கண்டிப்பவர்கள் சிலர் சீக்ரமாகத் தோன்றுவார்கள்.

ஆகையால் லோகோபகாரத்திற்காகவே வேதாந்ததீபிகை ஏற்பட்டிருக்கிறதாலும், இந்த விஷயம் லோகோபகாரமாகையினாலும் வேதாந்த தீபிகையில் ப்ரசுரிக்கவேண்டியது அவச்யமென்பதைச் சொல்லவேணுமோ? ஆகையால் இந்த விஷயத்தை விவரிக்கப் பிரார்த்திக்கிறேன்.

விஜ்ஞாபனம்.

கல்யாணமகாதேவி. வே-கோபால தாஸன்.

3

ஸ்ரீ. வே. தீ. பத்ராதிபருக்கு:—சென்னை நகரவாஸியான ஓர் இந்து மதாபிமானியின் விஞ்ஞாபநம்.

இந்த வேதாந்த தீபிகையின் உண்மையான கருத்து, ஆஸ்திக்யத்தையும் பகவத் பாகவத விச்வாஸத்தையும் உண்டுபண்ணக்கருதி முன்னோர் மொழிந்த முறைதப்பாமற் கேட்ட பரமபாகவதர்களின் ஸதாசாரத்தினின்றும் நழுவி புறச்சமயத்தைப் பார்த்து ப்ரமிப்பவர்களைக்கண்டு ப்ரமித்து நாமும் நம்முன்னோர்களும் அவர்களைப் போலே நடவாமல் தவறிவிட்டோம் என்றும் மாறுவதற்காகவல்ல. ஆனால் இந்த பால்ய நிலைமை நீங்கி யௌவநாவஸ்தை அடைந்த பத்திரிகை, மதாபிமானம் வேறொன்றி செழித்தோங்குவதற்கு முன்னமேயே தீண்டாமை ஒழித்தல் ஸஹபோஜநம் பண்ணுதல் தாழ்ந்தவர்களென்றும் உயர்ந்தவர்களென்றும் பேதப்படுத்தல் முதலியவைகளை விஷயமாக வைத்துக்கொண்டு உலகத்தாரை உயர்த்துவதுபோல் பாவித்து ஸ்வப்ரசம்சையை வ்ருத்தி பண்ணிக் கொள்ளக் கருதுவதால் மாத்திரம் ஒத்துமை பெருகி ராஜ்யம் கைபுகுந்து இதர மதஸ்தர்கள் நம்முடன் கூட்டுறவு செய்து நம்மை நேசிப்பார்கள் என்னும் எண்ணம் வீணென்பது திண்ணம்.

அந்தந்த மதாபிமானிகள் தம் தம் மதத்திலிருந்தே பொதுவான விஷயங்களில் ஐகமத்யம் ஏற்படவேண்டும் எனும் கருத்துக்கிணங்குவது போல அந்தந்த வர்ணங்களிலிருந்துகொண்டே ஐக்யத்தை அடைதல் அஸாத்யமென்பது பொருந்தாது. ஐக்யம் வேணுமென அபிப்பிராயமுள்ளவர்கள் தீப்பிடித்த வீட்டை அணைக்கப் பலபேர்களும் ஓடி அணைப்பதைப்போல பொதுவிஷயத்தில் ஒன்று சேரமாட்டார்களா? பரம நாகரிகத்தை அடைந்தவர்களாக நம்மால் கொண்டாடப்படும் ஐரோப்பியர்கள் மகம்மதியர்கள் முதலிய புறச்சமயிகள் தங்கள் மதக்கொள்கைகளை விட்டுத்தான் ஒற்றுமையை அடைந்தார்களா? இல்லை இல்லை. அந்தோ!

மேலும், ஸத்தியத்தைப்பேசு, தர்மத்தை அனுஷ்டிப்பாயாக, என்று சொல்லத் துடங்கும்பொழுதே மதத்தை ஒழித்துவிடு, தீண்டாமையை விலக்கு என்று உபந்யாஸ

ஆரம்பத்திலேயே சொல்லப்புகுவாராகில் மதத்தை விஸ்தாரப்படுத்தக் கருதினவருடைய உபந்யாஸம் எங்ஙனம் நடைபெறும். தீண்டாமை ஒழித்தல் ஸர்வகாலத்திலும் ஸர்வதேசத்திலும், க்ஷணேக்ஷணே தானே பரவிக்கொண்டு வருகிற இந்நிலைமையில் ஒழித்தலைப் பற்றிய ஒரு கூட்டமும் அதற்கு ஒரு பிரஸிடெண்டும் அவர் கீழ் ஒரு உபந்யாஸகரும் வேண்டுமோ? ஹோட்டல், ஹாஸ்டல், ஸ்கூல், ரயில், ஒவ்வொன்றும் தீண்டாமையைத் தானே ஒழித்துவரவில்லையோ? தீண்டாமையை ஒழித்துவிடுமென்றும் சொல்லும் ஆசாரியனும் அவச்யமோ.

இம்மாதிரியே கோடிக்கணக்கான Gallon ஜலம் பிடிக்கும்படியான விஸ்தாரமான ஒரு தொட்டியை நூறடி உயரத்தில் கட்டி அதனுள் ஜலத்தை நிரப்புவதற்கு மனிதன் முயற்சி வேண்டுவதுதான். அத்தொட்டியின் ஜலத்தைத் தரையில் வீழ்த்துவதற்கு ஜனங்களுடைய ஸஹாயம் வேண்டுமோ? தீண்டாமை ஒழிக்கும் விஷயத்தைப் பேசப் புகுவது மேட்டிலுள்ள ஜலத்தைத் தாழ்ந்த விடத்தில் பாயச் செய்யக் கூட்டம் கூட்டுவது போலாகும்.

தீண்டாமையின் உட் கருத்து யாதெனில் பின்வருமாறு விவரிப்போம்.

நம் முன்னோர்கள் ஆசாரச் சீர்திருத்தத்தில் சுகாதார விளக்கமெனும் நூலுக்குத் தர்மசாஸ்திரமெனப் பெயரிட்டு, [illegible] என்று விதி ரூபமாகச் சொல்வதன் கருத்தென்னவெனில், ஸ்பர்சத்தால் உண்டாகும் தொத்துவியாதி முதலிய கொடிய வியாதிகளை நீக்குவதன்பொருட்டும், நெடுநாள் ஸ்நாநாதிகள் பண்ணாமலும், ஸுராபாநாதிகளைக் கைக்கொண்டும் இருப்பவர்களின் ஸம்பந்தத்தினால் ஸ்நாநம்பண்ணிக் குடி முதலியவைகளை நீக்கியும் நல்ல அநுஷ்டானத்தில் நாடி நிற்குமவன் விலகி நின்றாலொழிய தான் தப்பித்துக் கொள்வதரிது. கலந்து கொள்வதால் தப்பித்துக் கொள்ளலும் கூடிக்கொள்வதனால் ஒற்று வாழ்வதும் முற்றிலும் அரிது.

இப்படி சுகாதார விளக்கமாகிய தர்ம சாஸ்திரத்திற்குப் புறம்பான அநுஷ்டானங்களை அடைந்து விபரீதானுஷ்டானம் உள்ள அந்தணர்களும் விலக்கத் தகுந்தவர்களே. அதாவது ஸ்பர்சானர்ஹரானவர்களே.

இம்மாதிரி நமது மகளிற் மாதம் மூன்று தினம் விலகி நிற்பர். இவ் வழக்கம் மகம்மதியர்களுக்கும் உண்டு. தீண்டாமையின்மையால் நம் மகளிர்க்கே மூன்று நாளிலும் நம்முடன் கலப்பதற்கு இடமுண்டாகும். ஆனதுபற்றி தீண்டாமை ஒழித்தல் எனும் விஷயத்தை அநுஷ்டிக்க நமது தர்மசாஸ்த்ரம் இடம் கொடாது.

மேலும் ப்ராம்மணர்கள் ஸூதகத்தீட்டிலும் சாதீட்டிலும் விலகியே நிற்பார்கள். ஆதலால் தீண்டாமை விலக்கெனும் வார்த்தையில் ப்ரமங்கொண்டு முன்னோர்கள் வழியைத்தவிர்த்து நிற்பவர்கள் பாதித்யத்துக்குள்ளாவர்களென்பது நிச்சயம். ஆதலால் தேச க்ஷேமத்தைக் கருதும் புத்திமான்கள் தீண்டாமை விலக்கலெனும் விஷயத்தைத் தொடங்கும் பொழுதே ஜனங்களுக்குள் ஐக்யத்தை உண்டு பண்ணி ஸித்தி பெறுவார்களென்பது நடைபெறாத கார்யம். ஆழ்வார்களுடைய அநுஷ்டானமும் வர்ணஸாங்கர்யத்தில் முடிகிறது என்று உபந்யஸிப்பவர்கள் அவர்களின் உண்மையான அபிப்பிராயத்தை அறியவில்லை என்பது நிச்சயம். சுருதி ஸ்மிருதி இதிஹாஸ புராண வசனங்களின்றி உபந்யஸிப்பவர்களின் உபந்யாசம் பண்டிதர்களால் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.



இதைத் தீபிகாசிரியர் அச்சிடுவாராயின் தீபிகையின் மதம் எத்தகையது என்பது விளங்கும்.

---

## ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை உபன்யாஸங்கள்.

ஸ்ரீ வை. ஸி. ஸபை நிர்வாக கமிட்டியின் தீர்மானத்தை அநுசரித்து ஸெப்டம்பர்மீ ஸபையின் ஆதரவில் மதுராந்தகம், தின்னனூர், நுங்கம்பாக்கம் ஆகிய விடங்களில் ஸித்தாந்த ப்ரவசனஞ் செய்யப்பட்டது.

மதுராந்தகத்தில் ஸ்ரீ அஹோபில மடம் அழகிய சிங்கர் சாதுர்மாஸ்ய ஸங்கல்ப உத்தான தினமாகிய செப்டம்பர் 11-ந் தேதி ராத்திரி அவ்வுத்ஸவத்தை முன்னிட்டு நடந்த டோலோத்ஸவ காலத்தில் உபந்யாஸம் நடைபெற்றது. ஸ்ரீ அழகிய சிங்கர் பரம க்ருபையுடன் உபந்யாஸஞ் செய்யத் திருவுள்ளம்பற்றி ஆரம்பத்தில் ஸ்ரீ லக்ஷ்மி ந்ருஸிம்ஹனுடைய வைபவத்தை வெகு அழகாக எடுத்துபதேசித்து ஆசார்ய சிஷ்ய பாவத்தின் தன்மையை விஸ்தாரமாக ஸாதித்தருளினார். பிறகு வித்வான் ஸ்ரீ. உ. வே. குடவாசல் நரஸிம்மாசார்யர் ஸ்வாமி இதே அர்த்தத்தை சிறிது விஸ்தாரமாக எடுத்துபந்யஸித்தார். ஸ்தல வாஸிகளான ஆஸ்திக ப்ரமுகர்களும் அந்த உத்ஸவத்திற்காக வந்திருந்த மற்றும் பல ஸ்வாமிகளும் ஏராளமாக வந்திருந்து உபந்யாஸங்களைக் கேட்டு ஆனந்தித்தனர். ஸ்ரீ வை. ஸி. ஸபைக்கும் விசேஷ ஆதரவை யுண்டுபண்ணுவதாக அந்த ஸ்வாமிகள் ஸாதித்தனர். உபந்யாஸ முடிவில் ஸபையின் சார்பாக ஸ்ரீ உவே. ஸ்ரீ வாஸுதேவாசார்யர் ஸ்வாமி க்ருதஜ்ஞதா விஷ்கரணஞ் செய்ய, சந்தனம் தாம்பூலம் பகவத் ப்ரஸாதம் முதலியவை விநியோகிக்கப்பட்டு ஸதஸ் கலைந்தது.

திருவள்ளூர் தாலுக்கா தின்னனூர் என்ற திவ்ய தேசத்தில் செப்டம்பர் 18உ ஒரு உபன்யாஸம் நடைபெற்றது. அவ்வூர் வாஸிகளான ஸ்வாமிகள் எல்லோரும் ஆதரவுடன் இதற்கு வந்திருந்தனர். வித்வான் ஸ்ரீ உ. வே. குடவாசல் நரஸிம்மாசார்யர் ஸ்வாமி ஸ்ரீ விசிஷ்டாத்வைதஸித்தாந்த தத்துவங்களையும் ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணங்களையும் விஸ்தாரமாக ஸாதித்தார். முடிவில் ஸம்ப்ரதாய ப்ரவசநத்திற்குப் பலவிதமாகவும் உபயுக்தமாகவிருக்கும் ஸ்ரீ. வை. ஸி. ஸபையையும் தீபிகையையும் ஆதரிக்க வேண்டிய ஆவச்யகதையையும் அந்த ஸ்வாமி ஸாதித்தார். ஸ்தலத்திலேயே பல ஸ்வாமிகள் ஸப்யர்களாகச்சேர்ந்ததுடன் இன்னும் பல ஸ்வாமிகள் சேருவதாகவும் வாக்களித்திருக்கின்றனர்.

19-ந்தேதி திங்கட்கிழமை சென்னையிலுள்ள நுங்கம்பாக்கத்தில் அங்குள்ள பகவத்ஸந்நிதியில் இதே மாதிரி ஒரு கூட்டம் நடைபெற்றது. சென்னை ஹைகோர்ட்டு வக்கீல் ஸ்ரீ உ. வே. ஸி. எஸ். வெங்கடாசார்யர் ஸ்வாமி அக்ராஸநம் வஹித்துப் பேசுகையில் ஸ்ரீ விசிஷ்டாத்வைதத்திற்கும் மற்ற வைதிக மதங்களுக்குமுள்ள வித்யாஸத்தை விஸ்தாரமாக எடுத்துச் சொன்னார். பிறகு ஸ்ரீ. உ. வே. குடவாசல் ஸ்வாமி ஹிதம் புருஷார்த்தமென்றால் என்ன வென்பதை உபபாதனஞ் செய்தார். ஹைகோர்ட்டு வக்கீல் ஸ்ரீ. உ. வே. நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி ஸ்ரீ. வை. ஸி. ஸபையை

யும் "தீபிகை"யையும் ஆதரித்து அதன்மூலம் ஸம்ப்ரதாயத்தை அபிவ்ருத்தமாக்கவேண்டுமென்று பிரார்த்தித்த பின் கூட்டம் கலைந்தது. இந்த எல்லாவிடங்களிலும் ஸ்வாமிகள் விசேஷ க்ருபையுடன் ஸபையை ஆதரித்தது ஸபை நிர்வாகிகளுக்கு விசேஷ தைர்யத்தைக் கொடுத்தது. இவ்வித ஆதரவு மற்ற விடங்களிலுமேற்படும்பக்ஷத்தில் நமது ஸம்ப்ரதாய அபிவிருத்திக்கு அது விசேஷ ஹேதுவாகும்.

ஸ்ரீ. வை. ஸி. ஸபை கார்யதர்சி.

## ஸ்ரீ வாநமாமலை ஜீயர்.

ஸ்ரீ. உவே. பத்திராதிபருக்கு: போன தீபிகையில் தெரிவித்திருந்தபடி நாளது ஆவணிமீ 26உ ஞாயிற்றுக்கிழமைதினம் முதல் ஸ்ரீ வாநமாமலை மடத்தின் முதல் ஸ்வாமியும் ஸ்ரீ மணவாள மாமுனிகளின் அஷ்டதிக் கஜங்கள் என்று சொல்லப்படுகிற ஆஸ்தானங்களில் முதலாவதான ஸ்ரீ ஆதி வானமாமலை ஜீயர் ஸ்வாமிகளின் உத்ஸவம் பத்து தினங்கள் நடத்தப்பட்டு புரட்டாசிமீ 4-ந் தேதி செவ்வாய்க்கிழமை சாற்றுமுறை யாச்சுது. இந்த பத்து நாளும் மத்யாஹ்நம் மூன்று மணிக்கு மேல் ஆறுமணி பர்யந்தம் ஒவ்வொரு நாளும் வித்வத் சதஸ் நடந்தது. அநேக மகா வித்வான்கள் உடய வேதாந்த விஷயங்களில் உபன்யாஸம் செய்தார்கள். ஸ்ரீ உப. குறிச்சி சேஷாத்ரியாசாரியர் இஞ்சிமேடு ரெங்கநாதாசாரியர் தேசிய வரதாசாரியர் திருமழிசை ஸ்ரீநிவாஸாசாரியர் சேனங்குளம் வரதாசாரியர் வாநமாமலை சடகோபய்யங்கார் திருமழிசை ராமாநுஜாசாரியார், விளக்குடி சீமாசாரியர் திருமழிசை திருமலாசாரியர் கொடவாசல் நரஸிம்மாசாரியர் திருமங்கலம் நரஸிம்மாசாரியர் தோட்டாலம் வேணுகோபாலாசாரியா பிரதிவாதி பயங்கரம் கிருஷ்ணமாசாரியர் முதலானவர்களால் ஸ்ரீ ஜீயர் ஸ்வாமி அக்கிராஸநம் வஹிக்க 20 உபந்யாஸங்கள் நடந்தன. வேதாந்தத்தில் ஆநந்தமயாதிகரணம், பக்தி மார்க்கம், ப்ரபத்தி மார்க்கம், ஆழ்வார் வைபவம், மடலெடுக்கை, பாரதந்த்ர்யம், ஆசார்ய சிஷ்யநிஷ்டைகள், ஸீதாப்பிராட்டியின் நிஷ்டை, மைத்ரேய ப்ராஹ்மணம் முதலிய விஷயங்களைக் குறித்து கேட்போர் எல்லாரும் மகா நந்தத்தை அடையும்படி அம்ருதவர்ஷம்போல உபந்யாஸங்கள் செய்யப்பட்டன. உபன்யாஸம் செய்தருளின ஸ்வாமிகள் தவிர இதரவித்வானகளும் எழுந்தருளியிருந்தார்கள். ஆதி ஜீயர் ஸ்வாமியின் சரித்திரத்தைச் சுருக்கமாய் ராமாநுஜாசார்யர் ஸம்ஸ்க்ருத சுலோகங்களைக்கொண்டு தமிழில் மிகவும் நன்றாய் ஸாதித்தார். 5-ந்தேதி புதன்கிழமை வித்வான்களுக்கு ஸம்மானம் ஸமர்ப்பிக்கப்பட்டது. ஜீயர் ஸ்வாமி ஆழ்வார் ப்ரஹ்மாநுபவம் பண்ணின பிரகாரங்களில் கடல் ஞாலம் என்கின்ற திருவாய்மொழியில் வாமதேவர் பிரஹ்லாதன் முதலானவாள் அனுபவித்த அனுபவம்போல ஸர்வேச்வரனுடன் அபேதபாவனை யாய் அனுபவித்துப் பேசின பாசுரங்களை வெகு நன்றாயும் சுருக்கமாயும் அருளிச் செய்து சதஸ் முடிவுபெற்றது. நித்யம் வெகு பேர்கள் உபந்யாஸங்களைக்கேட்டு ஆனந்திக்க வந்திருந்தார்கள். திருவல்லிக்கேணி மடத்தில் ஸகலருக்கும் உபயோகப்படும் பொருட்டு ஒரு புஸ்தகசாலை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. ஸ்தோத்ர பாடம் புருஷஸூக்தம் முதலிய உபயுக்தமான விஷயங்களைச் சிறு பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்கும்படிக்கு பாடசாலையொன்று மடத்தில் நடத்தும்படி ஸ்ரீ ஸ்வாமிகளால் ஏற்பாடு செய்யப்பட்டது.

ஒரு ஆஸ்திகன்.



ஸ்ரீ:

## பஞ்சாங்க ஸங்க்ரஹம்.

ப்ரபவஹூ ஐப்பசிமீ (1927 அக்டோபர்—நவம்பர்.)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அக்டோ 17 | ஐப்ப 1 | தி. | ஸப். 18-54 | திரு. 1-22 | அஹஸ் 29-16 | துலா ஸங்க்ரமணம் 24-0. துலா க்ருஷ்ண அஷ்டமி. |
| ,, 18 | ,, 2 | செ. | அஷ். 18-23 | புந. 2-4 | ,, 29-15 | துலா க்ருஷ்ண நவமி. |
| ,, 19 | ,, 3 | பு. | நவ. 19-35 | பூ. 4-22 | ,, 29-15 | அதிதி. |
| ,, 20 | ,, 4 | வி. | தச. 21-54 | ஆ. 7-45 | ,, 29-15 | துலா க்ருஷ்ண தசமி. |
| ,, 21 | ,, 5 | வெ. | ஏ. 25-15 | மக. 12-11 | ,, 29-10 | ஏகாதசி விரதம், திதி. |
| ,, 23 | ,, 7 | ஞா. | த்ர. 34-43 | உத். 23-48 | ,, 29-8 | நரகசதுர்தசி ஸ்நாநம். |
| ,, 24 | ,, 8 | தி. | ச. 40-1 | ஹஸ். 30-15 | ,, 29-8 | தீபாவளி பண்டிகை. |
| ,, 25 | ,, 9 | செ. | அமா 45-28 | சித். 36-48 | ,, 29-3 | அமாவாஸ்யை. |
| ,, 30 | ,, 14 | ஞா. | பஞ். 53-44 | மூ. 57-22 | ,, 28-55 | மணவாள மஹாமுநிகள் திரு. |
| நவம்பர். 2 | ,, 17 | பு. | அஷ். 51-23 | திரு. 55-2 | ,, 28-49 | பொய்கை ஆழ்வார் திரு. |
| ,, 3 | ,, 18 | வி. | நவ. 46-48 | அவி. 52-8 | ,, 28-49 | பூதத்தாழ்வார் திரு. |
| ,, 4 | ,, 19 | வெ. | தச. 41-37 | சத. 48-40 | ,, 28-47 | பேயாழ்வார் தி. |
| ,, 5 | ,, 20 | ச. | ஏகா. 35-57 | பூரட். 44-42 | ,, 28-45 | ஏகாதசி வ்ரதம் திதி. |
| ,, 8 | ,, 23 | செ. | சது. 18-1 | அச். 32-2 | ,, 28-40 | சதுர், பௌர், திதித்வயம். |
| ,, 15 | ,, 30 | செ. | ஸப் 54-50 | பூச. 22-37 | ,, 28-32 | துலா க்ருஷ்ண ஸப்தமி. |
| ,, 16 | கா. 1 | பு. | அஷ் 56-59 | ஆ. 25-44 | ,, 28-30 | வ்ருச்சிக ஸங், 18-7 வ்ருச்சிக க்ருஷ்ண அஷ்டமிதிதி |

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

---

யோऽநக: ப்ரதிபத்ய ஸஹ வாதி ஸிரோ ப்ரஸத்ய
ஸஞ்ஜீவயந்நிகிலசக்தி யத: ஸ்வயந்தா ।
கந்யாம் ச ஸத்த்வஜ்ஞாந ஸ்ரவணஸுமாதீம்
ப்ராணாதிகோ ஸமவதே பாராசர்யாய தஸ்மை ॥

# பத்ராதிபரின் குறிப்புகள்.

**ஹிந்துமதச் சீர்திருத்தம்.**

ஸ்வல்ப காலமாக நமது தேசத்து நிரூபகர்களில் சிலர், நமது மதஸம்பந்தங்களான கொள்கைகளிலும் அநுஷ்டாநங்களிலும் தோஷதுஷ்டங்களான சில அம்சங்கள் இருக்கின்றனவென்றும், அவைகளை விலக்கி நமது மதத்தைச் சீர்திருத்தம் செய்தாலொழிய அது ஜநங்களுக்கு உபகாரகமாக மாட்டாதென்றும் சொல்லிக்கொண்டு, அம்மாதிரியான சீர் திருத்தங்களைச் செய்வதற்காகத் தீவ்ரமான ப்ரயத்நங்களைச் செய்து வருகிறார்கள். உபந்யாஸங்களின் வழியாகவும் ஸ்வாநுஷ்டாநத்தின் வழியாகவும் இந்தச் சீர்திருத்தங்களின் ஆவச்யகதை அவர்களால் உபதேசிக்கப்பட்டு வருகின்றது. ஸ்வபாவத்தால் எவ்வித நிர்பந்தங்களையும் ஸஹியாமலும் பாஹ்யாந்தர ப்ரவ்ருத்தியால் நமது சாஸ்த்ர நிர்பந்தங்களுக்கு அபரிசிதர்களாயுமுள்ள பாலர்களையே இவர்கள் இம்மாதிரியான உபதேசத்திற்கு முக்யமான பாத்ரமாகச் செய்கிறார்கள்; அந்த உபதேசங்களும் அவர்களிடத்தில், பள்ள மடையில் நீர் பாய்வது போல ஸுலபமாக ப்ரவேசிக்கின்றன. உபதேசிப்பவர்கள் ஸ்வயம் உண்மையை அறிந்து, அந்த உண்மையையே மற்றவர்களுக்கு உபதேசிக்கும் பக்ஷத்தில் அவர்களுடைய ப்ரவ்ருத்தியைப்பற்றி நாம் சோகிக்கமாட்டோம்; அந்த உபதேசம் எவ்வித இடையூறுமின்றித் தீவ்ரமாகப் பலிப்பதையும் நாம் ஆநந்தத்துடன் ச்லாகிப்போம். ப்ரக்ருத விஷயத்தில் வஸ்து ஸ்திதி அம்மாதிரி இல்லையே என்பது தான் நம்மை வருத்துகின்றது.

நமது அநுஷ்டாநங்கள் ஸகல அம்சங்களிலும் தோஷமற்றவைகள் என்று நாம் சொல்லத் துணியோம். அவை நமது முன்னோர்களால் சாச்வத ச்ரேயஸ்ஸுக்கு மார்க்கமென்று ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும் கால வைகுண்யத்தால் அவை மாலிந்யத்தைச் சில அம்சங்களிலாவது அடைந்



திருக்கக்கூடும். தவிரவும், நாம் ஸங்குசிதமான ஜ்ஞாந சக்தி முதலியவைகளை உடைத்தாயிருக்கிறபடியால், நம்முடைய ஸம்பர்க்கத்தைப் பெற்றிருக்கும் காரணத்தால் அந்த மார்க்கம் சிற்சில அம்சங்களிலாவது தனது குணபாகங்களை இழந்து விபரீதமான தோஷங்களுக்குப் பாத்ரமாகியுமிருக்கலாம். மநுஷ்யன் கையில் அகப்பட்ட எந்த வஸ்துவும் தோஷதுஷ்டமாகி விடுகின்றது என்பது ப்ரஸித்தமன்றோ?

“யம் ப்ராப்யாதிபவித்ராணி வஸ்த்ராண்யாஹரணாநி ச ।
அசுசித்வம் க்ஷணாத்யாந்தி”

என்னும் ந்யாயப்படி க்ஷணமாத்ரமான நமது யோகமும் அதிபரிசுத்தமான வஸ்துவையும் அசுத்தமாக்க வல்லதாகும். ஆனால், அப்படிப்பட்ட அசுத்தி எவ்விடத்தில் தென்படுகின்றது? எதைப் பரிஷ்கரித்தால் நமது மதம் பரிஷ்க்ருதமாகும்? என்பதைத் தவறாது நிர்ணயிக்க, நமது மதத்தை நன்றாகப் படித்தவர்கள் சக்தர்களே தவிர, இவர்களைப் போன்ற கேவல நிருபகர்கள் சக்தராகார்.

இவர்களுடைய அந்தர்க்கதமான எண்ணம் ஸாதுவாக இருந்த போதிலும், வெளியில் தென்படும் ப்ரயத்நம் நமது வர்ணாச்ரம தர்மங்களை நசிப்பிப்பதிலேயே நோக்கமுள்ளதாகத் தென்படுகின்றது. இந்த நோக்கம் அவர்களுடைய உண்மையான கருத்தாக இருந்தால், அது மிகவும் விபரீதமாக பர்யவஸிக்கும் என்பதில் எவ்வித ஆக்ஷேபமும் இல்லை. நமது மதத்திற்கு அஸாதாரணமாயிருக்கும் விசேஷம் முழுவதும், நமது ஸ்ம்ருதிகளிற் சொல்லப்பட்டுள்ள வர்ணாச்ரம தர்மாநுஷ்டாநமே. அதற்கு நாசம் ஸம்பவித்தால் நமது மதமே நாசமாகிவிட்டதென்று சொல்லலாம். அநேக கோடி ஜந்மங்களாக நம்மிடம் ஏறியிருக்கும் வாஸநையை ஒருவாறு நிவ்ருத்திப்பித்து, அபவர்க்க மார்க்கத்திற்குப் ப்ரபலிஷ்ட சத்ருக்களாயுள்ள காம க்ரோதங்களை நசிப்பிக்க வேண்டுமானால், நமக்கு இயற்கையாக ஏற்பட்டிருக்கும் கர்மங்களை அநுஷ்டிப்பதைக் காட்டிலும் சிறந்த மார்க்கமும் உண்டோ? இந்த்ரிய வ்யாபாரத்திற்கு அநுரூபமான சாஸ்த்ரீய கர்மாநுஷ்டாநங்களில் ப்ரவ்ருத்தியாமல், கேவலம் மாநஸிகமாக மாத்ரம் இந்த்ரியங்களை நிரோதிக்க ப்ரவ்ருத்தித்தால், அந்த ப்ரவ்ருத்தி ஸபலமாகுமோ?

“இந்த்ரியாணி ப்ரமாதீநி ஹரந்தி ப்ரஸபம் மந:” என்றும்,
“அஸம்சயம் மஹாபாஹோ மநோ துர்நிக்ரஹம் சலம்”

என்றும் ஸ்ரீபகவாந், மநஸ்ஸின் துர்நிக்ரஹத்தன்மையை ப்ரஸ்தாவித்து விட்டு

"சுலஸ்ஂ யதாத்மநா யொமொ ந-ஹ்ஷாவ ஜுஷி ஜெ உதி:।
வஸூாத்மநா த-ஂ யததா ஸகெூாஉவாஷு-ஂஉ-ஂவாயத: ॥"

என்று அந்தப் பகவானே, அப்படிப்பட்ட துர்நிக்ரஹமான மநஸ்ஸை அடக்குவதற்குப் பகவதாராதநரூபமாகச் செய்யப்படும் கர்மாநுஷ்டாநமே உபாயம் என்று ஒரு உபாயத்தையும் காண்பித்திருக்கிறாரன்றோ? யுக்திக்கும் அநுபவத்திற்கும் ஒத்திருக்கும் இந்த மார்க்கத்தைக் கெடுக்க ப்ரயத்நப்படுவதும் சீர்திருத்தமாகுமோ?

இவர்களின் முக்ய உபதேசங்களாவன—அஹிம்ஸை அஸ்தேயம் ஸத்யம் இவை முதலிய ஆத்ம குணங்களைத் தேடுவதே மநுஷ்யர்களின் முக்யமான தர்மமாம்; ச்ராத்தம் ஸந்த்யாவந்தநம் முதலிய கர்மாநுஷ்டாநங்கள் அமுக்யமாம்; இந்த அமுக்யத்தை அநாதரிப்பதால் எவ்வித தீங்கும் நேராதாம். அஹிம்ஸை முதலிய ஆத்மகுணங்கள் சிறந்தவை என்பதில் ஆக்ஷேபமில்லை. ஆனால் அவை நினைத்த மாத்ரத்தில் லப்தமாகிவிடுமோ? சரியானபடி கர்மாநுஷ்டாநத்தைச் சிரகாலம் அப்யஸித்து, அதனால் ஒரு வித தேர்ச்சியைப் பெற்றாலன்றோ ஜந்மாந்தர வாஸநையால் கிடைத்திருக்கும் ஹிம்ஸை முதலியஅநாத்ம குணங்களிலிருந்து நாம் நம்மை நிவ்ருத்தித்துக் கொள்ளக் கூடும்? அப்படிக் கில்லாமல் ஆரம்பத்திலேயே நாம் அந்த உந்நத பதவிக்கு ஆசைப்படுவது, அக்ஷராப்யாஸத்தை அநாதரித்து ஆரம்பத்திலேயே சாஸ்த்ராப்யாஸத்தை அபிலஷிப்பதைப்போல பரிஹாஸாஸ்பதமே யாகும்.

இரண்டாவது—காலம் க்ரூரமாகி விட்டதாம்; கர்மங்களில் நாம் மக்நராக இருந்தால், இதர ஜநங்கள் நம்மை நகைப்பித்து விடுவார்களாம்; ஆகையால் கர்மங்களெல்லாவற்றையும் த்யஜித்து விட்டு மற்றைத் தேசத்தவர்போல நாமும் விச்ருங்கலராக ஸஞ்சரித்தாலொழிய நமக்கு நல்ல கதி நேராதாம். கர்மங்களிலேயே நாம் மக்நராக இருக்கவேண்டுமென்று நமது சாஸ்த்ரம் சொல்லவில்லை. தேஹதாரணத்திற்கும் குடும்ப போஷணத்திற்கும் லோபம் நேராமல் எவ்வளவு தூரம் சாஸ்த்ர விதிகளுக்கு உட்பட்டு நடப்பது ஸாத்யமாக இருக்கின்றதோ அவ்வளவு தூரம் எவ்வித வஞ்சனையுமின்றிக்கு ஒருவன் நடந்து வந்தால், அவசிஷ்டமான அம்சத்தை ஸ்ரீசரண்யன் தனது க்ருபையால் பூர்த்தி செய்துகொள்ளுகிறான் என்றே சாஸ்த்ரம் சொல்லுகின்றது.

"ஸக்ருஉயிக்ருதெதூைவ ஸாஹூ வ்ருவ்ருதெ; சுஸக்ருவதூா கா-ணெ ஷொஷா ஹாவாக"



[சக்தனைக் குறித்தே சாஸ்த்ரம் ப்ரவ்ருத்திக்கின்றது; அசக்தன் விதி விஹிதத்தையும் அநுஷ்டியாவிடில், அது எவ்வித தோஷத்தையும் ஆவஹிக்க மாட்டாது] என்பது சாஸ்த்ரத்தின் ஹ்ருதயம். தவிரவும், ஒவ்வொரு கர்மத்திலும் முக்ய கல்பமென்றும், அநுகல்பமென்றும், முக்ய அநுகல்பங்களுக்குப் பலத்தில் பாஸ்பரம் வாசியில்லையென்றும் சாஸ்த்ரம் சொல்லவில்லையா? ஆகையால் அவரவர்கள் சக்திக்குத் தக்கபடி கர்மாநுஷ்டாந விதிகளை அநுஷ்டித்து வருவது எவ்விதம் பயத்திற்கு ஹேதுவாகும்?

மூன்றாவது—'நாம் கர்மங்களை அநுஷ்டித்து வரும்பொழுது, கேவலம் தந்த்ரமாகவே அவைகளை அநுஷ்டித்து வருகிறோமே தவிர 'நாம் என்ன செய்கிறோம்?, எதற்காகச் செய்கிறோம்? நாம் சொல்லும் மந்த்ரத்தின் அர்த்தம் என்ன?' இத்யாதியான ஜ்ஞாநத்துடன் அநுஷ்டிக்கவில்லையே. இப்படி அநுஷ்டிப்பது நிஸ்ஸாரமாக இருப்பதால் அது எவ்விதத்தில் ச்ரேயஸ்கரமாகும்? இவ்விதம் அநுஷ்டிப்பதைக் காட்டிலும் அவைகளை த்யஜித்து விட்டால் என்ன?' என்பதும் அவர்களுடைய ப்ரச்நங்களுள் ஒன்று. அர்த்த ஜ்ஞாநத்துடன் மந்த்ரங்களை உச்சரித்து ஸாரவத்தாகக் கர்மங்களை அநுஷ்டிப்பதே உத்தம கல்பம். அப்படிப்பட்ட ஜ்ஞாநத்தை ஸம்பாதித்துக்கொள்ளவும் கர்மங்களை ஜ்ஞாந புரஸ்ஸரமாக அநுஷ்டிக்கவும் சக்தி முதலானவற்றை உடையவர்கள் விஷயத்தில் கேவலம் தாந்த்ரிகமான அநுஷ்டாநம் நிஷ்ப்ரயோஜநமே. கோயில்களிலோ, க்ருஹங்களிலோ, நித்ய கர்மங்களிலோ, வேறு கர்மங்களிலோ, எல்லாவற்றிலும் சக்தர்கள் ஜ்ஞாநத்துடனே ப்ரவ்ருத்திக்கவேண்டுவது அவச்யமே. ஆனால், அசக்தர்கள் விஷயத்தில் ஸாமாந்ய ஜ்ஞாநம் போதுமென்று அதி வாத்ஸல்யத்துடன் கூடிய நமது சாஸ்த்ரம் சொல்லுகின்றது. அவர்கள் விஷயத்தில் கருணாநிதியாயுள்ள சரண்யன், பலத்தில் வாசியில்லாமலே அவர்களை அநுக்ரஹிக்கிறான் என்பது நிச்சயம். இது தான் இதுவிஷயமாக சாஸ்த்ரத்தால் சொல்லப்படுகின்றது. கர்மங்கள் ஸப்ரயோஜநமாக இருக்கும் பொருட்டு ஸாத்விகமாகவே அவை செய்யப்படவேண்டுமென்று, (அதாவது பலாபிஸந்தி இன்றிக்கே செய்யப்படவேண்டுமென்று) முறையிடும் சாஸ்த்ரம், கேவலம் தாந்த்ரிகமான அநுஷ்டாநத்திற்கு வேறு எவ்விதத்தில் இடம் கொடுக்கும் என்பதை நமது நிரூபகர்கள் சற்று ஆலோசிக்க வேண்டும். தவிரவும், ஜ்ஞாந புரஸ்ஸரமான கர்மாநுஷ்டாநம் இக்காலத்தில் எவ்விடத்திலும் தென்படாததால் கர்மாநுஷ்டாநத்தையே த்யஜித்து விடுவது நலம் என்று அவர்கள் வாதிப்பது சிறு பிள்ளை வார்த்தை போலத் தோன்றுகிறது. அம்மாதிரியான த்யாகம் மதத்தின் சீர்திருத்தமாகுமோ?

நான்காவது—'வஸ்த்ரம் முதலானவற்றைத் தரித்துக்கொள்வதற்கும் மதத்திற்கும் ஸம்பந்தம் என்ன? தேஹத்தை ஆச்சாதநம் செய்து கொள்வதிலும், மயிரை வெட்டிக்கொள்வதிலும் ஆத்ம ச்ரேயஸ்ஸை ஸாதித்துக் கொடுக்கும் அம்சம் எவ்விடத்தில் தென்படுகின்றது? இவையெல்லாம் தேச கால ஸௌகர்யங்களை உத்தேசித்து எவ்வித மத ஸம்பந்தமுமின்றிக்கே நம்மைப் போன்ற மநுஷ்யர்களாற் செய்யப்பட்ட கட்டுப்பாடுகள் அல்லவா? இவைகளை இக்காலத்துக்கும் இத்தேசத்துக்கும் தகுந்தபடி நாம் ஏன் மாற்றிக்கொள்ளக் கூடாது? கேவலம் பூட்ஸ் தொப்பி முதலியவற்றைத் தரித்துக்கொள்வதாலும் க்ராப் செய்து கொள்வதாலும் ஒருவன் ப்ரஷ்டனாகி விடுகிறான் என்று சொல்வது ந்யாயத்திற்கு ஒத்ததா?' என்றும் அவர்கள் கேட்கிறார்கள். உண்மையாகவே இம்மாதிரியான பாஹ்யவேஷத்தினால் ஆத்ம ச்ரேயஸ் தடைபட்டு விடுகின்றது என்று சொல்வது ந்யாய்யமாகாது தான். ஆனால் இதில் விசாரிக்கவேண்டிய அம்சம் வேறொன்று இருக்கின்றது. பரம்பரையாக நம்முடைய பெரியோர்களிடமிருந்து நமக்குக் கிடைத்திருக்கும் நடை உடை பாவனைகளுள் எவைகள் தோஷதுஷ்டங்களாக இல்லையோ அவைகளை மாற்றுவதில் நமக்கு என்ன லாபம் என்பதை நாம் சற்று ஆலோசிக்க வேண்டும். துஷ்டங்களாக இருக்குமவைகளை மாற்றுவதற்கு நாம் அதிகாரிகளே யாயினும், அதுஷ்டங்களாக இருக்குமவைகளை மாற்ற முயல்வது நிரர்த்தகமன்றோ? நமது வஸ்த்ர தாரணத்திலும் கேச தாரணத்திலும் என்ன தோஷத்தைக் கண்டு இம்மாதிரியான மாறுதல்களைச் செய்து கொள்ளச் சொல்லுகிறார்கள் என்பது நமக்குத் தெரியவில்லை. பெரியோர்களால் பஹுகாலமாக அநுஷ்டிக்கப்பட்டு வந்த ஒரு அநுஷ்டாநத்தை நிஷ்காரணமாகத் துச்சமென்று நினைப்பதில் ஒருவித தாமஸமான மநோ வ்ருத்தி மாத்ரம் தென்படுகின்றதே தவிர எவ்வித ஸாத்விக பாவமும் அதில் தென்படுவதாக நமக்குத் தோன்றவில்லை. ஸத்வோந்மேஷத்தால் கேவலம் ஜநோபகாரார்த்தம் ப்ரவ்ருத்திக்கும் இந்த ஸாத்விக நிரூபகர்கள் அம்மாதிரியான மநோ வ்ருத்தியை ஆதரிப்பது அதிமாத்ரம் அநுபபந்நமே. உத்பதமாக ப்ரவ்ருத்திக்க வேண்டும் என்னும் எண்ணமே அத்யந்தம் அஸாத்விகமாகையால், அது ஆத்ம ச்ரேயஸ்ஸைப் பாதிக்குமென்பதே நமது பீதி.

இன்னும் இம்மாதிரி விதவா விவாஹம் ப்ரௌடா விவாஹம் முதலிய அநேக விஷயங்களைப் பற்றியும் அவர்கள் சீர்திருத்தங்களைப் பலவாறாக உபதேசிக்கிறார்கள். அவை யெல்லாவற்றையும் பற்றி விசாரிப்பது இப்பொழுது ஸாத்யமன்று. ஒன்று மாத்ரம் நாம் அவர்களிடம் விஜ்ஞாபநம் செய்துகொள்ளத் துணிவோம், அது என்னவென்றால்—ஏற்கெனவே



கால வைகுண்யத்தால் நமது அநுஷ்டாநங்களெல்லாம் மாலிந்யத்தை அடைந்துவருகின்றன. எவ்வித வரம்பு மில்லாமலே காமசாரர்களாகவும் காம பக்ஷர்களாகவும் ஸஞ்சரிக்கும்படி நமது பாலர்களை நாம் பூர்ணமாக அநாதரித்து விட்டோம். இன்னும் ஸ்வல்ப காலத்தில் ப்ராயேண நமது நிரூபகர்கள் இச்சிக்கிறபடி ஸகலமும் நிறைவேறி விடலாம். ஆனால், அந்தப் பரிணாமம் ஜகத்திற்கு மஹத்தான தீமையை விளைவிக்குமாதலால், அதைத் தேடிக்கொள்வதில் நாமும் நிமித்தமாக வேண்டுமோ?' என்பது தான்,

* * *

சென்ற ஸஞ்சிகையில், நமது மடாதிபதிகளின் தர்மத்தைப்பற்றி விசாரிக்
கும்படி நமக்கு ப்ராப்தமாயிற்று. அப்பொழுது, கேவலம் பாம
ஸ்ரீ வானமா ரர்களாகவும் தைந்யத்தால் தேஹ யாத்ரையிலேயே நிரதர்
மலை மடத்து களாகவுமுள்ள நமது ஸாமாந்ய ஜநங்களுக்கு ஸ்தூலமாக
உபந்யாஸங்கள் வாவது ஆத்ம ச்ரேயஸ்ஸைப் பற்றி உபதேசித்து, பரம
காருணிகர்களான நமது ருஷிகளும் ஆசார்யர்களும் காண்
பித்திருக்கும் அபவர்க்க மார்க்கத்தை அவர்களுக்கும் எட்டும்படி செய்ய வேண்டியது அந்த மடாதிபதிகளின் முக்ய தர்மங்களுள் ஒன்று என்பதை நாம் விண்ணப்பம் செய்து கொண்டிருந்தோம். அந்தத் தர்மத்தை நமது மடாதிபதிகளுட் பலர் மறக்காமலே, அதன் நிறைவேற்றத்திற்கு அபேக்ஷிதங்களான முயற்சிகளைப் பஹுமுகமாகச் செய்து வருகிறார்கள் என்பதைப் பார்க்க நமக்கு மிக்க ஸந்தோஷம் ஜநிக்கின்றது. சற்றேறக்குறைய 10, 15 தினங்களாகத் திருவல்லிக்கேணியில் ஸ்ரீவானமாமலை மடத்தில் ஸ்ரீஸ்வாமி அநேக பண்டித ரத்நங்களைக்கொண்டு அநர்க்கங்களான உபந்யாஸங்களைச் செய்வித்து, அவைகளின் த்வாரா, ஏற்கெனவே பாக்யவசத்தால் பகவத்குணாநுபவத்தில் அபிருசியுள்ள ஸாத்விகர்களுக்கு அம்ருத வர்ஷம் போன்ற அநுபவாதிசயத்தையும், அப்படிப்பட்ட பாக்யத்திற்குப் பாத்ரமல்லாத அநேக ஸாமாந்ய ஜநங்களுக்கு அந்த அநுபவத்தில் தீவ்ரமான ஒருவித அபிருசியையும் ஜநிப்பித்து, எல்லாருக்கும் பெரியதொரு உபகார ரூபமான கைங்கர்ய விசேஷத்தைச் செய்து வருகிறார் என்பது இவ்விடத்தில் இருக்கும் ஆஸ்திகரெல்லாருக்கும் தெரிந்த விஷயம். இம்மாதிரியே இன்னும் சில மடங்களிலும் கைங்கர்யங்கள் நடை பெற்று வருகின்றன. இவைகள் உத்தரோத்தரம் அபிவ்ருத்தங்களாகி வரும்படி ஸ்ரீ சரண்யன் அநுக்ரஹிக்க வேண்டும் என்பது தான் நமது ப்ரார்த்தனை.

* * *

ஸ்ரீ அழகிய சிங்கருடைய உத்தார மஹோத்ஸவம்.

சென்ற ஆவணி மாஸம் 26வ ஞாயிற்றுக்கிழமை திநம் ஸ்ரீமதுராந்தகத்தில் ஸ்ரீ அஹோபிலம் ஸ்ரீ அழகிய சிங்கருடைய சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தின் உத்தார ரூபமான மஹோத்ஸவம், ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய திருவுள்ளம் உகக்குமாறு மிக்க சிறப்புடன் நடைபெற்றது. அன்றை திநம் ராத்ரி ஸ்ரீ கண்ணன் டோலோத்ஸவம் கண்டருளும் காலத்தில், ஸ்ரீ அழகிய சிங்கர், ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய வைபவ விசேஷத்தைப் பற்றிச் சில திவ்ய ஸூக்திகளைத் திருவாய் மலர்ந்தருளினர். அதை அநுஸரித்தே, ஸ்ரீ உப. கொடைவாசல் வித்வாந் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமியும், ஸ்ரீ அழகிய சிங்கருடைய நியமநத்தின் பேரில், ஒரு உபந்யாஸத்தைச் செய்தார். அக்காலத்தில் அவ்விடத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்த பாகவதர்களெல்லாரும் அந்த இரண்டு ஸூக்திகளையும் கேட்டு மிகவும் ஆநந்த பரிதரானார்கள்.

ஸ்ரீ அழகிய சிங்கருடைய திவ்ய ஸூக்திகளுள் ஒவ்வொரு அம்சமும் ஸாதிசயமாக இருக்கையிலும், ஒரு அம்சம் விசேஷித்த அதிசயத்துடன் கூடினதாக நமக்குப் புலப்பட்டது. ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹரூபியான பகவானுக்குப் பக்தர்கள் மீது இருக்கும் வாத்ஸல்யாதிசயத்தை உபபாதித்த பிறகு, எல்லாரும் அப்படிப்பட்ட வத்ஸலனான சரண்யனிடம் பக்தி ஸம்பந்நர்களாக இருக்க வேண்டுமென்று நியமித்து உபந்யாஸத்தை உபஸம்ஹரிக்கும் அவஸரத்தில், தம்மால் ப்ரதிதிநம் ஸ்ரீ சரண்யனிடம் விண்ணப்பம் செய்யப்படும் ப்ரார்த்தநைகளுள், 'பக்தர்களை ஸம்ரக்ஷிப்பது போலப் பக்தேதரர்களையும் ஏதாவது ஒரு வ்யாஜத்தை அவலம்பித்துப் பக்தியைக் கொடுத்து அநுக்ரஹிக்க வேண்டும்' என்பதும் ஒன்று என்று நியமித்தருளினர். இந்த ஸூக்தி அவருடைய ஸாத்விக பாவத்தையும் இதரர்களிடம் அவருக்கிருக்கும் வாத்ஸல்யாதிசயத்தையும் அந்யாத்ருசமாக ப்ரகாசிப்பிக்கின்றதன்றோ? நம்மைப் போன்றவர்கட்கு எப்பொழுதாவது ஸ்ரீ சரண்யனுடைய திருவடிகளில் ஒரு அபிருசி கத்யோதம் போல ப்ரகாசித்தால், அது இப்படிப்பட்ட கருணாநிதிகளான ப்ரார்த்தநையின் பலமாகவே இருத்தல் வேண்டும். இல்லாவிடில் நாம் எங்கே? அம்மாதிரியான அபிருசி எங்கே? முடவர் போன்ற நம்மீதும் கங்கா தீர்த்தம் போன்ற பகவதநுக்ரஹத்தை ப்ரவஹிப்பிக்க ஆவலுள்ள மஹான்களன்றோ உண்மையான ஆசார்யராவார்கள்?

—:o:—

ஸ்ரீ:

ஸ்ரீ கோமளவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீ அபர்யாப்தாம்ருத பரப்ரஹ்மணே நம:

# ஸ்ரீ ஆராவமுதாழ்வான் வைபவம்.

—:o:—

[இளையவில்லி தி. ஸ்ரீநிவாஸாசார்யர்.]

ஸ்ரீமத் க்ருதி கோடி ஸஹஸ்ர ஸூர்ய திவாகராதி
தேவாதிதேவ ப்ரணவஸ்த்த லோகநாதம் ।
அம்போதி ஸம்பவ ஸுதாஸ்ருதவல்லீ ஜாதம்
வந்தே பதாப்ஜ யுக ஹேம விமான ஶார்ங்கபாணிம் ॥

" இற்பிறப் பறியீ ரிவரிவ ரென்னீ
ரின்னதோர் தன்மையென் றுணரீர்
கற்பகம் புலவர் களைகணென் றுலகில்
கண்டவா தொண்டரைப் பாடும்
சொற்பொரு ளாளீர் சொல்லுகேன் வம்மின்
சூழ்புனற் குடந்தையே தொழுமின்
நற்பொருள் காண்மின் பாடிநீ ருய்ம்மின்
நாராயணா வென்னும் நாமம்." பெ. தி. 1–1–7.

ஸ்ரிய:பதியாய், அவாப்த ஸமஸ்த காமனாய், அநந்த கருட விஷ்வக்ஸேநாதி நித்யஸூரி ஸம்ஸேவ்யமாந சரண நளினனாய், பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகு மங்காதுஞ் சோராமே, தனிக்கோல் செல்ல வாணுய ரின்பம் மன்னி, திருமகள் மணமகள் நீளை முதலா வெல்லாத் தேவியரும் தன்னுடனே திகழ்ந்து நிற்க "யாயோத்யேதி பராஜிதேதி விஶ்ருதா நாகம்வரேண ஸம்ப்ருதா" என்றும், "தத்விஷ்ணோ: பரமம் பதம்" என்றும் "தமஸ:பரஸ்தாத்" என்றும் சொல்லப்படுகிற கலங்காப் பெருநகரில் கௌஷீதகி ப்ராஹ்மணாதிகளில் ஸஹஸ்ர ஸ்தூணாதி வாக்யங்களாலே ஓதப்படுகிற திருமாமணி மண்டபத்தில் "நிவாஸஶய்யாஸந" என்றும், 'சென்றால் குடையா' மென்னும் கணக்கிலே ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தோசித ஸர்வவித கைங்கர்ய கரணத்தாலேயே சேஷனென்று காரணப் பெயருடைய திருவநந்தாழ்வானாகிற திருப்பள்ளி மெத்தையிலே செல்வம் மல்கி வீற்றிருந் தருளும் எம்பெருமான் "மணிவர இவ ஶௌரே:" என்கிற

படி தன் கௌஸ்துப ஸ்தாநீயர்களான ஸகல ஜீவர்களும் நித்யஸூரி களைப்போலே நிரவதிக மஹாநந்த பூர்வக ஸ்வகைங்கர்ய ஸாம்ராஜ்யத்துக்கு இட்டுப் பிறந்து வைத்தும், அதை யிழந்து ப்ரளய காலத்தில் ப்ரக்ருதியில் லயித்து, உறைமெழுக்குப் பொன் போலே அநுபயுக்த ஸ்வரூப ஸ்வபாவர் களாயிருக்கு மிருப்பைத் தான் கண்டு "ஸஅிஃவிஶிஷாநு.வ௱ஊயெ ஜந்தூ நவமொகூ ஜாத நிவெ௨ூா" என்கிறபடி தயமாந மநாவாய் சாஸ்த்ரீ யங்களான தன் கைங்கர்யங்களைச் செய்து உஜ்ஜீவிக்கவேணுமென்று கர சர ணாதிகளைக் கொடுத்தவிடத்திலும் ஆறு கடக்கக் கொடுத்த தெப்பத்தை அவ் வாற்றின் நீர்வழியே கொண்டுபோய்க் கரை யேறாமல் ஆவாரார் துணையென் றலைநீர்க்கடலு ளழுந்தும் நாவாய்போல் பிறவிக்கடலுள் கிடந்து துளங்கு கின்ற சேதநர்கள் பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கு மழுக்கு டம்பும் இந்நின்ற வின்னீர்மை யினி யுறாது, ஒழிவில் காலமெல்லாம் முடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்து வாழலாம்படி உஜ்ஜீவிப்பிக்கத் திருவுள்ள மாய் "ஸம்ஜ௲ாநாஷெஹொகெ என்றும் "ஹெவகீ வூவெ௨ூஸம்யூாயா ஊவிஷ௨ூஂதழ" என்றும் சொல்லுகிறபடியே மநுஷ்ய ஸஜாதீயனாய் வந்து அவதரித்து, இடக்கை வலக்கை வாசியறியாத இடையர்கள் முதலானோர் நடுவில் கலந்து பரிமாறியும், தான் தாழநின்று தன் ஸௌலப்ய குணத்தை நன்கு வெளிப்படுத்தி, பின்னானோர் அறியாவண்ணம் தீர்த்தம் ப்ரஸாதித்துப் போன விபவாவதாரங்கள் போலன்றிக்கே, "ஸஅூ௨ூஸவ௨ ஸஹிஷ௩ ஶஅ௨கவஶாயீநாவிறூாதூ ஷிதிஃ" என்றும், "தமருகந்த தெவ்வுருவ மவ்வுருவம் தானே" என்றும், "நெஞ்சினால் நினைப்பான் யெவ னவனாகும்" என்றும் சொல்லப்படுகிற அர்ச்சா ஸமாதி யுக்தனாய் அதிலும் புனங் காக் கின்றவர்கள் அந்த அந்த புன மத்யங்களில் வந்து குடில்கட்டி வஸிக்கு மாப்போலே இந்த லீலாவிபூதியில் அர்ச்சாரூபியா யெழுந்தருளி இருக்கும் திவ்யதேசங்கள் பலவற்றுள், "யொநரஃ கூஂஹவொணெஷி நக்ஷணாஃ௨ ஊவிதிஷதி। கஶஷூஸஷூ மெகெவஷூஂ கிஃதாநூா விஹூதயஃ॥" இத் யாதி பரஸ்ஸஹஸ்ரங்களான ப்ரமாணங்களால் கொண்டாடப்படுகிற இத் திருக்குடந்தை திவ்யதேசத்தில் ஸ்ரீ ஆராவமுதாழ்வான் ஸ்ரீ பூமி நீளா கோமளவல்லீ நாயிகா ஸமேதனாய், அநந்த கருட விஷ்வக்ஸேந பராங்குச பரகால பக்திஸார யதிவர ஸ்ரீநிகமாந்த தேசிகாதி ஸஹிதனாய் ஸர்வாதிசாயி யாய் ஸர்வாபீஷ்ட பலப்ரதனாய் விளங்குகின்றா னென்பது யாவருமறிந்த விஷயமே.

அவன் பெருமையை ஆராய்ந்து பேசுமிடத்து "எல்லையிலாத பெருந் தவத்தோரும் தொல்லை யஞ்சோதி நிலைக்குங்கா லென்சொல் லள வன்று," என்றும் "நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சிடிந் துகும்" என்றும் "சூழ்த் தமரா் துதித்தா லுன் தொல்புகழ் மாசூணாதே" என் றும், "உன்னைப் புகழ்வெல்லாம் பெரும்பாலும் பட்டுரையாய்ப் புற்கென்றே காட்டும்" என்றும். "குடந்தைமேய குருமணித் திரளைப் புகழுந் தொண் டர் என்சொல்லிப் புகழ்வர்தாமே" என்றும் இப்படியாயிற்று தளர்ச்சி யுறுவது. அங்ஙன மிருக்க, அறிவிலா மனிசரின்கண்ணும் மிகவு மறிவிலி யான வடியேன், அவன் பெருமை பேசப் புறப்படுவது எங்ஙனம் கூடும்?



ஆனதால் பிரும்மாதி தேவர்களும் ரிஷிகளும் ஆழ்வா ராசார்யர்க ளும் ஸ்ரீ ஆராவமுதாழ்வானைக் கொண்டாடின ப்ரகாரங்களை உள்ளபடியே அநுபவித்தவர்களான பெரியோர்களால் அடியேனுக்கு உபதேசிக்கப் பெற்ற தில் அடியேன் க்ரஹித்த சில அம்சங்களை வெளியிடுகிறேன்.

மற்றைப்படி எல்லா திவ்யதேசத்து எம்பெருமான்க ளிடத்தும் அடியேனுக்குப் பக்தி விச்வாஸாதிகளில் யாதொரு தாரதம்ய மில்லையே யாகி லும் இவ்வெம்பெருமான் திருவடி நிழலின் கீழ்க் குடிபடியனா யிருக்கு மிப் பேறு பெற்றாரில் அடியேனு மொருவனானதால், முந்தர அவன் பெருமை பேசுவதில் ஓராசைபால் இங்ஙனம் ப்ரவர்த்தித்தே னல்லது வேறில்லை யென் பதையும் விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறேன்.

இவ்விஷயத்தில் "ஹாஶவெ ஶவெ விஹவமாணகஊ௨ாதி ஶாஹீ௨ணஃ। வஹாஅஃஷீத நிஸயீா ஆூாணாயா ஷிஶுவெதுஶெக" என்று மிறே ஒரு அபியுக்தர் ஓரிடத்தில் உதாஹரித்து மிருப்பது.

"ஹெவஂ ஶாஜூ௨ாயஶஂ விஷணுஂ யெவாவஹநாஃ வஶாயணஂ।
ந தெஷாஂ யஊஸாமொகூ ஹஅதெ நஶகஸ்கஸஃ॥"

என்கிற வாமந புராண ச்லோகமும் இவ்வெம்பெருமானையே நிர்த்தேசிக் கிறது. இச்லோகத்தில் சக்ரதர மென்றாவது கதாதர மென்றாவது பொது வாய் வ்யவஹரித்தலை விட்டு, விசிஷ்ய சார்ங்கதர மென்று ப்ரயோகிக்கப் பட்டிருக்கிறது நோக்கத்தக்கது.

ஹெவஂ—தேவமென்று வ்யுத்பத்தியாய் "தஊெவஹாஸ ஊநாஹர்தி ஸவ௨ஂ தஸ்ஹர்ஸா ஸவ௨ஹஂ விஹாதி. ஸஶயஃதஃ வஶொதிவொ ஜெஷூதீ ஷீ௨வூதெ, நாஶாயண வஶொஜெஷூதிஃ" என்றும், "நிறைந்தசோதி வெள் ளம் சூழ்ந்த" என்றும்; "சோதி வெள்ளத்தினுள்ளே யெழுவதோ ருரு வென் னெஞ்சுள் ளெழும்" என்றும் சொல்லுகிறபடியே நிரவதிக தேஜோ ரூபனா யிருக்கு மிருப்பை யன்றோ வெளியிடுகிறது? இப்படியுள்ள தேஜ ஸ்ஸை ஸேவித்த களியனும்,

"தோடவிழ் நீலம் மணங்கொடுக்கும்
சூழ்புனல் குடந்தைக் கிடந்த
சேடர்கொ லென்று தெரிக்கமாட்டேன்
செஞ்சுட ராழியுஞ் சங்குமேந்தி
பாடக மெல்லடி யார்வணங்கப்
பன்மணி முத்தொ டிலங்குசோதி
ஆடகம் பூண்டொரு நான்குதோளும்
அச்சோ வொருவ ரழகியவா!" [பெ. தி. 9–2–2.]

என்று கொண்டாடி யிருக்கிறார்.

ஶார்ங்கதந்வா—மற்ற ஆயுதங்கள் ஏந்தின அழகுபோலே யன்று காணும் சார்ங்க மேந்தின அழகிருப்பது. விற்பிடித்த கையுந் தானுமான இவ்வழகுவேறு. இது திவ்யதேசத் தெம்பெருமான்கள் ஒருவரிடத்து மில்லை யிறே. ஸஹஸ்ரநாமத்தில் நிகமந ச்லோகத்தில் 'ஶார்ங்கதந்வா' என்கிற பதந் தானும் யதார்த்தமாக வானது இவ்விடத்திலன்றோ? "ஶங்கப்ருந் நந்தகீ சக்ரீ ஶார்ங்கதந்வா கதாதர:" என்றால் உபசார உக்தி யன்றியில் உள்ளது உள்ளபடி ஓராயுதத்தாலும் குறைவின்றி தோற்றுகிறவர் இவ்வெம்பெருமானே யன்றோ? ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் ஶார்ங்கதந்வா இத்யஸ்ய வ்யாக்யாந வஸரே ஹாஸ்யகாராந்த் தத்ர: இந்த்ரியாதிஅஹங்காராத்மகம் ஶார்ங்கம் நாம தநுரஸ்ய இதி —என்று வ்யுத்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. இத்தையிறே ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனும் "ஆங்காரங்கள் சார்ங்க" மென்றதும்; இப்படி அஹங்காராத்மகமான வில்லை அடக்கியாளுபவன் இவனே யன்றி வேறில்லை யிறே. இவ்விஷயத்தில் பரதத்வ நிர்ணயம் பண்ணிப்போந்த ஸ்ரீ விஷ்ணு சித்தரும் ஸஹஸ்ரநாமம் முழுவதும் ஸ்ரீமதபர்யாப்தாம்ருத ப்ரதிபாதக மென்றுள்ள அர்த்தத்தைக் கருத்தில் கொண்டு திருப்பல்லாண்டு பாடு மளவில், 'ஆயிரநாமஞ் சொல்லி' என்றும், இறுதியில் 'சார்ங்க மென்னும் வில்லாண்டா' னென்றும் அருளிப்போந்தார்.

இப்படிப்பட்ட எம்பெருமானை அடைவதால் அவர்களுக்கு யம ஸாலோக்யம் கிடையா தென்பதும், அவர்கள் நகரத்தில் வீடு பெற்றாரில்லை யென்னுமிடமும் "ப்ரஹ்மஹத்யாதிபாபௌகா: மஹாபாதக ஸஞ்சயா: । கும்பகோணே ப்ரயாந்த்யஸ்ய விஷ்ணோர்தர்ஶநாத் க்ஷயம்" என்றும், "அஷ்டோத்தர ஶதஸ்தாந வைஷ்ணவ ஸ்தலோத்தமம் । விஷ்ணோஶ்ச தேஜஸாம் ஸாரம் கும்பகோணஸ்ய அக்ரிணி । அவமத்யாப்ய ஶதாவத்யா த்வஷ்டா ஸம்ஹிதோமஸி: । ப்ரஹ்மஹத்யாதயோ யோமா: ஸ்வர்ணஹத்யா தயஸ்ததா । வீரஹத்யாதயஶ்சைவ பாபஹத்யாதய ஸ்ததா । நஶ்யந்தி க்ஷணமாத்ரேண தர்ஶநாத் ஶார்ங்கபாணிந:" [கும்பகோண மாஹாத்ம்யம் 8-ம் அத்யாயம்] என்பதாலும், "அஸ்ய ப்ரஸாதே நைவ ஸர்வ ஸௌக்யாணாம் ஸௌக்யதே । அகாயே காலே நைவ ப்ராதாதா மந்த்ராஶ் । அவமத்யாவர்த்தம் ஸ்தலாநாம் ஸம்ஸ்ருஷ்டா ஸவந்தி" [கும்பமாஹா 52 அத்.] என்பதாலும், "க்ஷணம் க்ஷணார்த்தம் மதிவா கும்பகோணே வஸந்தி ய । முக்திர் ஹஸ்தகதா ஸதா ததா" என்றும், "மேஷ யதா த்ரி அர்வாசீநே அஸ்யாபி ஸ்ரீ ஸமவதா ரங்கராஜேந அநுக்ரஹ கும்பகோண மாஹாத்ம்ய ப்ரதிபாதநாவஸரே,—"தத ஸர்வ ஸர்வஶஸ்த்ர க்ஷேத்ரேஷு ஸர்வ ப்ருதி அந்யக்ஷேத்ரே க்ருதம்பாபம் புண்யக்ஷேத்ரே விநஶ்யதி । புண்யக்ஷேத்ரே க்ருதம் பாபம் வாராணஸ்யாம் விநஶ்யதி । வாராணஸ்யாம் க்ருதம்பாபம் கும்பகோணே விநஶ்யதி । கும்பகோணே க்ருதம்பாபம் கும்பகோணே விநஶ்யதி ।" என்கிற ப்ரமாணங்களாலும் ஸுஸ்பஷ்டம்.



ஸ்ரீ ரங்கநாதனும் ஸ்ரீ ஆராவமுதனும் ஒருவரே என்னுமிடம், "ஸ்ரீரங்கமாக்யம் விமாநஞ்ச ததைவ ஸ்திதிமேஷ்யதி । தமிமாநாக்ய ப்ர யஸ்மாத் ஸமக்ஷா பரமஸாநம் । ஸ்ரீமத்யமு ஸம்ஸ்தாநம் விமாநம் தேஜ ஸாம் நிதி । பத்மஸம்பதா மத்யே ஸோமதோ: கும்பகோணம்மமிஷ்யதி । யாவதா வதமதே அக்ரம் யாவமதமதிமேஷிநீ । தாவதக்ஷேத்ரே கும்பகோணே லோகாநாம் அநுக்ரஹகாம்யயா । ஸ்திதிமேஷ்யத்ய ஸந்தேஹ: விமாந மதிஸுந்தரம்" [கும்ப மாஹா 48 ம் அத்.] "வைகுண்டநாயஸ்ஸாக்ஷாத் ஶார்ங்கநாயோ மஹாப்ரபு: । ஸக ஸவதிர்ய பொலௌ லோகரக்ஷண ஹேதவே ॥" [கும்ப. மாஹா. 49-ம் அத்.] என்பவற்றால் விளங்கும்.

அவன் திருக்குடந்தைக்கு எழுந்தருளின பெருமை, "ஸாரயாமத டிமாஶ்ரித்ய யக்ஷஸ்தம் காமதம் நரணாம் । ஸ்ரீமத்ரங்க விமாநேந யத்ரமவதம் ஸம்ப்ரதம்ஸ்வஹம்ஸ் । ஸதாவஞ்சம் மிஸிஸ்வாதா ஸம்ஸ்திதம் தமிமாநத: । விஹிதய க்ஷணமாத்ரேண மிஸிதாம் தத்ர நாரத । ஸ்வஸம்க்ஷாந ஸ்ரோதேண பத்மயா ஶ்ரேஷ்ட ஸியமே । ஹேமநாதோ ஸந்தேஹஸ்ய விமாநம் ஸ்வபரிஸ்தம் । வைமாநிகைநாதைகேஶ்ச ஸ்தூய மாநம் விமாயஸா । அஷ்டாதப மஹாவாதய ரவை வேதத ரவைபவி । ஜிதந்த இதிபசைஶ்ச நமஸ்த இதி பாபகை: । நடிநதக ஸம்வேஶ்ச அநுப்ரவர்ஷிணீ தடாக । பஙவக ஹாமேயோஜநாநாம் விஷ்யமதே அதஷயே । ஹேம: தீர்த்தே மஹாவர்ணை ஹேமவம்கஜ மத்யமே । ஹேமநாதோ மநோஹஸ்தாநே ருக்ஷஸ்யாஸ்யாநந தோஷமரி: । அநஞ்சகொடி மணிஷு நதக்ஷதா நதஸுதர: । காமதேவி மவாநு தைத்யாநு ஜிஸ்வா ஶார்ங்கதந்வா ப்ரபு: । ஹேமீநுஶயநே. திவ்ய ஶயாந: கமலே

[illegible] ॥" என்னும் ச்லோகங்களால் அறியலாகும்.

இந்த க்ஷேத்ரத்துக்குக் கும்பகோண மென்று பெயர் வந்ததை "[illegible] ॥" [கும்ப மாஹா. 12-ம் அத்.] என் பதனால் காணலாம்.

இவ்வெம்பெருமானுக்கு அபர்யாப்தாம்ருதன் என்று பெயர் வந்தது, "[illegible] ॥" என்பதாலும், இங்குத் தக்ஷிணாயன உத்தராயண தேவதைகள் ஸமத்வம் பெற்றமை, "[illegible] ॥" [கும்ப. மாஹா. 30-ம் அத்] என்னும் ச்லோகங்களாலும் விவக்ஷிதம்.

இவ்வெம்பெருமானைக் காட்டிலும் சக்ரராஜன் வேறுபட்டவ ரல்ல ரென்னுமிடம், "[illegible] ॥" [கும்ப மாஹா 61 ம் அத்] என்பதால் விஸ்தரேண ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது.

இந்த க்ஷேத்திரம் வைகுண்டம் என்று தோற்ற ஸ்ரீ ஆராவமுதன் ஸந்நிதிக்குள் மண்டபம் திருமாமணி மண்டப மென்று வழங்கப்பட்டு வருகிறது.

மற்று முள்ள இடங்களில் ப்ரபந்நர்களுக்கு மாத்திர மன்றே எம் பெருமான் தன்னுடைச் சோதிக் கெழுந்தருளும் விஷயத்தில் '[illegible] ।' என்றும் 'நன்னில மாமது நற்பக லாமது நன்னிமித்தம் என்னலு மாமது' என்று, அயந த்வயத்திலும் உத்க்ராந்திக்குப் பெருமை பேசப்பட்டிருக்கிறது. இங்கு அப்படி "யன்றியில் நற்பா லயோத்தியில் வாழும் சாரசரம் முற்றவும் நற்பாலுக் குய்த்தனன்" என்கிறபடியே இத்திவ்யதேசத்தில் எத்தனையேனும் தண்ணியதான ப்ராணிகளுக்குங் கூட அயந த்விதய உத்க்ராந்தியிலும் யாதொரு பல வைஷம்ய மில்லாமை தோற்றி இருக்கிறது. இந்தப் பெருமை தோன்ற அர்ச்சனையில் இன்றளவும் '[illegible]' என்று வழங்கப் பட்டு வருகிறது. இந்த ப்ரஸித்தியை யெல்லாந் திருவுள்ளம்பற்றியே ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனும் 'ஆராத வருள முதம் பொதிந்த கோயில்' என்று அதாவது இவ் வைதிக விமாந அதிஷ்டாதாவான ஆராவமுதன் ப்ரதிஷ்டிதனா யிருந்த ஸ்தாநம் ரங்கவிமாந மென்று திருவரங்கத்தை அருளிச்செய்தார். அருளமுதம், தயையே அமுதவடிவு கொண்டு வந்தமை தோன்ற. தயாசகத்தின் இடையே "[illegible] ॥" என்றும், இறுதியில், "[illegible] ॥" என்றும் இவ்வெம்பெருமான் தயாகுணத்தை யன்றோ ஸ்துதி விஷயமாய் வைத்துக் கொண்டாடி யிருக்கிறார்.

இவ்வெம்பெருமானும் ஸ்ரீநிவாஸனும் அபிந்நர் என்னுமிடத்தை "[illegible] ।" [கும்ப. மாஹா 56-ம் அத்.] என்று ஸ்ரீ சார்ங்கராஜனே அருளிச் செய்திருக்கிறார்.

பின்னும் ரங்கநாத பாதுகா ஸஹஸ்ரம் பண்ண ஆரம்பித்த ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனுக்கு இரண்டு எம்பெருமானுக்கு முள்ள அபேதம் இடையிடையே 'ஶார்ங்கிணः பாதரக்ஷே' என்று இந்த அர்ச்சாவதாரத்தின் நினைவன்றோ வந்தது.

தவிரவும் ஸங்கல்ப ஸூர்யோதயம், மூன்றாவது அங்கத்தில் விவேகன் ஸுமதியைப் பார்த்துச் சொல்லுமிடத்தில், 'குழந்தாய்! அல்லாத மார்க்கங்களிலே போக்கு வரத்து நேரிடுமோ என்று நீ கலங்காதே; பரம புருஷார்த்தமான மோக்ஷோபாயத்தை ஒருத்தனை வ்யாஜமாக இட்டு உபதேசித்த கண்ணன் சரணாகதர்களான நம்மைக் கைவிடாது சார்ங்கதரனாய் வந்து நம்மை ரக்ஷிக்கிறான்' என்னுமதைச் சொல்லுமிடத்து, "ஸுகதிதவழ்வீஹி ஶ்ருணயிஷ்வா வ்யாதாநஸ்ய ஸமதிகாம்யே ஶாஸ்யபாரெ விஷாதெ:। உவநிஷத ஸுதாராஸூ அஜநஜ்ஜாவி முக்நோஶ்யஶாரண ஸுவமதா ஸஹாயதெ ஶாம்ஶயநா" என்று இவ்வெம்பெருமானை அஸாதாரண சிந்நத்தைக் காட்டி யன்றோ புகழ்ந்திருக்கிறார்.

தொட்டயாசார்ய க்ருத வைபவ ப்ரகாசிகையில், (85-வது ஶ்லோ) "ஸ்ரீ கஶ்ஹவொண வ்ஹூதீநி விஷ்ணாஸ்யாநாநி தொவைஷ ஸமோ ஹாராணி। முகாவ்ணஸ்ய ஶ்ருதிஶெவராயெஶாய: வ்ராவகாஷீந மாஶ ஹஜெதம்॥" என்கிற சுலோகத்தில் ப்ரகாசமாக ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகன் திருக்குடந்தை முதலாக வுள்ள திவ்ய தேசத்துக்கு எழுந்தருளி யிருக்கிறாரென்றிருக்க, யாரோ சிலர், ஸ்ரீ தேசிகன் இங்கு எழுந்தருளி மங்களாசாஸநம் செய்தருள வில்லையென்று சங்கிக்கு மதுவும் மிகவும் பொருந்தாததே.

ஸ்ரீ தேசிகன் திவ்ய ப்ரபந்தத்தின் உட்கருத்தை அறிந்து அதன் முக்கிய விஷயங்களைக் கருத்தில் வைத்து ப்ரபந்தஸார மென்று ஒரு ப்ரபந்தம் அருளிச்செய்தும், நாலாயிரத்தின் கண்ணும் ஸாரதமமான திருவாய்மொழிக்கு ஸார நிஷ்கர்ஷ ப்ரதிபாதகமாக த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளீ அருளிச்செய்ததில் ஆராவமுதன் பெருமையும் தெரிந்துதானே அருளிச்செய்திருப்பர். ஆராவமுதன் விஷயமாகத் தனித்து ஒரு ஸ்தோத்ரம் முதலியன அருளிச்செய்யாமையே, அவர் மங்களாசாஸநம் பண்ணவில்லை யென்பதற்குக் காரண மென்றால், உடையவர் முதலானோர் ஸ்ரீ வரதராஜனை மங்களாசாஸநம் பண்ணி யிருக்கிறாரென்று கேட்டிருக்க, அவர் விஷயமாக ஸ்தோத்ரம் செய்யாமைபற்றி உடையவர் முதலானோர் வரதராஜனை ஸேவிக்கவில்லை யென்று சொல்ல முடியுமா? தேசிகனும் ஒவ்வொரு காரணம்பற்றியே ஒவ்வொரு இடத்திலும் ஸ்தோத்ரம்

(இன்னும் வரும்.)



ஸாமாநாதிகரண்யமிதி ஹி தவிதः। தயா ஹேதயொரெ வெகஸ்யம் ஸம்வாதிதஸ்யாஹி:।

உவக்ரம விரோயஶ்வ ஸம்ஹார வாக்ய தாத்வய நிஶ்சயஸ் ந

---

தங்களையுடைய சப்தங்களுக்கன்றோ ஒரே வஸ்துவைக் குறிக்கும்பொழுது ஸாமாநாதிகரண்யத்தைச் சொல்லுகிறார்கள்? அப்படிப்பட்ட ஸாமாநாதிகரண்யமே நம்மால் இவ்விடத்தில் ப்ரதிபாதநம் செய்யப்பட்டிருக்கின்றது.

உவக்ரம............ப்ரஹ்மண:—தவிரவும், ஆரம்பத்தில் சொல்லப்பட்டுள்ள அர்த்தத்திற்கு விருத்தமாக, முடிவில் வரும் வாக்யங்களுக்குத் தாத்பர்ய நிச்சயம் செய்வது பொருந்தாது. ஆரம்பத்தில், "ததைக்ஷத பஹு ஸ்யாம்" [அது ஸங்கல்பித்

---

டும் வெவ்வேறே. 'அப்படி வெவ்வேறான விசேஷணங்களுடன் கூடியிருக்கும் ப்ரஹ்மம் ஒன்றே' என்னும் ஐக்யமே இவ்விடத்தில் சொல்லப்படுகிறது. இப்படிச் சொல்வது தான் ஸாமாநாதிகரண்யத்தின் லக்ஷணத்திற்குப் பொருந்தும் என்பது கருத்து.

பிந்நப்ரவ்ருத்தி நிமித்தாநாம்—இந்த வாக்யம் ஸாமாநாதிகரண்யத்தின் லக்ஷணத்தைச் சொல்கின்றது. ஒரு சப்தம் ஒரு வஸ்துவைக் குறிக்கின்றது என்பது அந்தச் சப்தத்திற்கு 'ப்ரவ்ருத்தி' என்று சொல்லப்படும். அப்படிக் குறிப்பதற்கு இந்தச் சப்தத்தால் சொல்லப்படும் அந்த வஸ்துவின் அஸாதாரண தர்மம் காரணம்; அது 'ப்ரவ்ருத்தி நிமித்தம்' என்று சொல்லப்படும். அந்தக் காரணங்கள், வெவ்வேறாக இருந்தால் அந்தச் சப்தங்கள் 'பிந்நப்ரவ்ருத்தி நிமித்தங்கள்' என்று சொல்லப்படும். அப்படிப்பட்ட இரண்டு சப்தங்கள் ஒரே பொருளை அவகாஹித்து நின்றால் அப்பொழுது அந்தச் சப்தங்களுக்கு ஸாமாநாதிகரண்யம் ஏற்படும் என்பது லக்ஷணவாக்யத்தின் அர்த்தம். 'நீலோ கட:' என்னும் இடத்தில் 'நீல' என்னும் சப்தத்திற்கு நீலரூபம் ப்ரவ்ருத்தி நிமித்தம்; 'கட:' என்னும் சப்தத்திற்கு கடத்வம் ப்ரவ்ருத்தி நிமித்தம். இந்த நிமித்தங்கள் இரண்டும் பிந்நங்கள்; அப்படிப் பிந்நங்களான ப்ரவ்ருத்தி நிமித்தங்களுடன் அந்தச் சப்தங்கள் இரண்டும் 'குடம்' என்னும் ஒரே பொருளைக் குறித்துக்கொண்டு நிற்கிறபடியால், அந்தச் சப்தங்களுக்கு ஸாமாநாதிகரண்யம் சொல்லப்படுகின்றது; இப்மாதிரியே 'தத்த்வம்' என்னும் இடத்திலும்.

உவக்ரம—இது வரையில் ஸாமாநாதிகரண்ய லக்ஷணத்தின் ஹாநி ஸம்பவிக்கின்றது என்னும் தூஷணம் சொல்லப்பட்டது. இப்பொழுது, மற்றொரு தூஷணத்தை ஸங்க்ரஹமாக ப்ரஸ்தாவிக்கிறார். அது என்னவென்றால் 'இந்த ஸத் வித்யை, உபக்ரமத்தில், ப்ரஹ்மத்தை ஸத்ய ஸங்கல்பத்வம் முதலிய விசேஷணங்களுடன் கூடியது என்று ப்ரஸ்தாவித்து விட்டு, உபஸம்ஹாரத்தில் அந்த ப்ரஹ்மம் அவித்யைக்கு ஆச்ரயமாகிறது என்று சொல்லுகிறது என்று விவரணம் செய்தால் [illegible] விரோதமாகுமே' என்பது தான்.



186776.

ருத்யதே | உபக்ரமே ஹி “ததைக்ஷத பஹு ஸ்யாம்” இத்யாதிநா ஸத்யஸங்கல்பத்வம் ஜகதேககாரணத்வஞ்ச உபதிஷ்டம்; தத்விரோதி ச அவித்யாஶ்ரயத்வாதி ப்ரஹ்மண: |

அபி ச ஶப்தஸ்ய தத்ஸம்ஸர்க விஶேஷ போதநக்ருத பத

தது ‘நான் பஹுவாகக் கடவேன்’ என்று] முதலான வாக்யங்களால் ப்ரஹ்மத்திற்கு ஸத்ய ஸங்கல்பத்தன்மையும் ஜகத் முழுவதற்கும் ஒரே காரணமாக இருக்கும் தன்மையும் சொல்லப்பட்டிருக்கின்றன. ‘ப்ரஹ்மம் அவித்யைக்கு ஆச்ரயமாக இருக்கின்றது’ இத்யாதியாகச் சொல்வதெல்லாம் அதற்கு விருத்தமன்றோ ?

அபி ச..........வாக்யஸ்ய—மேலும், ‘எவ்வித விசேஷமும் இல்லாமல் ஒரு வஸ்து உண்டு’ என்று சொல்வதற்குச் சப்தம் ப்ரமாணமாகமாட்டாது. ஏனென்

ததைக்ஷத— அந்த ப்ரஹ்மம் ஸங்கல்பித்தது; இதனுல் அதன் ஸத்யஸங்கல்பத்வம் வெளியிடப்படுகின்றது. பஹு ஸ்யாம்—பஹுவாகக் கடவேன். இதனுல் ஜகதேக காரணத்வம் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட ப்ரஹ்மம் நிர்விசேஷ சின்மாத்ரமாக இருந்துகொண்டு ஸதஸத்நிர்வாச்யையான அநாத்யவித்யையால் மறைக்கப்பட்ட ஸ்வரூபத்தை உடையதாய் ப்ரமித்துத் தன்னிடத்தில் நாநாத்வத்தைப் பார்க்கின்றது என்று சொல்வது பொருந்துமோ? பொருந்தாதாகையால் அப்படி அர்த்தம் சொல்வது பிசகு என்பது தான் ப்ரக்ருத தூஷணம்.

ஆஹத்ய, நிர்விசேஷ வஸ்து ஸித்திக்கு நாலு தூஷணங்கள் சொல்லப்பட்டன :—(1) ப்ரக்ருதத்தைப் பராமர்சிக்கும் ‘தத்’ என்னும் சப்தத்தால் அறியப்படும் குண கணங்கள் பாதிக்கப் படுகின்றன, (2) இரண்டு பதங்களுக்கும் லக்ஷணை சொல்லும் தோஷம், (3) ஸாமாநாதிகரண்ய லக்ஷணத்தின் ஹாநி, (4) உபக்ரம விரோதம்.

அபி ச—இனி நிர்விசேஷமாக ஒரு வஸ்து உண்டு என்பதற்கு ப்ரமாணம் இல்லை என்பது நிரூபிக்கப்படுகின்றது. ப்ரமாணங்களுள் ப்ரத்யக்ஷமும் சப்தமும் ப்ரதாநங்கள். அத்வைதிகள், நிர்விசேஷ வஸ்து ஸித்திக்கு ப்ரமாணத்தை நிரூபிப்பதில், ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தைக் காட்டிலும் சப்த ப்ரமாணத்திற்கு ப்ராபல்யம் சொல்லுகிறார்கள். அந்தக் காரணத்தினுல், அந்தச் சப்த ப்ரமாணத்தை ஸ்ரீ பாஷ்யகாரர் இவ்விடத்தில் முக்யமாக ப்ரஸ்தாவிக்கிறார். தவிரவும், சப்த ப்ரமாணம் ப்ரஹ்மத்தை ஸவிசேஷமாகவே அதிசயத்துடன் போதிக்கின்றது என்பது ஸ்ரீபாஷ்யகாரருடைய திருவுள்ளம்.

இவ்விடத்தில் செய்யப்படும் நிரூபணம் பின்வருமாறு காணப்படுகின்றது :—சப்தம் என்பது பதரூபமாகவும் வாக்யரூபமாகவும் ப்ரவ்ருத்திக்கின்றது. பதத்வம் என்பது ப்ரக்ருதி (பகுதி) ப்ரத்யயம் (விகுதி) இவைகளின் சேர்க்கையால் ஏற்படுகின்றது. ப்ரக்ருதி ப்ரத்யயங்களுக்கு அர்த்தபேதம் உண்டாகையால், அவைகளின் யோகத்தால்



வாக்ய ஸ்வரூபதயா ப்ரமாணபாவஸ்ய ஶப்தஸ்ய நிர்விஶேஷ வஸ்து போதநாஸாமர்த்யாத் ந நிர்விஶேஷ வஸ்துநி ஶப்த: ப்ரமாணம் | நிர்விஶேஷ இத்யாதிஶப்தாஸ்து கேநசித் விஶேஷேண விஶிஷ்டதயா அவகதஸ்ய

றல், சப்தம் என்பது பதம் வாக்யம் இவைகளின் ஸ்வரூபத்தால் ப்ரமாணம் பெற்றதாகின்றது; பதங்களின் ஸ்வரூபம் (ப்ரக்ருதி ப்ரத்யயங்களின் வழியாக) வெவ்வேறு அர்த்தங்களைப் போதிப்பதால் ஏற்படுகின்றது; வாக்யங்களின் ஸ்வரூபமும் அப்படிப்பட்ட அநேக பதங்களின் அர்த்தங்கள் ஒன்று சேரும் விசேஷத்தைப் போதிப்பதால் ஏற்படுகின்றது. இப்படிப்பட்ட பதவாக்ய ஸ்வரூபத்தால் ப்ரமாணம் பெற்றுள்ள சப்தம் எவ்விதத்திலும் நிர்விசேஷமான வஸ்துவைப் போதிக்கமாட்டாதாகையால் நிர்விசேஷ வஸ்துவை ஸாதிப்பதற்குச் சப்தம் ப்ரமாணமாகுமென்று சொல்வது ஸாத்யமில்லை. ‘நிர்விசேஷம்’ என்பது முதலான சப்தங்களோ வென்றல், ‘சிற்சில விசேஷங்களுடன் கூடின

ஏற்படும் பதம் விசேஷங்களுடன் கூடிய அர்த்தத்தையே ப்ரதிபாதிக்கவேண்டும். இவ்வாறு பதங்களே ஸவிசேஷ பரங்களானுல், அம்மாதிரியான பதங்களின் கூட்டமாகிற வாக்யத்திற்கு ஸவிசேஷபரத்வம் உண்டு என்பதைச் சொல்லவும் வேண்டுமோ ? ஆகையால் பத வாக்ய ரூபமாயுள்ள சப்தம் நிர்விசேஷ வஸ்துவை ஸாதிப்பதில் ப்ரமாணமாகமாட்டாது ; ப்ரத்யுத, ஸவிசேஷ வஸ்துவையே ஸாதிசயமாக ஸாதிக்கும்.

ஶப்தஸ்ய தத்ஸம்ஸர்க விஶேஷ போதநக்ருத பதவாக்ய ஸ்வரூபதயா ப்ரமாணபாவஸ்ய—இதைப் பின் வருமாறு பிரிக்கவேண்டும்:—‘ஶப்தஸ்ய அர்த்தபேதபோதநக்ருத பதஸ்வரூபதயா ப்ரமாணபாவஸ்ய’ ‘ஶப்தஸ்ய ஸம்ஸர்கவிஶேஷபோதநக்ருதவாக்யஸ்வரூபதயா ப்ரமாணபாவஸ்ய’. அர்த்தபேத போதநத்தால் ஏற்படுவது பதஸ்வரூபம்; அந்த அர்த்த ஸம்ஸர்க்க விசேஷ போதநத்தால் ஏற்படுவது வாக்ய ஸ்வரூபம். அம்மாதிரியான பத வாக்ய ரூபங்களாலேயே சப்தத்திற்குப் போதகத்வம் ஏற்படுகின்றது. ‘ப்ரமாணபாவ:’ என்பதற்குப் போதகத்வம் என்பது பொருள்.

ஸவிசேஷம் நிர்விசேஷம் என்பவைகளிலுள்ள விசேஷசப்தத்தின் அர்த்தத்தை இவ்விடத்தில் சற்று விசாரித்தால் நிர்விசேஷமான வஸ்து ப்ரமாணசூந்யமென்பது விளங்கும். ‘வெண்மையான வஸ்த்ரம்’ என்பதில் ‘வெண்மை’ என்பது தர்மம், ‘வஸ்த்ரம்’ என்பது தர்மி. இவ்விடத்தில் ‘வெண்மை’ என்பது கறுப்பு வஸ்த்ரத்திலிருந்து இந்த வஸ்த்ரத்தை வ்யாவ்ருத்திக்கிறபடியால், அது வ்யாவர்த்தகம் ஆகின்றது. அதாவது அது ஒரு விசேஷம் என்று சொன்னது ஆயிற்று. தர்மத்தால் தர்மி ஸவிசேஷமாவதற்கு இது உதாஹரணம். தர்மியால் தர்மமும் ஸவிசேஷமாகும். ‘வஸ்த்ரம்’ என்னும் தர்மி, தன்னை ஆச்ரயித்திருக்கும் ‘வெண்மை’ என்னும் தர்மத்தை மற்றொரு பொருளாகிற காகிதம் முதலானவற்றை ஆச்ரயித்திருக்கும் வெண்மையிலிருந்து வ்யாவ்ருத்திக்கிறபடியால், அந்தத் தர்மியும் வ்யாவர்த்தகமாக (அதாவது, விசேஷமாக) ஆகின்

வஸ்துநோ வஸ்த்வந்தரவ்யாவ்ருத்த விசேஷ நிஷேதபரதயா போதகா: ; இதரதா தேஷாமநவபோதகத்வமேவ ; ப்ரக்ருதி ப்ரத்யயயோகேந பத

---

தாகத் தென்படும் ஒரு வஸ்துவுக்கு மற்றொரு வஸ்துவில் தென்படும் வேறுவிசேஷங்கள் இல்லை' என்பதை மாத்ரம் போதிக்கின்றன. இல்லாவிடில் அவைகளுக்கு போதிக்கும் தன்மையே ஸம்பவியாமற் போய்விடும்; ஏனென்றால் ஸமஸ்த பதங்களுக்கும் ப்ரக்ருதி (பகுதி) ப்ரத்யயம் (விகுதி) இவைகளின் வழியாக அநேக விசேஷங்களைத் தோற்றுவிக்கும் தன்மை ஸம்பவிக்கின்றதன்றோ? ஸமஸ்த வாக்யங்களுக்கும் அநேக பதங்

---

றது. இவ்விதம் தர்மத்தால் தர்மி ஸவிசேஷமாகவும், தர்மியால் தர்மமும் ஸவிசேஷமாகவும் இருக்கின்றன. ஒவ்வொரு பதார்த்தமும் மற்றொன்றுக்குத் தர்மமாகவாவது தர்மியாகவாவது இருக்கவேண்டுமாதலால், ஸவிசேஷமாக அல்லாத வஸ்து (அதாவது—நிர்விசேஷமாக இருக்கும் வஸ்து) ப்ரமாண சூந்யமே ஆகுமன்றோ?

**நிர்விசேஷ வஸ்துவாதிபி:**—'நிர்விசேஷமாக ஒரு வஸ்து உண்டு என்பதற்குச் சப்தம் ப்ரமாணமாக மாட்டாது என்று சொல்லக்கூடுமோ? 'நிர்விசேஷம்' என்னும் சப்தமே அதற்கு ப்ரமாணமாகாதோ?' என்னில், அது ப்ரமாணமாக மாட்டாது என்கிறார். 'நிர்விசேஷம்' என்பதற்குச் 'சிற்சில விசேஷங்களற்ற' என்று பொருள் கொள்வதே ந்யாயத்திற்கு ஒத்ததாகும். ஏனென்றால், 'நிர்விசேஷம்' என்னும் சப்தம் ஒரு ப்ரத்யயத்துடன் கூடியதாகவும் மற்றொரு பதத்துடன் சேர்ந்துமன்றோ அர்த்தத்தைப் போதிப்பிக்கின்றது? ஆகையால், அந்த ப்ரத்யயம் அந்த மற்றொரு பதத்துடன் சேர்க்கை இவைகளால் ஏற்படும் விசேஷங்களுடன் கூடியதாகவே அதன் போதநம் இருக்கவேண்டுமே தவிர, 'எவ்வித விசேஷமும் அற்றது' என்பது அதன் போதநமாக மாட்டாது. ஆகையால், 'நிர்விசேஷம்' முதலிய சப்தங்கள் சிற்சில விசேஷங்களை மாத்ரம் நிஷேதிக்கின்றன, ஸகல விசேஷங்களையும் நிஷேதிக்கமாட்டா என்றே நாம் க்ரஹிக்கவேண்டும். தவிரவும், கீழ்ச் சொல்லியபடி தர்மம் தர்மி எல்லாம் வ்யாவர்த்தகமாகக் கூடுமாகையால், நிர்விசேஷ சப்தம் ஸமஸ்த விசேஷ நிஷேதபரம் என்று சொல்லும் பக்ஷத்தில், தர்மியாக இருக்கும் ப்ரஹ்மமும் நிஷித்தமாகிவிடுமன்றோ? [அதாவது—நிர்விசேஷம் என்பது ஸமஸ்த விசேஷங்களையும் நிஷேதிக்கின்றது என்றால், ஸமஸ்த வ்யாவர்த்தகங்களையும் நிஷேதிக்கின்றது என்று சொன்னதாயிற்று. ப்ரஹ்மமும் தன்னைத் தவிர்த்த மற்றவைகளைக் குறித்து வ்யாவர்த்தக மாகையால் அதுவும் நிஷேதிக்கப்பட்டதாகிவிடும்.]

**இதரதா தேஷாமநவபோதகத்வமேவ**—நிர்விசேஷம் என்னும் சப்தத்திற்கும் அதைப் போன்ற மற்றைச் சப்தங்களுக்கும் கீழ்ச் சொல்லியபடி சிற்சில விசேஷ நிஷேதபரமாக அர்த்தம் செய்யாமல், 'எவ்வித விசேஷமுமற்ற' என்று அர்த்தம் செய்யும் பக்ஷத்தில், அவை ஒன்றையும் போதிக்காமலே நின்றுவிடும்படி ஸம்பவிக்கும்; ஏனென்றால், ப்ரக்ருதி ப்ரத்யயங்களுடன் கூடிய பதங்களுக்கு அவைகளின்



ஸ்யைவாநேக விசேஷ கர்ப்பிதத்வாத், அநேக பதார்த்த ஸம்ஸர்க்க போதகத்வாச்ச வாக்யஸ்ய ।

அத ஸ்யாத், நாஸ்மாபி: நிர்விசேஷே ஸ்வயம்ப்ரகாசே வஸ்துநி சப்த: ப்ரமாணமித்யுச்யதே, ஸ்வத: ஸித்தஸ்ய ப்ரமாணாநபேக்ஷத்வாத் ; ஸர்வை: சப்தை: ஸ்வாரோபித விசேஷா: ஜ்ஞாத்ருத்வாதய: ஸர்வே

---

களின் அர்த்தங்களுடைய சேர்க்கையின் வழியாகவே போதிக்கும் தன்மை ஸம்பவிக்கின்றதன்றோ?

**அத ஸ்யாத்............உச்யதே**—'நிர்விசேஷமான ஒரு ஸ்வயம் ப்ரகாச வஸ்து உண்டு என்பதற்குச் சப்தம் ப்ரமாணமென்று நாங்கள் சொல்லவில்லை; ஏனென்றால், ஸ்வயமாகவே ப்ரகாசிக்கும் ஒரு வஸ்துவுக்கு எவ்வித ப்ரமாணமும் அநபேக்ஷிதம். ஸகல சப்தங்களும், நிர்த்தேசிக்கப்படும் வஸ்துவின் மீது தங்களால் ஆரோபிக்கப்படுகின்ற ஜ்ஞாத்ருத்வம் முதலான விசேஷங்களெல்லாவற்றையும் விலக்குகின்றன; ஸகலமான

---

அர்த்த பேதத்தால் ஏற்படும் விசேஷங்களைப் போதிக்காமல் இருப்பது ஸாத்யமில்லையன்றோ?

**பதஸ்யைவ**—பதமே அநேக விசேஷ கர்ப்பிதமாக இருந்தால், அந்தப் பதங்களின் ஸங்காதத்தால் உண்டாகும் வாக்யம் விசேஷ கர்ப்பிதமாக இருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? என்பதுதான் 'ஏவ' என்னும் அவதாரணத்தின் கருத்து.

**அத ஸ்யாத்**—இவ்வாறு நிர்விசேஷ வஸ்துவுக்கு நிஷ்ப்ரமாணத்வத்தை நிரூபித்து விட்டு, 'ஸ்வயம் ப்ரகாசமாயுள்ள வஸ்துவுக்கு ப்ரமாணம் என்பதே அநபேக்ஷிதமன்றோ? அந்தக் காரணத்தால் கீழ்ச் செய்யப்பட்டுள்ள நிரூபணம் வ்யர்த்தம்' என்று சங்கிக்கிறார். இவ்விடத்தில் பூர்வபக்ஷி சொல்வதாவது—'ப்ரஹ்மம் என்பது ஸ்வதஸ்ஸித்தமான வஸ்து; ஆகையால், அதை ஸாதிக்க ப்ரமாண மொன்றும் வேண்டுவதில்லை. அப்படிச் சொன்னால் ப்ரஹ்மத்தை ஸாதிக்கும் வேதாந்த சாஸ்த்ரம் வ்யர்த்தமாகி விடுமோ வென்னில், அது வ்யர்த்தமாகாது. ஏனென்றால், வேதாந்த சப்தங்களெல்லாம், அந்த ப்ரஹ்மத்தினிடத்தில் ஆரோபிக்கப்படும் விசேஷங்களை நிரஸிப்பதில் ப்ரயோஜந மடைகிறபடியால், அந்த வேதாந்த சாஸ்த்ரம் ஸப்ரயோஜநமாகிறது. அப்படி விசேஷங்களெல்லாம் நிரஸிக்கப்பட்டுப் போய்விட்டால், கேவலம் நிர்விசேஷமாகவும் ஸ்வயம் ப்ரகாசமாகவும் ப்ரஹ்மம் எவ்வித ப்ரமாணத்தையும் அபேக்ஷியாமலே நிற்கும்' என்பது தான்.

நிரஸ்யந்தே ; ஸர்வேஷு விஶேஷேஷு நிவ்ருத்தேஷு வஸ்துமாத்ரம் அநவச்சிந்நம் ஸ்வயம்ப்ரகாஶம் ஸ்வத ஏவாவதிஷ்டத இதி । நைததேவம் । கேந ஶப்தேந தத்வஸ்து நிர்திஶ்ய தத்கதா விஶேஷா நிரஸ்யந்தே ? ஜ்ஞ

---

விசேஷங்களும் இம்மாதிரி நிவ்ருத்திப்பிக்கப்பட்டுப் போய்விட்டால், கேவலம் ஒரு வஸ்து மாத்ரம் 'எவ்வித விசேஷங்களாலும் குறிக்கப்படாமலும் ஸ்வயம் ப்ரகாசமாகவும் மற்றை எவ்வித ப்ரமாணத்தையும் சார்ந்திராமலும் நிற்குமன்றோ?' என்று சொல்லலாமோ வென்னில், அதுவும் அப்படியன்று. ஒரு வஸ்துவிலிருந்து விசேஷங்களை விலக்கவேண்டுமானால், அந்த வஸ்துவை ஒரு சப்தத்தால் நிர்த்தேசித்தே அவ்விசேஷங்களை விலக்கவேண்டுமன்றோ? ப்ரக்ருதத்தில் ப்ரஹ்மமாகிற வஸ்துவை என்ன சப்தத்தால் நிர்த்தேசித்து அதிலுள்ள விசேஷங்களை விலக்குகிறீர்கள்? கேவலம் ஜ்ஞப்தி

---

'தத்கதா விஶேஷா:'—என்பதற்கு அதில் ஆரோபிக்கப்படும விசேஷங்கள் என்பது பொருள்.

'அநவச்சிந்நம்'—எவ்வித அவச்சேதகமும் இல்லாமல்; அதாவது—நிர்விசேஷமாய்.

நைததேவம்—இது முதல், கீழ்க் கூறப்பட்டுள்ள பூர்வபக்ஷத்திற்கு ஸமாதாநம் சொல்லப்படுகிறது. ஸமாதாநமாவது—வேதாந்த சப்தங்களெல்லாம் ப்ரஹ்மத்தின் மீது ஆரோபிக்கப்படும் விசேஷங்களை நிரஸிக்கும்பொழுது, ப்ரஹ்மத்தை ஒரு சப்தத்தால் நிர்த்தேசித்தே விசேஷங்களை நிரஸிக்கவேண்டும். அப்படி நிர்த்தேசிக்காமல் ஸாமாந்யமாக விசேஷங்களை நிரஸிக்க ப்ரவ்ருத்தித்தால், ப்ரஹ்மமும் கீழில் உபபாதித்திருக்கிறபடி ஒரு விசேஷமாகிறபடியால், அதுவும் நிரஸிதமாகிவிடும். அது அநிஷ்டம். 'ஒரு சப்தத்தால் நிர்த்தேசித்தே, விசேஷங்கள் நிஷேதிக்கப்படுகின்றன' என்று சொல்லும் பக்ஷத்தில், எந்தச் சப்தத்தைக் கொண்டு ப்ரஹ்மம் நிர்த்தேசிக்கப் படுகின்றதோ, அந்தச் சப்தத்தால் சொல்லப்படும் விசேஷங்கள் அநிஷித்தங்களாகவே நிற்கும். ஆகையால் ப்ரஹ்மத்தை எவ்வித விசேஷமு மற்றது என்று சொல்ல ஸாத்யப் படமாட்டாது. தவிரவும், ப்ரஹ்மத்திற்கு ஸ்வயம்ப்ரகாசத்தன்மையும், அது ஸவிசேஷமாக இருப்பதினாலேயே ஏற்பட வேண்டும். எந்த வஸ்துவானது தனது ப்ரகாசத்தால் தன்னைத் தவிர்த்த மற்றை வஸ்துக்களுக்கும் வ்யவஹார யோக்யதையைக் கொடுக்கின்றதோ அது ஸ்வயம்ப்ரகாசம் என்று சொல்லப்படும். அப்படி மற்றை வஸ்துக்களுடைய வ்யவஹாரத்திற்கு ஹேதுவாயுள்ள ஸ்வயம்ப்ரகாசத் தன்மையை உடைய பொருள் விசேஷங்களுடன் கூடியதாகவே இருத்தல் வேண்டுமன்றோ? ஆகையால், நிர்விசேஷத் தன்மைக்கு ஸ்வயம்ப்ரகாசத்வம் உபபந்நமாக மாட்டாது. ஸவிசேஷத்தன்மைக்கே அது உபபந்நமாகும் ; இதுதான் ஸமாதாநம்.



ப்திமாத்ர ஶப்தேந இதி சேத் ; ஸோऽபி ஸவிஶேஷமேவ வஸ்த்வப்யுபைதி, ப்ரக்ருதி ப்ரத்யயரூபேண விஶேஷகர்பத்வாத் । "ஜ்ஞா அவபோதநே" இதி ஸகர்மக: ஸகர்த்ருக: க்ரியாவிஶேஷ: க்ரியாந்தர வ்யாவர்த்தக ஸ்வபாவ விஶேஷஶ்ச ப்ரக்ருத்யா அவகம்யதே ; ப்ரத்யயேந லிங்கஸங்க்யாதய: । ஸ்வத: ஸித்தாவப்யேதத் ஸ்வபாவவிஶேஷ விர

---

(ஜ்ஞாநம்) என்னும் சப்தத்தால் அதை நிர்த்தேசிக்கிறோம் என்று சொன்னால், அந்தச் சப்தமும் (கீழ்ச்சொல்லியபடி) தனது ப்ரக்ருதி ப்ரத்யயம் இவைகளின் வழியாக விசேஷங்களைத் தோற்றுவிக்கிறபடியால் விசேஷத்துடன் கூடிய வஸ்துவை அவலம்பித்தே நிற்கும். 'ஜ்ஞப்தி' என்னும் பதம் 'ஜ்ஞா' என்னும் தாதுவிலிருந்து நிஷ்பந்நம் ; அந்தத் தாதுவுக்குப் போதிப்பது என்பது பொருள். ஆகையால், அதன் ப்ரக்ருதி (பகுதி) யினுடைய அர்த்தத்தின் வழியாக, ஒரு கர்த்தாவுடன் கூடியதும் ஒரு கர்மாவுடன் கூடியதுமான ஒரு க்ரியா விசேஷமும் வேறொரு க்ரியையை வ்யாவ்ருத்

---

ஜ்ஞப்திமாத்ர ஶப்தேந—ப்ரஹ்மம் அநேக சப்தங்களால் நிர்த்தேசிக்கப்பட்டிருக்கின்றது. அவைகளுள் ஒன்றான 'ஜ்ஞப்தி' (அதாவது—ஜ்ஞாநம்) என்னும் சப்தத்தை எடுத்துக்கொண்டு இவ்விடத்தில் விஷயம் உபபாதநம் செய்யப்படுகின்றது. இந்தச் சப்தத்தின் ப்ராக்ருதி (அதாவது—பகுதி)க்கு அவபோதநம் 'அறிகிறது' என்பது பொருள் ஆகும். அந்த அறிகிறது என்பதானது ஒரு கர்த்தாவையும் கர்மாவையும் தழுவி நிற்கும் ஒரு க்ரியா விசேஷத்தை அறிவிக்கின்றது. தவிரவும், வேறொரு க்ரியையிலிருந்து வ்யாவ்ருத்திப்பிக்கும் ஸ்வபாவ விசேஷத்தையும் அது உடையது. ஆகையால் ப்ரக்ருதி ஸம்பந்தப்பட்ட வரையில் அந்தச் சப்தத்தால் நிர்த்தேசிக்கப்படும் வஸ்து, ஸவிசேஷமாகவே இருக்கவேண்டும் என்பது நிச்சிதம். இம்மாதிரியே ப்ரத்யயம் ஸம்பந்தப்பட்ட வரையிலும். ப்ரத்யயம் (அதாவது விகுதி) லிங்கத்தையும் குறிக்கும்; ஒருமை பன்மை என்பதையும் குறிக்கும். அவைகளும் விசேஷங்களே.

ப்ரத்யயேந லிங்க ஸங்க்யாதய:—'ஜ்ஞப்தி' என்பது ஒரு ஜடமான க்ரியையைக்குறிக்கிறபடியால், அதனுடன் சேர்க்கப்படும் ப்ரத்யயம் எவ்விதம் லிங்கத்தைப் போதிப்பிக்கும்? என்று ஒரு சங்கை ஜநிக்கக் கூடும். உண்மையாகவே ஜடமான க்ரியைக்கு லிங்கம் சொல்வது ஒவ்வாது. ஆனால் இவ்விடத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் 'ஜ்ஞப்தி' என்னும் சப்தம் போல, 'தேவன்' 'ஈச்வரன்' 'புருஷோத்தமன்' இத்யாதியான சப்தங்களும் ப்ரஹ்மத்தை நிர்த்தேசிக்கும் சப்தங்களாக எடுத்துக் கொள்ளத் தகுந்தவையாதலால், 'ப்ரத்யயம் லிங்கத்தைப் போதிக்கின்றது' என்று சொல்வது அநுபபந்நமாக மாட்டாது.

ஸ்வத:ஸித்தாவபி—ஸ்வதஸ்ஸித்தியைச் சொல்லும் விஷயத்திலும்,

ஹெ விஷிஷ்ரேவ ந வாஸ்தாக் । சுநஸ்யாயந ஸ்வஹாவதயா ஹி ஜூவ்தூ: ஸ்வது: விஷிஷ்ட அஸ்தெ ।

சுவி அ ஸ்ஹுஸ்வருவம் கூந்ஸம் ஸ்வஷா ஸ்ய ரெவ ஷுகாமதெ ரெஅக், ந தஸ்ஹீநாஷ யஉரயாஸ: ஸம்ஹவதி । ந ஹி ரஜ்ஜு ஸ்ரூ ரெவஉவஹாஸாரெத ஸ்வஷுகாசி ரயுஸ்ரெத । சுத ஊவ ஹி ஹவஷி

---

திக்கும் ஸ்வபாவ விசேஷமும் அதனல் போதிக்கப்படுகின்றது; அதன் ப்ரத்யயத்தை (விகுதியை)க் கொண்டு அதன் லிங்கமும் அதன் ஒருமை பன்மை பேதங்களும் குறிக்கப்படுகின்றன. ஸ்வயம் ப்ரகாசத்வ ஸித்தியும் கீழ்ச் சொல்லப்பட்டுள்ள ஸ்வபாவ விசேஷமின்றிக்கு ஏற்படமாட்டாது; ஏனென்றால், 'ஜ்ஞப்தி'க்கு ஸ்வதஸ்ஸித்தி என்பது மற்றொரு பொருளுக்கு ஸாதநமாக இருக்கும் ஸ்வபாவத்தால் ஏற்படுகின்றதன்றோ?

ஸ்ஹுஸ்வருவம்.........வஸ்துஸிஃ—தவிரவும், ப்ரஹ்ம ஸ்வரூபம் முழுவதும் எப்பொழுதும் ஸ்வயமாகவே ப்ரகாசித்துக்கொண்டிருக்கின்றது என்றால், அந்த ப்ரஹ்மஸ்வரூபத்தில் மற்றொரு பொருளுடைய தர்மத்தின் அத்யாஸமானது ஸம்பவிக்க மாட்டாது. கயிற்றின் ஸ்வரூபம் நன்றாக ப்ரகாசித்துக்கொண்டிருக்கும்பொழுது

---

ஸதஸ்வஹாவ விஶேஷவிரஹெ—கீழ்ச் சொல்லப்பட்டுள்ள ஸகர்மகத்வ ஸகர்த்ருகத்வங்களை த்யஜித்துவிட்டால்.

சுநஸ்யாயந ஸ்வஹாவதயா—'சுநஸ்' என்றால் வேறொரு பொருள். அதன் ஸாயந ஸ்வஹாவ: என்றால் அதை வ்யவஹாரத்திற்கு யோக்யமாகச் செய்து கொடுக்கும் ஸ்வபாவம். அப்படிப்பட்ட ஸ்வபாவத்தைக் கொண்டேயன்றோ ஜ்ஞப்திக்கு ஸ்வதஸ் ஸித்தி சொல்லப்படுகின்றது; 'ஸ்வஸம்பஂயாக் சுயஉராஜரெ தஸ்வஹார ஹெதஃவம் ஹி ஸ்வயம் ஷுகாமஃவாந உாநஹெதஃ:'

ஸ்ஹுஸ்வருவம்........ இவ்வாறு, ஸ்வயம் ப்ரகாசமாக இருக்கும் ஒரு வஸ்து நிர்விசேஷமாக இருக்கமாட்டாது என்பதை உபபாதித்து விட்டு, இப்பொழுது, 'வஸ்துவின் ஸ்வரூபத்தை மறைக்கும் குணத்தை யுடைய அவித்யையின் நிவ்ருத்தி ஸவிசேஷமாயுள்ள வஸ்துவுக்கே உபபந்நமாகும், நிர்விசேஷமாயுள்ள வஸ்துவுக்கு அது உபபந்நமாகாது' என்பதை நிரூபிக்கிறார். 'ப்ரஹ்மம் என்பது கேவலம் ஜ்ஞாந ஸ்வரூபம், ஸ்வயம் ப்ரகாசம், நிர்விசேஷம்; அது ஒன்றுதான் உண்மையாக இருக்கின்றது; அவித்யை என்னப்படும் ஒரு வஸ்து அதை மறைக்கின்றது; அப்படி மறைக்கப்பட்டதாய்க் கொண்டு, அந்த ப்ரஹ்மம் ஜகத் முதலான பற்பல வஸ்துக்களைப் பார்ப்பதாக ப்ர



உரஜஸ்யாநாதெ ரவரிஹரணீயஸ்ய ஊஹதா
நிஹீநாசாரொஉஹம் நரவஶ ரஶஹஸ்யாஸ்ஷஉவி ।

---

யாத ஶதயா விநாஶம்—உருமாய்ந்து போகவேண்டும். அடிமைக்குப் புறம்பானவை அஸஹ்யமானாலும் போக்குகை ஈச்வர க்ருத்யம்; அநுகூலங்கள் ஆதரணீயமானாலும் உண்டாக்குகை ஈச்வர க்ருத்யம்.

தத்ஸத்யம்—இது லோகத்திலே கேட்டறிவதொன்றன்று, மெய்யாகக் கூடுமோ வென்ன; இது அஹ்ருதயமாகச் சொன்னதன்று, மெய்.

உயஉயந—திருமுன்பே பொய் சொன்னேனாகில் உமக்குப் பொய்யனான மது பட்டது படுகிறேன். சேஷத்வத்துக்குப் புறம்பானவற்றை மதுவைப் போக்கினாப் போலே போக்கி யருளவேணு மென்னவுமாம்.

ஊஉம் விஜ்ஞாவநம் தத்ஸத்யம்—ப்ராப்யாபேக்ஷையில் குறையுண்டாகிலும் விரோதி வர்க்கத்தில் அருசியில் பொய்யில்லை.

(58) நிக்ரஹ ஹேதுவான பகவதபசாராத்யசுபங்கள் ஸஞ்சரிக்கிற ஸம்ஸாரத்திலே கைங்கர்ய விரோதிகள் அஸஹ்யமாம்படி அதிலே அருசி பிறந்ததைப் போக்கித் தந்தருள வேண்டுமென்று, யோகிகளுக்குத் தூர்லபமான இதை அபேக்ஷிப்பார் உண்டாவதே என்ன, அவதியில்லாத அசுபங்களையும் போக்கவல்ல தேவருடைய அபரிச்சிந்ந குணங்களை நினைத்திருந்து அபேக்ஷிக்கிறேன் என்கிறார்.

உரஜஸ்ய—முடிவின்றிக்கே இருக்கும்; அசுபம் ப்ராயச்சித்தத்தால் ஆதல் அநுபவத்தால் ஆதல் உத்தரகோடி காணவொண்ணா திருக்கை; தூர்விபாகமாய் இருக்கும தென்னவுமாம். உதர்க்கத்தில் நரக கர்ப்ப வாஸங்கள் பலிக்கை.

சுவரிஹரணீயஸ்ய—ஸர்வசக்தியான தேவருக்கும் பிற்காலிக்கும் படியாய் இருக்கை.

ஊஹத:—ஸங்க்யாவதிரஹிதமாய் இருக்கை. காலதத்வ முள்ளதனையும் அநுபவியா நின்றாலும் அவதி காணவொண்ணா திருக்கை. இப்படிப்பட்ட அசுபத்திற்குத் தொகை அன்றிக்கே இருக்கை. 'யத்ஸஹஸ்ரகஸ்ரியதாந ஹவெஉவஸ் நாஶம்!' அணுபரிமாணனான சேதநன் இவற்றை யெல்லாம் செய்தானென்று விஸ்மயப்படும்படி இருக்கை. 'சீலமில்லாச் சிறியன்.' .....

உயாஸிம்யொ ! பந்யொ ! நிரவயிகவாத்ஸல்ஹ்ய ஜலயெ !
தவ ஷீலம் ஷீலம் குணகண இதி த்யாத்வா கதபீ: ॥ 58

---

நிஹீநாசாரோஹம்—அஹம்புத்தி போத்யமான தர்மிஸ்வரூபம் அதர்மாசார நிரூபகமா யிருக்கை. ஆசாரமாகிறது, விலக்ஷண தர்மத்திலே இழிகைக்கு யோக்யதா பாதகங்களான ஸந்த்யாவந்தநாதிகள். பாபாநுஷ்டாநத்துக்கு யோக்யனென்கை.

நரபஷு:—சதுஷ்பாத்துக்களில்காட்டில் த்விபாத்தே விசேஷமென்கை. 'ஜ்ஞாநேந ஹீந: பஷுபி: ஸமாந:' சாஸ்த்ர வச்ய ஜந்மமாகையாலே பசுவென்ன வொண்ணுது. ஆஹார நித்ரா பயாதிகளிலே நியதி யில்லாமையாலே மநுஷ்ய னென்ன வொண்ணுது. இரண்டு ஜந்மங்களையும் தப்பினே னென்கை.

அஷுபஸ்யாஸ்பதம்—அசுபமாகிறது சுபவிரோதி. சுபமாகிறது புருஷார்த்தம். தத்விரோதிக் கெல்லாம் ஆச்ரயம். அக்ருத்யகரணம் முதலாக அஸஹ்யாபசாரம் முடிவானவற்றிற்கு ஆகாரமாயிருக்கை. தேவர் குணுநாமாகர மானுப் போலே, நான் அசுபாநாமா கரமென்கை.

அபி—இப்படிப்பட்டவனுய் இருக்கச் செய்தேயும் 'க்ஷணமபி ஸஹெ யாதும் ஷதயா விநாஷம்' என்று அபேக்ஷிக்கைக்கும் ஒருவழி உண்டு. அது என்னென்னில்.—

உயாஸிம்யொ!—கீழ்ச் சொன்ன அசுப ஸாகர மெல்லாம் தேவருடைய தயார்ணவத்திலே ஒரு குளப்படி யன்றோ? 'வயாஹமபி காகுத்ஸ்த: க்ருபயா பர்யபாலயத்', 'வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருஷம் பவதி து:கித:', 'யதி வா ராவண: ஸ்வயம்', 'மத்பா நஜாநாமி'.

பந்யொ !—ஆச்ரிதருடைய இழவு பேறு தன்னதாம்படியான நிருபாதிக ஸம்பந்தம் சொல்லுகிறது. 'அஹம் வொ பாந்தவொ ஜாத:', க்ருத க்ருத்யஸ்ஸ்தா ராம:,' 'ஸேநம் ப்ரவ்ரஜிதஸ்ய மெ', 'உரஸா யாரயாமாஸ பாஹும் ஸம்ஹாத்ய மாயவ:', 'மம ப்ராணாஹி பாண்டவா:'

நிரவயிக வாத்ஸல்ய ஜலயெ:—வாத்ஸல்யமாகிறது—அன்றீன்ற கன்றின்பக்கல் தோஷம் தாய்க்குப் போக்யமாயிருக்கு மாப்போலே ஆச்ரித தோஷம் போக்யமாயிருக்கை. க்ருபா ஸமுத்ரத்துக்குக் கரை உண்டாகிலும் வாத்ஸல்ய ஸாகரத்துக்குக் கரையில்லை யென்கை. 'ஷரணாமத



அநிச்சந்நப்யெவம் யதி புநரிதீச்சந்நிவ ரஜ
ஸ்தமச்சந்நச்சத்மஸ்துதிவசநபங்கீ மரசயம் ।

---

வத்ஸல:', 'ஷிவஸ்யாபி வத்ஸல:', 'தொஷொ யத்யபி தஸ்ய ஸ்யாத்',, அபி கிம்சித்ஸமாவஜெ கிம்காயம் ஸீதயா மம', 'அவஷ்யம் ஜீவிதம் ஜஹ்யாம்'.

தவ குணகணம் ஷீலம் ஷீலம்—ஷ்ருத்வா ஷ்ருத்வா "குணாநாகரொமஹாந்", "யஷா ரத்நாநி ஜலயெ:"

இதி த்யாத்வா கதபீ:—அசுபாஸ்பதமான என்னை நினைத்து அஞ்சாதே, தேவர் குண கணத்தை நினைத்து 'ந தெஹம் ந ப்ராணாந்' என்கிறபடியே இச்சியா நின்றேன்.

(59) அநிச்சந்நிதி—'இச்சாமி' என்கிற இச்சைதான் ஸத்யமோ என்ன. மந்தபுத்யா நான் விஷயாநுரூபமான இச்சை உண்டென்று திருமுன்பே விண்ணப்பம் செய்யப்போகாது. இச்சாஸூசகமான வசநத்தை அவலம்பித்து மெய்யாம்படி என்னுடைய மநஸ்ஸை சிக்ஷித்தருள வேண்டும் என்கிறார்.

அநிச்சந்நபி—உக்தமான ப்ரகாரத்துக்கு அநுரூபமான இச்சை யன்றிக்கே இருந்ததாகிலும், நாஸ்திகர் அல்லாமையாலே இச்சையில்லை என்னமாட்டார். பேற்றுக்கு அநுரூபமான இச்சை பெறுமையாலே உண்டென்னமாட்டார்.

யதிபுநரிதீச்சந்நிவ—மெய்யான இச்சையுடையார் சொல்லுமாப் போலே.

சத்மஸ்துதிவசந பங்கீ மரசயம்—க்ருத்ரிம ஸ்துதி வசநம் மெய்யென்று ப்ரமிக்கும்படி பண்ணினேன். \வசநப்ரகாரத்தைப் பார்த்தால் ஸர்வஜ்ஞான தேவரும் மெய்யென்று ப்ரமிக்கும்படி சொன்னேன். 'பொய்யே கைம்மை சொல்லி' என்னுமாப்போலே ஹேது வென் என்ன.

ரஜஸ்தமச்சந்ந:—அந்யதாஜ்ஞாந விபரீதஜ்ஞாந ஹேதுவான ரஜஸ் தமஸ்ஸுக்களாலே அநாதி காலமாக மறைக்கப்பட்ட. ஸ்வஸ்வரூப பரஸ்வரூபங்களை மறைத்துப் போந்தது ரஜஸ்தமோ த்வாரத்தாலே யிறே.

தயாபி—இப்படி த்யாஜ்யமாக வேண்டும் செயலைச் செய்தேனுகிலும், 'யாயா தயைவநஷ்டிதம்' என்கிறபடியே ஸர்வஜ்ஞ ஸகாசத்திலே மெய் சொல்லிப் பிழைக்க வேண்டியிருக்க, அங்கே பொய் பற்றினல் த்யாஜ்யனிறே.

தயாவீதம் ரூவம் வஅநசவழுஂஸ்யாவி கூரவயா
கவசெவெவஂஹூதம் யாரணியார ! செ ஶிக்ஷய உநஃ ॥ 59

உதஂரூவம் வஅநசவழுஂஸவ்ய—‘ந செஹளு வ்ராணாஞு’, ‘ஓபா ஸீஂயொ ஬ஂயொ’ என்கிற வசந மாத்ரத்தையே பற்றுசாகக் கொண்டு ‘மாதவ னென்றதே கொண்டு’ என்று, ‘திருமாலிருஞ் சோலை யென்றே னென்ன திருமால் வந்தென் னெஞ்சு நிறைபப் புகுந்தான்’ என்னும் உக்தி மாத்ரமே ஜீவிகையாம் விஷயமிறே.

கூரவயா—‘வயாஹஉ’ என்கிறபடியே தோஷத்தில் அவிஜ்ஞாதா வாயிற்று க்ருபா பாரதந்த்ர்யத்தாலே.

ஹவஂஹூதம் செ உநஃ கவசெவ ஶிக்ஷய—சத்ம ஸ்துதிக்கு உபகரணமான மநஸ்ஸை அடிமை கொள்ளக்கடவ தேவரே அதுக்கு உபகரணமாம்படி சிக்ஷித்தருளவேண்டும். ‘தீமனங் கெடுத்தாய்’, ‘மருவித் தொழும் மனமே தந்தாய்’ என்கிறபடியே பாஹ்யமான மநஸ்ஸைத் தவிர்த்து அடிமைக்கு அநுகூலமான மநஸ்ஸைத் தந்தருளவேணும். ‘மனனக மலமறக் கழுவி’ என்கிறபடியே மநோ நைர்மல்யம் போகத்தாலே பிறக்கக்கடவது. உபாஸகனுக்கு யோகஸ்தாநத்திலே பகவதநுக்ரஹமாயிற்ற அவ்வதிகாரிக்கு இருப்பது.

யாரணியார!—ரஸாதலகதையான பூமியை ஆபத்தே ஹேதுவாக உத்தரித்தவர் அல்லீரோ தேவர்? ‘ஏனமாய் நிலங்கீண்ட வென்னப்பனே’ என்றும், ‘பன்றியாய் அன்று பாரகங்கீண்ட பாழியான்’ என்றும் ஸம்பந்தமும் சக்தியும் உண்டு. இவனிடத்தில் இனி இச்சையே வேண்டுவது அதை உண்டாக்கி ரக்ஷித்தருளவேண்டும் என்கிறார்.

(60) விதா கவஶிதி—இச்சையுமின்றிக்கே இருக்க, உக்திமாத்ரத்தைக்கொண்டு இச்சையையும் உண்டாக்கி ரக்ஷித்தருள வேண்டுமென்கிறதென் என்ன. அவர்ஜநீய ஸம்பந்தத்தைச் சொல்லுகிறார்.

விதா கவஂ—உத்பாதகராய் ஹிதகாமராய் இருக்கிற தேவர்.

ஶாதா கவஂ—கர்ப்பதாரணம் பண்ணி, ப்ரஸவ க்லேசத்தை அநுபவித்து, அசுசிப்ரஸவங்களையும் மதியாதே இவன் ப்ரியஹிதமே அபேக்ஷித்திருக்கும் தாயைப்போலே பரிவுடையீர் தேவர். ‘விதாஉஹஸஷ்ய ஜநதஃ ஹூதாநாம் யொஉவஷ்யஃ விதா’, ‘தஞ்சமாகிய தந்தை தாய்.’



விதா கவஂ ஶாதா கவஂ ஓயிததநய ஸ்வஂ ப்ரியஸஹ்ரு
த்ஸவெவ கவஂ மித்ரஂ ஶுருருஸி மதிஸ்த்வாஸி ஜமதாழ ।
கவதீய ஸ்வஹூரத்ய ஸ்தவ வஸிஜந ஸ்வஹதி ரூஹஂ
ப்ரவஞ ஸெஷ்வம் ஸதுஹஉவி தவெவாஹ்ஷி ஹிஹாரஃ ॥ 60

ஓயிததநய ஸ்வஂ—அபிமதனும் நிரயநிஸ்தாரகனுமான புத்ரனைப்போலே நின்று ஸஹகரிப்பீர் தேவர். ‘நன்மக்களும் மேலாத் தாய் தந்தையுமவரே.’

ப்ரியஸஹ்ருத்ஸவெவ—ஸர்வ காலத்திலும் சோபநத்தையே பண்ணும் திருவுள்ளத்தை உடையராய் இருப்பீர் தேவரீர். அநர்த்தத்தைப் பண்ணிலும் விட வொண்ணாத அபிமத ஸுஹ்ருத்வம். அவதாரணம் ஸர்வத்திலும் அந்வயிக்கக் கடவது.

கவஂ மித்ரஂ—அர்ஜுநன் ஸுபத்ரையுடைய ஸ்வயம்வரத்தைத் தேவருக்கு அறிவித்து லபித்தாற்போலே அசேஷ ரஹஸ்யங்களையும் அறிவிக்கலாம்படி விச்வஸநீயராய் இருப்பீர் தேவரே.

ஶுருருஸி—‘ஶஞநா ஹவ உஹ்ஹக்ஃ’ என்றும், ‘ஶாமெகஂ ஶரணஂ வ்ரஜ’ என்றும் நின்ற நிலைகளிலே ஹிதோபதேசம் பண்ணும் ஆசார்யரும் தேவரே.

மதிஸ்த்வாஸி—புருஷார்த்தோபாய பூதரும் தேவரென்னுதல்; ‘மஞவ்ய கவாஉதிஃ’ என்று பரமப்ராப்யர் தேவரென்னுதல்.

ஜமதாழ—இந்த ஸம்பந்தம் தேவாதி ஸகல ப்ராணிகளுக்கும் ஸாதாரணம். உபய விபூதிக்கும் ஸாதாரணம் என்னவுமாம்.

கவதீயஃ—அந்த ஸாமாந்ய மொழிய தமக்கு உண்டான விசேஷ ப்ரதிபத்தியை அருளிச் செய்கிறார். ‘யஸஷ்ராஹ்மி’ என்கிறபடியே தேவருக்குச் சேஷபூதன்.

கவஹூரத்யஃ—தேவருக்கு அதிசயத்தை விளைத்து ஸ்வரூபம் பெறும் ஸம்பந்தத்தை உடையனென்கை. அதனாலே தேவருக்கு ஸ்ப்ருஹணீயன் என்னுதல்.

தவ வஸிஜநஃ—ஆத்ம தாஸ்யம் என்கிற நிருபாதிக தாஸபூதன் என்னுதல். ‘ஓாஸஹூதா ஸ்வத ஸ்வவெஉ ஹஷ்ாத்மாநஃ வாரஶாத்மநஃ’, ‘கஹஂ ஸவஉஂ கஸிஷ்யாஶி’ என்று ஸர்வ கைங்கர்யத்துக்கும் அர்ஹன்.

ஜநித்வாஹம் வம்ஶே மஹதி ஜகதி ப்ரக்யாதயஶஸாம்
ஶுசீநாம் யுக்தாநாம் குணபுருஷதத்த்வஸ்திதிவிதாம் ।

---

த்வத்கதி:—தேவரே ப்ராப்யபூதர் என்றிருக்கிறேன். 'அஹம் ப்ரபந்நஶ்ச'. ப்ராப்யம் பெறுகைக்குத் தேவரீர உபாயமாக அத்யவஸிக்கிறேன்.

ஏவம் ஸதி—தேவர் ஸர்வவித பந்துவுமாய், நான் அநந்யகதியான பின்பு.

அஹமபி—அஹ்ருதயோக்தன் ஆனாலும்.

தவைவ ஹி பரோऽஸ்மி—தேவருக்கே பரனாகிறேன். ஜ்ஞாந சக்தியாலும் ப்ராப்தியாலும் என் கார்யம் தேவருக்கே பரமென்கை. பரமாகையாவது:—ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ஸர்வ ப்ரகார நிர்வாஹ்யனாகை.

(61) ஜநித்வேதி—நீர் மஹாவம்ச ப்ரஸூதர் அல்லீரோ? நிராலம்பரைப் போலே இங்ஙன் சொல்லுகிறது என்? என்ன, இவ்வம்சத்திலே பிறந்தேனேயாகிலும் பாபப்ரசுரனாகையாலே ஸம்ஸாரத்தில் அழுந்தாநின்றேன்: எடுத்தருளவேண்டும் என்கிறார்.

மஹதி வம்ஶே அஹம் ஜநித்வா—வம்சத்துக்கு மஹத்தையாவது—மஹாத்மாக்கள் வந்து ஜநிக்கை. '[illegible]'. என்னும் வம்சத்திலே பிறந்து வைத்து அநர்த்தப்படாநின்றேன் என்கை.

ஜகதி ப்ரக்யாதயஶஸாம்—சதுஸ்ஸாகர பர்யந்தமான பூமியெல்லாம் ப்ரஸித்தமான புகழை யுடையவர்கள். "திகழுந்தண் திருவருள் செய்துலகத்தார் புகழும் புகழ் தானது காட்டித் தந்து" என்கிறபடியே பகவத் விஷயீகாரத்தால் வந்த புகழ்.

ஶுசீநாம்—பகவத் வ்யதிரிக்த விஷயங்களில் போக்யதா கந்த ரஹிதராய் இருக்கை. ஆந்தர பாஹ்யமான உபய சுசியைச் சொல்லவுமாம்.

இவ் வம்சத்திலே பிறந்த சுபாஸ்பதமென்னக் கடவீரோ? என்ன, யுக்தாநாம்—'க்ருத க்ருத்யா: ப்ரதீக்ஷந்தே' என்கிறபடியே நித்ய யோகத்தில் ஆகாங்க்ஷமாணராய் இருக்குமவர்கள். 'மாக வைகுந்தம் காண்பதற்கு என் மனமேக மெண்ணுவர்' என்றிருக்கை. இளைய பெருமாளைப் போலே



நிஸர்காதேவ த்வச்சரணகமலைகாந்தமநஸாம்
அதோऽத: பாபாத்மா ஶரணத! நிமஜ்ஜாமி தமஸி ॥ 61

அமர்யாத: க்ஷுத்ரஶ்சலமதிரஸூயாப்ரஸவபூ:
க்ருதக்நோ துர்மாநீ ஸ்மரபரவஶோ வஞ்சநபர: ।

---

தேவரோடே யல்லது செல்லாதவர்கள் என்னுதல். இப்படிப்பட்ட வம்சத்திலே பிறந்து இச்சை போராதென்னக் கடவீரோ? வென்ன, குணபுருஷதத்த்வஸ்திதிவிதாம்—சித சிதீச்வரர்களுடைய ஸ்வரூப ஸ்வபாவ ஸம்பந்தங்களை அறியுமவர்கள். குணமென்று குணாச்ரயமான ப்ரக்ருதியைச் சொல்லுகிறது. ஸ்திதியாவது ஸ்வரூப ஸ்வபாவாதிகள்.

நிஸர்காதேவ—வத்ஸமானது ஜநித்தபோதே தாய் முலையிலே வாய் வைக்குமாப்போலே, த்வச்சரணாரவிந்தங்களிலே ஏகாந்தமான மநஸ்ஸை ஜந்ம ப்ரப்ருதியாக உடையவர்கள். கீழ்ச்சொன்ன சுசியோகாதிகள் நைஸர்க்கிகமென்கை.

பாபாத்மா—பாபம் தான் ஒரு வடிவம் கொண்டாப்போலே இருக்குமவன். ஜ்ஞாநாநந்த மொழிய பாபமே நிரூபகமாயிருக்கை,

ஶரணத—இவ்வளவிலும் உன் பக்கலிலே அபகாரம் உண்டாம்படி ஆள் பார்த்துழி தருந்தேவரீரே.

தமஸி அதோऽத: நிமஜ்ஜாமி—ப்ரக்ருதியிலே தேவர் எடுக்க நினைத்தாலும் கைக்கெட்டாதபடி ஆழநின்றேன். 'பன்மாமாயப் பல்பிறவியிற் படிகின்ற யான்' என்கிறபடியே இன்னும் தரை கண்டிலேன் என்கிறார். இத்தால் ஸாந்தானிகர் தேவர் பக்கல் அவகாஹித்தளவும் நான் ப்ரக்ருதியிலே உள்புக்கேன் என்கை. ஜநித்த வம்சம் இது, தேவர் சரண்யர், நான் படுகிறபாடு இதுவிறே. அஸமஞ்ஜஸனைப்போலே வம்ச ப்ரபாவமும் ஜீவியாதே, தேவருடைய நீர்மையும் ஜீவியாதே யிருக்கிறபடியிறே என்னுடைய பாப ப்ராசுர்யம்.

(62) அமர்யாத:—இவ்வம்சத்தில் ஜந்மத்தையும் அஸத்ஸமமாக்கவல்ல பாபம் உமக்கேதென்ன; பாபாத்மா என்கிறத்தைப் பரக்கப் பேசுகிறார்.

ந்ருசம்ஸ: பாபிஷ்ட: கதமஹமிதோ து:கஜலதே
ரபாராது உத்தீர்ணஸ்தவ பரிசரேயம் சரணயோ: 62

அமர்யாத:—வேதமர்யாதைக்குப் பஹிர்ப்பூதன்.

க்ஷுத்ர:—க்ஷுத்ரத்வமாவது நீச விஷயங்களில் அதிசபலன். உஜ்ஜீவநஹேதுவான வேதமர்யாதையை அநாதரித்து, அதுக்கு மேலே விநாசஹேதுவான நீச வேலையிலே அதிசபலன்.

சலமதி:—நீச விஷய ப்ராவண்யம் ஸஹேது; வேதப்ரதிபாத்ய விஷயமே உத்தேச்யமென்று ஒரு ஜ்ஞாநாதிகன் ஹிதம் சொன்னால் அதில் வ்யவஸ்தித சித்தனல்லேன்.

அஸூயா ப்ரஸவபூ:—பரகுணங்களிலே தோஷத்தை உண்டாக்குகைக்கு உத்பத்தி ஸ்தாநம். தனக்குத் தோஷமுண்டாமளவன்றிக்கே பிறர் குணங்களிலும் தோஷத்தை உண்டாக்குமவன் என்கை.

க்ருதக்ந:—உபகரித்த விஷயத்திலே அபகாரத்தைப் பண்ணுகை. 'ப்ரஹ்மக்நே ச ஸுராபே ச சோரே பக்நவ்ரதே ததா । நிஷ்க்ருதிர் விஹிதா ஸத்பி: க்ருதக்நே நாஸ்தி நிஷ்க்ருதி: ।' மாத்ரு பித்ரு சதத்திலும் வத்ஸலதரமான சாஸ்த்ரத்திலும் பஹிஷ்க்ருதன் என்கை.

துர்மாநீ—இப்படி நிக்ருஷ்டனாயிருக்கச் செய்தேயும் ஸர்வோத்க்ருஷ்டருக்கு அவ்வருகாகத் தன்னை நினைத்து 'ஸாதுஜநோஹம்' என்று இருக்குமவன்.

ஸ்மரபரவச:—தன்னை உத்க்ருஷ்டாத்மாக்களுக்கும் மேலாக நினைத்திருக்கிற அளவன்றிக்கே, விஷய ப்ராவண்ய ஹேதுவான காமனுக்கும் பரதந்த்ரனாகவும் பகவத் ப்ராவண்ய ஹேது பூதனானவனைத் தாழ நினைத்தும் அநர்த்தப்பட்டேன் என்கை.

வஞ்சநபர:—காமபாரவச்யத்தாலே விஷயங்களிலே ப்ரவணனும் அவ்விஷயங்களிலும் த்ரவ்யங்களை வஞ்சித்து வர்த்திக்குமவன். "சூதனாய்க் கள்வனாகி", "குதிரைப்பெருக்கிக் கவியினைத் துணிந்து" என்றும் சொல்லுகிறபடியே.

186726

# உம்மிடி ராமய்யா செட்டி குருசாமி செட்டி கம்பெனி

## நகை வர்த்தகர்கள்.





தொழிற்சாலை.

62, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை

காட்சி அறை.

25, சைனாபஜார் ரோட், மதராஸ்.

## நம்பிக்கை.

நகைகள் நாணயமாகவும், நம்பிக்கையாகவும் செய்து கொடுக்கப்படும். தேவையில்லாத நகைகள் 8 நாட்களுக்குட்பட்டுக் கொண்டுவந்தால் பூராப் பணமும் திருப்பிக் கொடுக்கப்படும். சவரன் பொன்னுக்கும் சுத்த வெள்ளிக்கும் கியாரண்டி கொடுக்கப்படும். ஒரு முறை எங்களிடம் வாங்கியவர்களுக்கு அதன் உண்மை தெரியவரும்.



காட்லாக்குக்கு எழுதுங்கள்.



விற்பனைக்குத் தயார்.

## ஸம்ப்ரதாய புத்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ ஸச் சரித்திர ரக்ஷை (தமிழ் வியாக்கியானத்துடன்) | 0 | 14 | 0 |
| ஸ்ரீ பரமபதஸோபானம் (தமிழ் வியாக்கியானத்துடன்) | 0 | 8 | 0 |
| ஸ்ரீரகஸ்யத்ரயஸார ஸங்கிரஹம் (தமிழ் வியாக்கியானத்துடன்.) | 0 | 8 | 0 |
| நம்மாழ்வார் வைபவம் | 0 | 4 | 0 |

இப்புத்தகங்கள் வேண்டியவர்கள் கீழ்க்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்.

கார்யதர்சி, ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை,
திருவல்லிக்கேணி, சென்னை.

உங்கள் ஆரோக்யத்திற்குற்ற தோழன்

# அமிருதாஞ்சனம்.

கீழ்க்கண்ட வியாதிகளுக்கு ஆச்சர்ய நிவாரணி.

தலைவலி
நரம்புவலி
முதுகுவலி
இடுப்புவலி
கீல்வாயுவு




இருமல்
ஜளிப்பு
நெருப்புக்காயம்
காயங்கள்
சுளுக்குகள்

மற்றுமுள்ள வலிகளுக்கும் நோவுகளுக்கும்.

பம்பாய் அமிருதாஞ்சனம் டிபோ, மதராஸ்.

இது, சென்னை சுதேசமித்திரன் பிராஞ்சு அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு,
சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை கார்யதர்சியால் வெளியிடப்படுவது.